உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2034 மார்கழி 13 ஞாயிற்றுக்கிழமை (28-12-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:32

### பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்ற பின்னர்

# செஞ்சிலுவைக் குழு-புலிகள் இடையில் நிர்வாக ஒழுங்கு முறைகளில் மாற்றம்

## சமாதானச் செயலகங்களுக்கு மத்தியிலேயே இனித் தொடர்பு

யாழ்ப்பாணம்,டிசெம்பர்28

**பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்ற பின்னர் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நிர்வாக ஒழுங்குமுறை மாற்றப்பட்டுள்ளது.**

**நிர்வாக ஒழுங்கு தொடர்பாக விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகம் அரசின் சமாதானச் செயலகத்துடனேயே தொடர்புகளை வைத்திருக்கவேண்டும் என்ற புதியநடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளது. இதுகுறித்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு புலிகளுக்கு அறிவித்துள்ளதாகத் தெரிகிறது.**

ஏ-9 பாதையில் பயணிகள் போக்குவரத்து நேரத்தை அதிகரிப்பது உட்பட நிர்வாக ஒழுங்கு தொடர்பான விடயங்களும் அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தகவல்களைப் பரிமாறி அதற்கான தீர்வுகளைக் காண்பதற்கும் இதுவரை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவே உதவி வந்தது.

பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்ற பின்னர் இந்த நிர்வாக ஒழுங்கு தொடர்பான விடயத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்று விடுதலைப் புலிகளுக்கு செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அறிவுறுத்தியுள்ளதாக அறியவந்தது.

நத்தார், புத்தாண்டுக்கொண்டாட்டங்களை ஒட்டி முகமாலை, புளியங்குளம், உயிலங்குளம் ஆகிய இடங்களில் உள்ள தமது சோதனை நிலையங்களை இரவு 9.30 மணிவரையும் திறந்துவைப்பதாக விடுதலைப் புலிகள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்கு அறிவித்திருந்தனர்.

ஆனால், கடந்த 24ஆம் திகதி மாலை 6.30 மணியுடன் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் தமது பிரசன்னத்தை விலக்கிக்கொண்டதால் பெருமளவு மக்கள் பளை, புளியங்குளம் பகுதிகளில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கினர்.

இந்த நேர நீடிப்புத் தொடர்பான நிர்வாக ஒழுங்கை விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகம் அரசின் சமாதானச் செயலகம் ஊடாகவே செய்யவேண்டும் என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு விடுதலைப் புலிகளுக்கு தெரியப்படுத்தியுள்ளது.

அதைத் தொடர்ந்து நேர நீடிப்புத் தொடர்பான விடயத்தை நோர்வேத் தரப்புக்கு விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சை ஆணையாளர் தலைமையில் குழு இன்று வருகிறது

யாழ்ப்பாணம்,டிசெ.28

பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் விஜயசிறி தலைமையிலான அதிகாரிகள் குழு ஒன்று யாழ்ப்பாணத்துக்கு இன்று வருகின்றது.

இன்று காலை கிளிநொச்சியில் வன்னிப் பிராந்திய கல்விப் பணிப்பாளர்களைச் சந்திக்கும் இக்குழுவினர் மாலை யாழ்ப்பாணம் வருகின்றனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாவலர் சங்க பிரதிநிதிகள் இன்று புறப்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.28

வடபகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டுப் பின்னர் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தைச் சேர்ந்த சுமார் 60 பேர் கொண்ட குழு ஜனாதிபதியைச் சந்திப்பதற்காக இன்று கொழும்பு செல்கின்றது.

இன்று காலை யாழ். முனியப்பர் ஆலய முன்றிலில் இருந்து விசேட பஸ்மூலம் புறப்படும் இக்குழுவினர், கதிர்காமம் முருகன் ஆலயத்துக்குச்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் பதவிக் காலம் நீடிப்பா? அவரிடம் நாடாளுமன்றம் விளக்கம் கோரும்

### அமைச்சர் மகேஸ்வரன் இந்தியாவில் தெரிவிப்பு

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது பதவிக்காலத்தை மேலும் ஒரு வருடம் நீடிப்பதற்கு இரகசிய முயற்சிகளை மேற்கொள்வதாக வெளியாகும் செய்திகள் குறித்து அமைச்சரவை அவரிடம் விளக்கம் கேட்பதற்குத் தீர்மானித்துள்ளது.

இந்தியா சென்றுள்ள இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் தி. மகேஸ்வரன் அங்கு வைத்து இத்தகவலை வெளியிட்டார்.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அவர் கூறினார்.

ஜனவரி 8ஆம் திகதி நாடாளுமன்றம் மீண்டும் கூடும்போது இந்த விவகாரம் பெரும் சர்ச்சையைக் கிளப்பும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் மகேஸ்வரன் தெரிவித்தார்.

நேரடியாகவோ மறைமுகமாகவோ சமாதான முயற்சிகளில் இந்தியா பங்களிப்புச் செய்யவேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தார். ஜனாதிபதி முக்கிய மூன்று அமைச்சுக்களைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் எடுத்துக்கொண்டதில் நோர்வேயின் சமாதான முயற்சிகள் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (ம)

## அரச நிறுவனங்களில் பொலித்தீனுக்குத் தடை!

யாழ்ப்பாணம்,டிசெ.28

அரச நிறுவனங்களில் பொலித்தீன் உற்பத்திப் பொருள்களின் பாவனையை அரசு முற்றாகத் தடைசெய்துள்ளது.

இது தொடர்பாக அரச நிர்வாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சுச் செயலாளர் எஸ்.சீ.மான்னப்பெரும சுற்றறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அந்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பொலித்தீன் உற்பத்தி பொருள் பாவனையினால் சூழலுக்கு ஏற்படும் கேடுகளைக் குறைப்பதற்காக மற்றைய விடயங்களினுள் பொலித்தீன் பைகள் அடங்கலாக பல்வேறு பொலித்தீன் உற்பத்திகள் அரச அலுவலகங்கள், கட்டடங்கள், பாடசாலைகள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் பொது இடங்களில் பாவித்தலை தடை செய்யவும் பொது இடங்களில் சோடனைகளுக்காக பொலித்தீன் உற்பத்திகளைப் பயன்படுத்துவதை தடைசெய்யவும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

ஆகையால், பொலித்தீன் உற்பத்திகள் பாவனையினால் சூழலுக்கு ஏற்படும் கேடுகளை பற்றி தங்களுக்கு உரிய நிறுவனங்களைச் சேர்ந்த பணித் தொகுதிகளுக்கு அறிவு புகட்டி, அவர்களின் ஒத்துழைப்பின்பேரில் சேவை நிலைய அமைவிடங்களிலும் அரசின் பொது இடங்களிலும் பொலித்தீன் கடதாசிப் பைகள், சோடனைப் பொருள்கள் உட்பட பொலித்தீன் உற்பத்திகள் பாவனையைக் கைவிடவேண்

(16ஆம் பக்கம் பார்க்க)

## சாரதிகளுக்கு விளக்கமறியல்!

யாழ்ப்பாணம்,டிசெ.28

மண்டைதீவுச் சந்திக்கு சமீபமாக - பண்ணைப் பாலத்தில் நேற்றுமுன்தினம் நடந்த விபத்தில் சம்பந்தப்பட்ட இரு வான்களின் சாரதிகளையும் எதிர்வரும் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி ஊர்காவற்றுறைப் பதில் நீதிவான் எம். திருநாவுக்கரசு உத்தரவிட்டார்.

சாரதிகளான கே.ஜெகோபரன், எம். சகாயராசா ஆகியோர் நேற்றுப் பிற்பகல் பதில் நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்டனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

### பொ.ஐ.முன்னணியுடன் கூட்டு அமைக்க

## பொதுத் தேர்தல் நடத்த வேண்டும்; நிபந்தனை விதிக்கிறது ஜே.வி.பி.

கொழும்பு,டிசெ.28

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி - ஜே.வி.பி கூட்டு உருவாகவேண்டும் என்றால் விரைவில் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தவேண்டும் என்று ஜே.வி.பி நிபந்தனை விதித்துள்ளது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். எனினும் அதற்கு சு.கட்சி இணங்க மறுத்து வருகின்றது என்றும் அவர் மேலும் சொன்னார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் உடன்பாடு ஒன்று எட்டுவதற்காக பேச்சுக்கள் அடுத்தமாதத்தில் தொடரவிருக்கின்றன என்றும் - அவர் தெரிவித்தார்.

அதேவேளை, பெப்ரவரி மாதம் முதல்வாரத்தில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் ஒன்று இடம்பெறும் வாய்ப்பு அதிகம் என்று ஜே.வி.பி. தலைவர்கள் கூறிவருகின்றனர்.

பெப்ரவரி 9ஆம் திகதி தென் மாகாண சபையின் பதவிக்காலம் முடிவடைகின்றது. அதைத்தொடர்ந்து ஏனைய சபைகளின் பதவிக்காலம்

(16ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். போதனா வைத்தியசாலையில்

## அவசர விபத்துச் சிகிச்சைப் பிரிவு அமைக்க கொள்கை அளவில் அமைச்சு இணக்கம்

யாழ்ப்பாணம்,டிசெ.28

யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர விபத்துச் சேவைப் பிரிவு ஒன்றை அமைக்க சுகாதார அமைச்சு கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்துள்ளது.

குடாநாட்டில் அடுத்த வருடம் அவசர சுகாதார செயற்பாட்டுத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆராய அமைச்சில் கடந்த வாரம் நடந்த கூட்டத்திலேயே இந்த இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன தலைமையில் அமைச்சு அலுவலகத்தில் நடந்த இக்கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், சுகாதாரத் திணைக்கள, மாகாண சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் யாழ். வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.சதுர்முகமும் கலந்துகொண்டு ஆஸ்பத்திரி அபிவிருத்தி தொடர்பான திட்டங்களை முன்வைத்தார். (16ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக் கடலில் மீன்பிடிப்பதற்கு இந்திய மீனவருக்கு அனுமதிப்பத்திரம்

### பேச்சு நடப்பதாக அதிகாரி தகவல்

சென்னை,டிசெ.28

இலங்கையின் ஆதிக்கத்தில் உள்ள கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதிப்பத்திரம் பெறும் வாய்ப்புக்கள் தொடர்பாக இந்தியா இலங்கையுடன் பேச்சு நடத்தி வருகின்றது என்று இந்திய அதிகாரி ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் ஊடுருவி மீன்பிடிக்கும் தொழிலில் இந்திய மீனவர்கள் ஈடுபடுகின்றனர். இவ்வாறு ஊடுருவும் மீனவர்களை இலங்கைக் கடற்படையினரும், இலங்கை மீனவர்களும் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைக்கின்றனர்.

அவர்களின் படகோட்டிகள் தவிர்ந்த ஏனையோர் விடுவிக்கப்பட்டு இலங்கைக் கடற்படை ஊடாக இந்தியக் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றனர்.

படகோட்டிகள் மீது மேல்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு வருகின்றது.

இதனால், தமிழக மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதை அடுத்து புதிய யோசனை குறித்து ஆராயப்படுகின்றது. (ம-3)

பாதுகாப்பான , நம்பிக்கையான பாலியல் நடத்தை, உங்களையும் உங்கள் சமூகத்தையும் எய்ட்ஸிலிருந்து பாதுகாக்கும்.

- எய்ட்ஸ் விழிப்புணர்வு வாரம்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை ஈரானில் 40 ஆயிரமாக உயர்வு!

## மருத்துவ வசதிகள் இன்றி வீதிகளில் வாடுகின்றனர் மக்கள்

தெஹ்ரான்,டிசெ.28

**ஈரானில் வெள்ளியன்று தாக்கிய பெரும் பூகம்பத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 40 ஆயிரமாக அதிகரித்துள்ளது என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. சுமார் 70ஆயிரம் வரையில் அது இருக்கக்கூடும் என்றும் எதிர்வுகூறப்படுகின்றது.**

**பூகம்பத்தால் 20ஆயிரம் பேர் உயிரிழந்தனர் என்று ஈரானிய உள்துறை அமைச்சு நேற்று அறிவித்தது. எனினும், இந்த எண்ணிக்கை இருமடங்காகும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.**

"மேலும் சடலங்களை நாங்கள் மீட்டுக் கொண்டிருக்கின்றோம். உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 40 ஆயிரத்தைத் தாண்டும். நினைத்துப்பார்க்கமுடியாத மனிதப் பேரவலத்தை நாம் கண்டிருக்கின்றோம்" - என்றார் கெர்மான் நகர ஆளுநர் அக்பர் அலாவி.

பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக முதலாவது சர்வதேச மீட்புக் குழுவினர் நேற்று அங்கு போய்ச் சேர்ந்தனர். பல்வேறு நாடுகளும் உதவிப் பொருள்கள் அல்லது மீட்புக் குழுக்களை ஈரானுக்கு அனுப்பி வைத்துள்ளன. பிரிட்டன், துருக்கி, ஜேர்மனி,

அமெரிக்காவும் உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாக அதிபர் புஷ் தெரிவித்துள்ளார். இஸ்ரேல் தவிர்ந்த எந்த ஒரு நாட்டில் இருந்தும் கிடைக்கும் உதவியையும் தாம் ஏற்றுக் கொள்வோம் என்று தெஹ்ரான் அறிவித்துள்ளது.

ஐ.நா. உடனடியாக 90 ஆயிரம் டொலர் நிதி உதவியை அறிவித்துள்ளது. சர்வதேச உதவிகளைத் திரட்டி அவற்றை ஒருங்கிணைக்கவும் சேதங்களை மதிப்பிடவும் நிபுணர் குழுவையும் அனுப்பியுள்ளது. இக்குழுவினர் சுவிற்ஸலாந்திலிருந்து ஏற்கனவே புறப்பட்டுள்ளனர்.



பூகம்ப அனர்த்தத்துக்கு ஓர் உதாரணம்.



உறவுகளை இழந்துவிட்டு கதறி அழும் தாயும் மகளும்.

சுவிற்ஸர்லாந்து, இத்தாலி, பிரான்ஸ், ரஷ்யா, இந்தியா ஆகிய நாடுகளும் உதவிகளை வழங்க முன்வந்துள்ளன.

பூகம்பம் தாக்கிய பாம் பகுதியில் அநேகமான கட்டடங்கள் தரைமட்டமாகியுள்ளன. அதற்குள் இரு வைத்தியசாலைகளும் உள்ளடக்கம். உயிரிழந்தவர்கள் தவிர மேலும் பல்லாயிரக்கணக்கானவர்கள் காயமடைந்துள்ளனர்.

அவர்கள் சிகிச்சைக்கான வசதிகள்கூட இல்லாமல் வீதியோரங்களில் இருந்து அவதிப்படுகின்றனர். அவர்களுக்கு உதவிகளை வழங்குவதில் அதிகாரிகள் பெரும் இடைஞ்சல்களை எதிர்நோக்குகின்றனர்.

பாமில் ஒரேயொரு வைத்தியசாலை மட்டுமே தற்போது இயங்கி வருகின்றது. அது காயமடைந்தவர்களின் எண்ணிக்கையால் நிரம்பி வழிகின்றது. இதனால், ஏனைய நகரங்களுக்கு காயமடைந்தவர்களை எடுத்துச்செல்லும் பணிகள் துரிதமாக்கப்பட்டுள்ளன.

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தொடர்பாக உள்ளூர் அதிகாரிகளிடம் தொடர்ந்து குழப்பம் நிலவி வருகின்றது. 10ஆயிரம் முதல் 25 ஆயிரம் வரையானோர் உயிரிழந்துள்ளனர் என்று அவர்கள் கூறுகின்றனர்.

தண்ணீர், மின்சாரம் மற்றும் சமையல் வாயு விநியோகங்கள் அனைத்தும் துண்டிக்கப்பட்டுள்ளன. மக்கள் வீதிகளிலேயே காலந்தள்ள வேண்டிய அவலத்துக்கு உள்ளாகியுள்ளார்கள்.

உறவினர்களைத் தேடுபவர்களின் வாகனங்களாலும் அவசர உதவி வாகனங்களாலும் வீதிகளின் முக்கிய சந்திகள் போக்குவரத்து நெரிசல்களுக்கு உள்ளாகியுள்ளன.

இந்தப் பூகம்பம் ஒரு தேசிய சோக நிகழ்வு என்று அதிபர் முஹமட் கதாமி கூறியுள்ளார். இதிலிருந்து ஈரான் மீண்டுவரும் என்று தான் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் 2 லட்சம் மக்கள் வாழ்ந்தனர். பூகம்பத்தால் அங்குள்ள 70 வீதமான வீடுகள் அழிந்துள்ளன. இடிபாடுகளுக்குள் பெரும் எண்ணிக்கையானவர்கள் சிக்கிக்கொண்டனர்.

"நான் என்னுடைய முழுக் குடும்பத்தையுமே இழந்து தவிக்கின்றேன். என்னுடைய பெற்றோர்கள், என் அம்மம்மா மற்றும் என் இரு சகோதரிகள் இடிபாடுகளுக்குள் மடிந்து போனார்கள்" - என்கின்றான் 17 வயதுச் சிறுவனான மார்யாம்.

(ம)

## ஈராக்கில் தொடர் தாக்குதல்கள்: கூட்டுப்படையினர் நால்வர் பலி!

பக்தாத்,டிசெ.28

ஈராக்கியத் தலைநகர் பக்தாத்துக்குத் தெற்கே இருக்கும் நகரமான கார்பலாவில் நேற்று இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்புக்களில் கூட்டுப் படையினர் 4 பேர் உயிரிழந்தனர்; 20 பேர் காயமடைந்தனர்.

அரச அலுவலகங்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டதாக நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர். பொலீஸ் நிலையம் ஒன்றின் மீது மோட்டார் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கூட்டுப் படையினரால் பயன்படுத்தப்படும் பல்கலைக்கழக வளாகம் ஒன்றின் மீது கார்க் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பல்கேரிய நாட்டுப் படையினர் நால்வர் இந்தத் தாக்குதல்களில் உயிரிழந்தனர் என்பதை அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சுப் பேச்சாளர் உறுதிப்படுத்தினார்.

பல்கேரிய நாட்டுப் படைகள் தலைமையிலான கூட்டுப் படையினரே இந்தப் பகுதியின் பாதுகாப்பினைப் பொறுப்பேற்றுள்ளனர்.

ஷியா இன முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு பகுதி கார்பலா. நகர ஆளுநர் அக்ரம் அல் ஜஸீரியும் இந்தத் குண்டுவெடிப்புக்களில் காயமடைந்தார் என்று எ.எவ்.பி. செய்திகள் தெரிவித்தன.

"வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு வகையிலான தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன. அதில் ஏற்பட்டுள்ள இழப்புக்களை உறுதிப்படுத்தவோ மறுக்கவோ முடியாத நிலையில் நான் இருக்கின்றேன். அங்கு என்ன நடக்கின்றது என்று இப்போது எனக்குத் தெரியவில்லை" - என்றார் பக்தாத்தில் உள்ள அமெரிக்கப் படைப் பேச்சாளர்.

முன்னதாக, வடக்கு நகரான மௌசூலில் அமெரிக்கப் படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து அவர்கள் நடத்திய பதிலடியில் 4 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டனர் என்று அமெரிக்கப் படை அதிகாரிகள் கூறினர்.

அமெரிக்கப் படையினர் வீதியில் குண்டுகள் இருக்கின்றனவா? என்ற சோதனையில் ஈடுபட்டிருந்த சமயம் அவர்கள் மீது ஆர்.பி.ஜி. தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் சிறிய ரக ஆயுதங்களால் சுடப்பட்டது என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ம)

## நிலச்சரிவினால் 7பேர் உயிரிழப்பு!

வாஷிங்ரன்,டிசெ.28

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தின் தென்பகுதியில் ஏற்பட்ட மண் சரிவு காரணமாக குறைந்தது 7 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

சகதிக்குள் சிக்கிக்கொண்ட வேறு 14பேரை மீட்புப் பணியாளர்கள் மீட்டுள்ளனர். மேலும் 9 பேரைக் காணவில்லை என்று அதிகாரிகள் நம்புகின்றனர்.

வழமைக்கு மாறான பெரும் மழை காரணமாக இந்த மண்சரிவு ஏற்பட்டது என்று கூறப்படுகின்றது. சில இடங்களில் சுமார் 15 அடி உயரத்துக்கு அந்தப் பகுதியை சகதி மூடியுள்ளது. அதற்குள் உயிருடன் சிக்கிக்கொண்டிருப்பவர்களை மீட்கும் பணிகள் தொடர்ந்து தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

## கூட்டணி அரசில் இருந்து விலக அமைச்சர்களுக்கு வைகோ பணிப்பு

பாரதீய ஜனதாக் கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து ம.தி.மு.க. அமைச்சர்களை விலகுமாறு கட்சித் தலைவர் வைகோ கட்டளையிட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.

அண்மையில் கூட்டணியில் இருந்து தி.மு.க. விலகியது. அதனை அடுத்து ம.தி.மு.கவும் விலகும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், கருத்து வேறுபாடுகள் காரணமாக தீர்க்கமான எந்த முடிவும் எடுக்காமல் கடந்த 20ஆம் திகதி நடந்த கூட்டம் முடிந்தது.

எனினும், நாளைமறுதினம் ம.தி.மு.க. மாவட்டச் செயலாளர் கூட்டம் சென்னை எழும்பூரில் நடைபெறுகின்றது. இக்கூட்டத்தில் கூட்டணியில் நீடிப்பதா? என்பது குறித்து பெரும்பான்மை மாவட்டச் செயலாளர்களின் எண்ணப்படி முடிவுகள் எடுக்கப்படும்.

இந்நிலையில், மத்திய அமைச்சரவையில் இருந்து விலகுமாறு ம.தி.மு.க. அமைச்சர்கள் மு.கண்ணப்பன், செஞ்சி ராமச்சந்திரன் ஆகியோருக்கு வைகோ கட்டளையிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## மேற்குக்கரையில் மீண்டும் வன்முறை

மேற்குக்கரை நகரான நப்லஸில் இஸ்ரேலியப் படையினர் நேற்று நடத்திய தாக்குதலில் சிறுவன் உயிரிழந்தான். மேலும் 17 பேர் காயமடைந்தனர்.

வியாழனன்று டெல்அவிவ் நகரில் தற்கொலைக் குண்டுதாரி நடத்திய தாக்குதலில் 3 இஸ்ரேலியப் படையினர் கொல்லப்பட்டதை அடுத்து நப்லஸில் நேற்று தேடுதல் நடத்தப்பட்டது.

நப்லஸ் இஸ்லாமியத் தீவிரவாதிகளின் வலுவான பகுதி. இஸ்ரேலியப் படையினர் அங்கு தேடுதலில் ஈடுபட்ட சமயம் பலஸ்தீனர்களுக்கும் அவர்களுக்கும் இடையில் கலகம் வெடித்தது.

பலஸ்தீனர்கள் கற்களை வீசித் தாக்கினர். பதிலுக்கு இஸ்ரேலியப் படையினர் சுட்டதில் 17 வயதான சிறுவன் நெஞ்சில் குண்டு தாக்கி இறந்தான். 6பேர் காயமடைந்தனர்.

இஸ்ரேலியப் படையினர் சுட்டனர் என்பதை இராணுவப் பேச்சாளர் மறுத்தார். பலஸ்தீனர்களைக் கலைப்பதற்காக அவர்கள் ரப்பர் குண்டுகளையும் கண்ணீர் புகைக் குண்டுகளையும் மட்டுமே பயன்படுத்தினர் என்றும் அவர் சொன்னார். (ம)

| | | | |
|---|---|---|---|
| செவ். | ரா. | | சனி |
| சந். | இராசிச் | | |
| வெ. | சக்கரம் | | வியா. |
| சூ. ▲ | புத. | கே. | |

# இந்த வார இராசி பலன்

## 28-12-2003 - 03-01-2004

**மாற்றம்:**

சதயம், கும்பம் இராசியில் சந்திரன் நிற்கும்.

அரசியலில் வெளிநாட்டு அழுத்தம் இருக்கும். தேர்தல் ஆயத்தம் நடக்கும். இந்தியா தன்நிலைப்பாட்டை பலப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கும். இந்தியாவில் அரசியல் தலைவர்களிடையே கடும் போட்டிகள் இருக்கும். மத்திய கிழக்கின் பொருளாதார நிலை அழிக்கப்பட்டு அமெரிக்கா - பிரித்தானியா மறைமுக அழிவுகளைத் தொடர இடமுண்டு. அதனால், அரபு நாடுகளின் எதிர்ப்புணர்வு மேலிடும். பசுபிக், அரபி, இந்து சமுத்திர அயல் நாடுகளில் மழை வீழ்ச்சி அதிகரிக்க இடமுண்டு. எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

புதிய பொறுப்புவரும். வருமானம் அதிகரிக்கும். தொழிற்பீடத்தில் வரவேற்பு இருக்கும். வாகன சுகம், திருத்தம், புத்திர, சகோதர வழியினர் உதவிகள் கிடைக்கும். காலில் காயம். தூர தேசத்தில் இருக்கும் சகோதரர் ஒருவர் செய்தி அனுப்புவார். விஷபீடைகள் வருத்தலாம். கிடைப்பதை எண்ணி திருப்திப்படுங்கள். தூர இடங்களிற்குப் போகாதீர்கள். இழப்புக்கள் ஏற்பட்டு வருந்துவீர்கள்.

*அதிர்ஷ்டநாள்: வெள்ளி*

### இடபம்

காதில் கேட்டதையெல்லாம் நம்ப வேண்டாம். பணத்திற்காக அலைவீர்கள். திட்டங்கள் மந்த நிலை அடையும். பெரியவர்கள் உதவிகள் செய்வார்கள். இடமாற்றங்கள் அல்லது பிரயாணங்கள் கொடுக்கும். தலைவலி, கண்நோய் வர இடமுண்டு. குடும்பத்தினரின் தேவைகளுக்காக ஓடியாடித் திரிவீர்கள். மாணவர்களுக்கு கல்வியில் மாற்றம், சிறப்புக் கொடுக்கும், வியாபாரிகள் சிறப்பு அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: வெள்ளி*

### மிதுனம்

பிறர் உதவியை ஏற்கலாம். ஆனால் முழுதாக எவரையும் நம்பக்கூடாது என்பதை அடிக்கடி சொல்லுவீர்கள். தொழில்நிலையில் சிறுமாற்றம் ஏற்படும். எதிர்பாலாருடன் அபிப்பிராய பேதங்கள் ஏற்படும். அவசரத்தில் தவறுகள் நேர இடமுண்டு. பித்த ரோகங்கள் வரும். இடம்மாற்றம் நன்மை தரும். அதிக பொருள் கொடுத்து பொருள் ஒன்றை வாங்கி வேதனைப்பட இடமுண்டு. சளி கூடும். குருத்தொழில், அச்சுவேலைகள் உடையவர்கள் சிறப்பு அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: வியாழன் மத்தியானம்*

### கடகம்

தொழிலில் புதிய நடைமுறை செய்ய யோசிப்பீர்கள். காசு வரும். புதிய இடம், காணி, பூமி தேட முனைவீர்கள். கொடுத்ததைக் கேட்டு வேதனைப்பட இடமுண்டு. குடும்பத்தில் பிறரின் தலையீடுகள் வரும். வரும் பணத்தை திட்டமிட்டு செலவு செய்யாதுவிடின் கடன்பட நேரிடும். இனஜன விரோதங்கள் விஸ்வருபமாகும். சட்டத்துறை, குருத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைகள் கொடுக்கும். தோட்டம் செய்பவர்களுக்கு புதிய விளைவுகள் செய்து லாபம் அடையமுடியும். பிரயாணங்களைத் தவிர்க்கவும்.

*அதிர்ஷ்டநாள்: வியாழன்*

### சிங்கம்

தொழில் ஸ்தானத்தில் நல்லது நடக்கும். தாய் வழியினருக்கு பல உதவிகள் செய்வீர்கள். தந்தைவழி, சகோதர முறையினருடன் கருத்து வேற்றுமை வரும். உங்களுக்கு கீழ் தொழிலாளர்கள் உங்கள் சொற்களை அலட்சியம் செய்ய பொங்கி எழுவீர்கள். மேலதிகாரிகள் உதவிகள் செய்வார்கள். கால்உளைவு, சளி, குளிர் உஷ்ண பீடைகள் வரும். சிறுசிறு பிரயாணங்கள் நன்மை தரும். மின்சாரத்துறை, மருந்து, குருத்துறையினர்களுக்கு நன்மை கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், சனி.*

### கன்னி

அதிகயோசனை, வீட்டில் அபிப்பிராய பேதத்தால் கலகம், வருவாயில் தாமதநிலை ஏற்படும். வீட்டுச்செலவு அதிகரிக்கும். கோயில், வைத்தியம், அலைச்சல் விட்டுவிட்டுக்கொடுக்கும். எதிரிகளை மடக்க பிறரின் ஆலோசனை பெறுவீர்கள். செய்தித்துறை வியாபாரத்துறையினருக்கு வருமானம் அதிகரிக்கும். கிட்டிய சொந்தக்காரருக்கு உடல்நிலைப் பாதிப்புக் கொடுக்கும். அயலவர் உதவிசெய்து தருவார்கள். வாய்வு வருத்தங்கள் தொல்லை தரலாம்.

*அதிர்ஷ்டநாள்கள்: வெள்ளி, சனி.*

### துலாம்

நிறைவாக, கனிவாகப் பேசி காரியமாற்றுவீர்கள். நீதி தர்மத்திற்காகப் போராடி பலர் தலைகுனிந்து, இழப்புக்களைச சந்தித்துள்ளார்கள் என்பதைச் சிந்தித்துச் செயலாற்றுங்கள். பணத்தைச் சேருங்கள். செயலூக்கம் சந்தர்ப்பங்கள் உங்களை நாடி ஓடிவரும் காலமாகும். எதிர்ப்பாலாருக்கு உதவிகள் செய்து கொடுப்பீர்கள். மாற்றங்கள் நன்மைதரும். இறைபக்தி வழிநடத்தும். நாரிநோ, குளிர், வயிற்றுநோ கொடுக்கும். சட்டத்துடன் சம்பந்தமான தொழில், குருத்தொழில், கணனித்திட்டம், அச்சுத்தொழில் முதலியவற்றில் தொழில் தொடர்பானவர்கள் அதிக நன்மையடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, வியாழன், வெள்ளி, சனி.*

### விருச்சிகம்

மனிதர்களில் அதிக நம்பிக்கை வைத்தால் துன்பந்தான். இறைவனில் நம்பிக்கை வைத்தால் இன்பந்தான். இதை நீங்கள் உணராதவர் அல்லர். தொழில்ஸ்தானத்தில் போட்டிகள் ஏற்படும். புதிய இடம், பணவரவு, செலவுகள் அதிகரிக்கும். நண்பர்கள் உதவி செய்வார்கள். வயிற்றுநோ, புதிய வியாதிகள் வரும், புதியவர்கள் தேடிவருவர். பொருள் தவற இடமுண்டு. இரும்புத்துறை வியாபாரிகள், பிரயாணத்துறையினர் நன்மையடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், சனி .*

### தனுசு

திடீர் இடமாற்றம், தொழில் நிலையில் ஒரு தளம்பல் நிலை ஏற்பட இடம் உண்டு. தூரத்துச் செய்தி நல்ல ஆறுதலைத் தரும். கொடுத்தது வராது. உறவினர் விஷயமாகப் பேச்சுவார்த்தை ஏற்படும். எதிர்ப்பாலாருக்கு பிரசர் கூடும். கால் பகுதியில் நோ வரும். குருநிலை, வைத்தியத் தொழில் சிறப்பு அடைய இடம் உண்டு. தாமதப்படுத்துவது நன்று.

*அதிர்ஷ்டநாள்: திங்கள்.*

### மகரம்

எவரோ செய்யும் பிழைகளுக்கு நீங்கள் குற்றவாளியாவீர்கள். நண்பர்கள் பகைப்பார்கள். உறவினரால் கலகலப்பு ஏற்படும். கொடுக்கல் வாங்கலால் வேதனை வரும். காசுவரும். கால்நோ, நாரிப்பிடிப்பு, சளித்தொல்லைகள் கொடுக்கும். பிர யாணம், வீடு மனையில் மாற்றம் சிறப்பு திடீரென வர இடமுண்டு.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், வெள்ளி, சனி.*

### கும்பம்

சலனப்படுவீர்கள். வாக்குக்கலகம் கொடுக்கும். பெரியவர்கள் உதவுவார்கள். ஆலயதரிசனம், பொருள்வரவு, தொழில் ஸ்தானத்தில் இழப்புக்கள் ஏற்படும். புதிய மாற்றம், புதுவருஷத்தில் நடக்க இடமுண்டு. நண்பர்கள் உதவுவார்கள். கால் வருத்தம், சலத்தொல்லை ஏற்படும். குருத்தொழில், பிரயாணத்துறையினர்கள் உதவி செய்வார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், சனி.*

### மீனம்

நீங்கள் அளவுக்கதிகமாக நம்பியவர் துரோகம் செய்வார். அடிக்கடி கோபம் வரும். பொருள் தவற இடமுண்டு. நண்பர்கள் கோபிப்பார்கள். தொழில் ஸ்தானத்தில் பகை வரும். வீடு மனையில் செலவுகள் ஏற்படும். சளி, கால் நோ வயிற்று நோ கொடுக்கும், கடல்தொழில், பிரயாணம், வைத்தியம் செய்பவர்களுக்கு நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், சனி.*

**மகாதேவா ஜோதிடம்**

## காலத்தின் பதிவு



அந்திம காலத் துயரம். படம் : தீபன்

## திருவெம்பாவை நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.28

திருவெம்பாவை உற்சவம் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகிறது.

இதனையொட்டிக் குடாநாட்டில் உள்ள இந்து ஆலயங்களில் நாளை அதிகாலை திருவெம்பாவை உற்சவம ஆரம்பமாகும்.

பத்தாம் நாளான அடுத்த மாதம் 7ஆம் திகதி திருவாதிரை (ஆருத்திரா தரிசனம்) இடம்பெறும்.

திருவெம்பாவை தினங்களில் அதிகாலை வேளையில் திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை போன்றவற்றைப் பாடுவதற்கு ஆலய பரிபாலகர்கள், நிர்வாகசபையினர் ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

இதேவேளை, பிள்ளையார் பெருங்கதை இன்று நிறைவடைகிறது.

(எ-10)

## நிரந்தர சமாதானம் வேண்டி மாதகலில் தீப ஒளிப்பேரணி

மாதகல்,டிசெ.28

மாதகல் சுடர்ஒளிமயம் மாதர் சங்கத்தின் ஏற்பாட்டில், 'கியூடெக்' நிறுவனத்தின் அனுசரணையுடனான சமாதான தீபஒளிப் பேரணியொன்று அண்மையில் மாதகலில் இடம் பெற்றது.

நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டி இந்தப் பேரணி நடத்தப்பட்டது.

மாதகல் வேலுப்பிள்ளை கடைச் சந்தி, மாதகல் கிழக்கு, விபுலானந்தர் வீதிச் சந்தி ஆகியவற்றில் இருந்து ஒரே நேரத்தல் ஆரம்பமான பேரணிகள் தபாற்கந்தோர் சந்தியை வந்தடைந்தன. பேரணியில் வந்தவர்கள் சுலோக அட்டைகளையும் எடுத்து வந்தனர்.

பேரணியின் முடிவில் சமாதானத் தீபம் ஏற்றப்பட்டது. சமாதான தீபத்தை வண. பிதா சி.ஜி.ஜெயக்குமார் அடிகளார், பண்டத்தரிப்பு பல நோ.கூ.சங்கத்தின் பொது முகாமையாளர் எஸ்.வைரவநாதன், தெண்பகுதியைச் சேர்ந்த ஜெயசேனா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

(எ-10-95)

இருதய நோய்க்கு அவசிய மேலதிக சிகிச்சை செய்வதற்கு நிதி வசதியற்றுத்
திண்டாடும் குழந்தைகள் எத்தனை! எத்தனை!
அவர்கள் உங்கள் உதவியை நாடுகிறார்கள்.
அரும்புகள் சிறுவர் நிதியம்
மருத்துவ மாணவர் ஒன்றியம்
☎021-222-7342, 0777-678051

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

1ரீxxx தொழிலக்கமுடைய மொறிஸ் மைனர் 1000 விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பொன்னம்பலம், 247, K.K.S. வீதி, வல்வெட்டித்துறை. T.P.: 226-3575. (26285)

கனடாவிலிருந்து கொண்டு வந்த Laptop-P4 Toshiba புதியது. Model No. Satellite 2450, Series விற்பனைக்கு உண்டு. தொடர்பு: V.Raj, T.P.: No.: 077 6035415. (26412)

நல்ல நிலையிலுள்ள CD 200 HONDA விற்பனைக்குண்டு. தொடர்பு: S.R.லோகநாதன், 535, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். பார்வையிடும் நேரம்: 9.a.m.-5 p.m. (26433)

பாவித்த 21" Sony T.V., Deck, Rice Cooker, CD-RW/DVD, Combo / Drive விற்பனைக்குண்டு. (ஞாயிறு மட்டும்). தொடர்பு: ஈரப்பலா வளவு, 56, அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகம். 0712 505464, 0776 088356. (26417)

நல்ல நிலையிலுள்ள பஜாஜ் கிளேசிக் SL ஸ்கூட்டர் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.கங்காதரன், இல.96, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (26353)

நல்ல நிலையில் உள்ள LML Select II ஸ்கூட்டர் பிளேட் (லைட்) விற்பனைக்குண்டு. தொடர்பு: மணியகாரன் வளவு, மணியகாரன் வீதி, கொக்குவில் கிழக்கு. (26426)

எழுதுமட்டுவாழ் பகுதியில் 60 ஏக்கர் தென்னந்தோட்டம் விற்பனைக்கு உண்டு தொடர்பு: 0112586642. (சி-32330)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதியில், வைத்தீஸ்வரா வித்தியாலய சந்திக்கு அருகில் 1 பரப்பு 16குளி விஸ்தீரண முள்ள காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு தொடர்பு: 77, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் அல்லது கொழும்பு T.P 011-2559349. (26320)

## காணி விற்பனைக்கு

3ஆம் குறுக்குத்தெரு, அடைக்கல மாதா கோவில் மேற்குப் பக்கத்தில் ஆஸ்பத்திரி வீதிக்கு அருகில் கடை, வீடு கட்டக்கூடிய 1 பரப்புக்காணி சுற்று மதிலுடன் (யாழ்வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்மத்திய கல்லூரிக்கு அண்மிய பகுதியில்) விற்பனைக்குண்டு. தொடர்பு: K.பாலசிங்கம், இல 19, மூன்றாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (26424)

சங்கத்தானை, சாவகச்சேரியில் பொற்தொழிலாளர் வீதியில் உள்ள 3 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: J.முகுந்தன், 1010/7, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (26376)

## இறைச்சிக்கோழி விற்பனை

Prima Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம்செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம் (Electronic நிறுவை). (நல்லூர் வீடியோ சென்றர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (26357)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள் விலை ரூபா 42, Prima லேட்டுக் குஞ்சுகள் விலை ரூபா 62, 05.01.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவுசெய்யவும். பருத்தித்துறைக் கிளையிலும் விநியோகிக்கப்படும் (நல்லூர் வீடியோ சென்றர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (26356)

## வீடு வாடகைக்கு

கொன்வென்றுக்கும், பிரதான வீதிக்கும், பற்றிக்ஸுக்கும் அருகில் மாடி வீடு ஒன்று நிறுவனங்களுக்கு வாடகைக்குக் கொடுக்கப்படும். மருத்துவபீட மாணவிகளுக்கும் அறைகள் வாடகைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: Mrs.R.Xavier, 10A, Cathedral, Street, Jaffna. T.P.; 222 5687. (26419)

## வாடகைக்கு

767, மானிப்பாய் வீதி, அனுகால் மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் வைத்திய மனையுடன் இணைந்த 3 கடைகள் மின்சாரம், நீர்வசதியுடன் உடன் வாடகைக்கு உண்டு. மேற்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (26377)

## திருமண சேவை

1974ஆம் ஆண்டு, அத்தம், செவ்வாய் இல்லாத கனடா சிற்றிசன் மணமகனுக்கு அழகிய பொருத்தமான மணமகள் தேவை. தொடர்பு: துர்க்கா திருமண சேவை 101/1, ஓட்டுமடம் வீதி, சிவலிங்கப் புளியடி, (K.K.S.வீதி), யாழ்ப்பாணம். (26422)

## வகுப்புகள்

English, Maths தரம் 06 இல் இருந்து O/L(A,B,C) பெறுபேறுடைய வும் English Medium 6,7 விசேடமாக எல்லாப் பாடங்களும் Spoken English உட்படக் கற்பிக்கப்படும் தொடர்பு 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி (சிவன் கோவில் பின்புறம்). (26197)

## தைப்புத்தாண்டு பலன்கள்

வியாழ வக்கிரம் 15-01-2004 ஆரம்பம், சனி வக்கிரம் (எல்லா ராசிப் பலன்களும்) அடங்கியவை. 15/= எங்கும் விற்பனையாகின்றது. கணிப்பாசிரியர்: சத்தியா, 3ஆம் மைல் ஆனைக்கோட்டை. 021 - 222 2753 யாழ்பஸ்நிலைய புத்தகசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம். (26429)


**SKY COMPUTER SYSTEMS**

MS Office Visual Basic
Auto Cad Photo Shop
Hard Ware — Page maker
Quick Books — Corel Draw
Accounting — Advanced Excel

Note:
1. மாணவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியான முறையில் கவனிக்கப்படுவர்.
2. உங்களுக்கு வசதியான நேரத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.
* சான்றிதழ்கள் யாவும் கொழும்பு தலைமைக் காரியாலயத்திலிருந்து பெற்றுத்தரப்படும். ரூ.15,000= இலிருந்து கணனிகளைப் பெற்றுக்கொள்ளலாம். மொனிட்டர் 15" - 6000/=
* ஆறுமாதகால உத்தரவாதத்துடன் கொள்வனவு சிசுப்பயிற்சிக்கு 15 நாள் இலவசப் பயிற்சி.

Petm IV 1800MHZ
Computer with Multimedia (Intel or Motherboard) 56,500/=

**SKY COMPUTER SYSTEMS**
109, Kandy Road, Chundikuli, Jaffna (கச்சேரிக்கு அருகில்).
Today You Learn Tomorrow you lead. ☎ 0777283654.


## வீதி பலத்தசேதம்; பயணிகள் சிரமம்

குருநகர்,டிசெ.28

அரியாலை, பூங்கங்குளம் வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. ஏ-9 கண்டிவீதிக்கும் - கொழும்புத்துறை வீதிக்கும் இடைப்பட்ட பகுதியே இவ்வாறு பலத்த சேதமடைந்துள்ளது. இவ்வீதியூடாகப் பயணிப்போர் மிகுந்த போக்குவரத்து நெருக்கடியை அனுபவித்து வருகின்றனர் என்றும் - யாழ மாநகரசபையினர் இந்த வீதியைத் திருத்தி அமைக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் - கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-51)

## கூரைத்தகடு கொள்வனவுக்கு நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி,டிசெ.28

யுத்தத்தினால் சேதமடைந்த கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்திற்கு கூரைத்தகடுகள் கொள்வனவு செய்வதற்கு 25 ஆயிரம் ரூபாவினை பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் ஒதுக்கப்பட்டுள்ளதாக யாழ். செயலக திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் நா.சிவபாதசுந்தரம் அறிவித்துள்ளார்.

இவ்வேலைத் திட்டத்தினை சாவகச்சேரி பிரதேசசபை மூலம் மேற்கொள்ளுமாறு - இது குறித்து அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-117)


## உடன் தேவை

வைண்டிங் வேலை பழகியவர்களும் பழகி வேலைசெய்யக்கூடியவர்களும். மேடை ஒலியமைப்பு செய்யக்கூடியவர்களும், பழகும் ஆர்வம் உள்ளவர்களும் விரும்பத்தக்கது.
சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும்
தொடர்பு:
மினி மகாலிங்கம்
958/47. கே.கே.எஸ். வீதி. யாழ். (26411)


மாவடி வயிரவர் துணை

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன்
**துரைசிங்கம் சுபேஷ்**

அவர்களின் மிருதங்க இசை அரங்கேற்ற நிகழ்வினைப் பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

வயிரமுத்து கட்டடம்,
பிரதான வீதி,
சங்கானை. (26420) (26)

திருமதி செ. வயிரமுத்து குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகிறோம்



சாவகச்சேரி கோயில் குடியிருப்பு சந்தனமுதலிச்சிபுலம் ஸ்ரீநடராஜ முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபையின் நீண்டகால உப தலைவரும் A.K.S.ரான்ஸ்போட் சேவிஸ் (சாவகச்சேரி), A.K.S.அரிசி ஆலை (பரந்தன்) ஆகியவற்றின் முன்னாள் பங்காளரும் ஆகிய

உயர்திரு.
**அ.க. சபாரட்ணம்**

அவர்கள் 24.12.2003 அன்று அகில இலங்கை சமாதான நீதிவானாக சாவகச்சேரி மாவட்ட நீதிவான் திரு.பா. சுப்பிரமணியம் அவர்களது முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து உயர்வு பெற்றதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர்தம் சேவை மென்மேலும் வளரவும் பல்லாண்டு காலம் வாழவும் உயர்வு பெறவும் இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

கோயில்குடியிருப்பு சந்தன முதலிச்சிபுலம்
ஸ்ரீநடராஜ முருகமூர்த்தி ஆலயம்.
சாவகச்சேரி.

- ஆலய பரிபாலன சபையினர்.

(26409) (21-26-19)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



சாவகச்சேரி, கோயில்குடியிருப்பு, சந்தன முதலிச்சி புலம் ஸ்ரீ நடராஜ முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபையின் நீண்டகால உபதலைவரும், A.K.S. ரான்ஸ்போட் சேவிஸ் (சாவகச்சேரி), A.K.S. அரிசி ஆலை (பரந்தன்) ஆகியவற்றின் முன்னாள் பங்காளருமாகிய

உயர்திரு. **அ.க.சபாரட்ணம்**

அவர்கள் 24.12.2003 அன்று அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகிறோம். அவரது சேவை மேலும் சிறப்புற இறை ஆசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

"லாவண்யம்",
கச்சாய் வீதி, சாவகச்சேரி. (26410)

திருநா.இராசநாயகம் குடும்பத்தினர் (கிரியோன்). (34-19-21)

## நெஞ்சை விட்டு நீங்காத 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

கலியுகத்தில் 30 - 07 - 1951



பரந்தாமத்தில் 04 - 01 - 1998

**திருமதி கமலபாரதி சரவணமுத்து**

திதி: 28-12-2003

எமது பாசத்தின் காவலாய் இருந்த தெய்வமே!
நீங்கள் எம்மைப் பிரிந்து ஆறு ஆண்டுகள் என்ன
அறுபது ஆண்டுகள் கடந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டுப் பிரியாது.
ஓம் சாந்தி பாபா பாபா

பழைய டச்சு வீதி,
கல்வியங்காடு. (34-26-21-19)

பிரம்மகுமாரர். (26423)

## நினைவழியா முதலாம் வருடம்

மலர்வு 04 - 06 - 1927



உதிர்வு 07 - 01 - 2003

திருமதி
**தர்மலிங்கம் பிச்சையம்மா**

வருடம் ஒன்று கடந்ததே
மாறுமோ உங்கள் முகம்?
தாளாத வேதனையில் தவிக்கவிட்டு
மீளாத்துயில் கொள்ளச் சென்றீர்களே!
நாம் புவியில் வாழும் வரை
எங்கள் உள்ளங்களில் உங்கள் மூச்சு
உலாவரும்!

36, காட்டுக்கந்தோர் லேன்,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். (34-14-21-26) (26414)

பாச நினைவுகளுடன்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## ஓராண்டு நினைவலைகள்

மண்ணில் 1914 - 06 - 15



விண்ணில் 2003 - 01 - 07

அமரர் **சரவணமுத்து பரநிருபசிங்கம்**

முதலாம் வட்டாரம், புங்குடுதீவு
(முன்னாள் பிரபல வர்த்தகரும் பத்திரிகை முகவரும்)

திதி: 2003.12.28

மீளாத்துயிலில் கொண்டு எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்ற ஐயாவே!
பாசத்தின் திருவுருவமே! எம்
குடும்பத்தின் திருவிளக்கே!
ஓராண்டு என்ன, எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சத்தில்
என்றும் நிலைத்திருக்கும்!

உங்கள் நினைவால் துயருறும்,
மனைவி: இரத்தினபூபதி (புங்குடுதீவு).
மக்கள்: பசுபதிநேசன் (கனடா),
நவரத்தினம் (புங்குடுதீவு),
பத்மநாதன் (ஜேர்மனி),
மகள்: பத்மாவதி (புங்குடுதீவு).

(C/32328)(35-21-19-26)

உதயன்

# தம்மை மாற்றுவதற்கு ஜனாதிபதி தயாரா?

"வடக்கில் யுத்தத்தை முழுமையாக முடித்து நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமேயானால் தெற்கில் உள்ள அரசியல் அதிகாரப் போட்டியை நிறுத்தவேண்டும். இலங்கைத் தரப்பில் பேச்சைத் தொடரும் அதிகாரபூர்வத் தலைவர் - அதிகாரமிக்க தலைவர் - யார் என்பது தெளிவாகும் வரை சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது சாத்தியமில்லை".

நோர்வே தூதரகத்தின் இரண்டாவது செயலாளரும் அமைதி முயற்சிகளுக்கான நோர்வேயின் அனுசரணைப் பணியின் பின்புலத்தில் நின்று கடமையாற்றி வருபவருமான தோமஸ் ஸ்ராங்லண்ட் இவ்வாறு கூறியிருக்கின்றார்.

குருநாகலையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியிருக்கின்றார்.

"போரினால் மனிதர்கள் இறப்பது நின்றுவிட்டாலும் போர்க்கள நிலைமை மாறவில்லை. இந்தநிலை தொடர்ந்து நீடிக்குமா? ஒரு சிறு சம்பவம்கூட பெரும் விபரீதத்தை ஏற்படுத்த முடியும்" - என்று அவர் விடுத்திருக்கும் எச்சரிக்கை யதார்த்த பூர்வமானது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசுப் பக்கமிருந்த பாதுகாப்பு, உள்துறை, ஊடகத்துறை அமைச்சுக்களை தன்னிச்சையாக ஜனாதிபதி பறித்து எடுத்துக்கொண்டதை அடுத்து, ரணிலின் அரசும் விடுதலைப் புலிகளும் சேர்ந்து மேற்கொண்டு வந்த சமாதான முயற்சிகள் தடைப்பட்டுப் போயின.

தற்போதைய அமைதி முயற்சிகளை - சமாதானப் பேச்சுக்களை - விரோதப் போக்கில் நோக்கி வந்த ஜனாதிபதியின் கைகளில் பாதுகாப்பு அமைச்சு வந்துவிட்டதால், அந்த அமைதி முயற்சிகளின் கீழான யுத்தநிறுத்தமும் தாக்குப் பிடிக்குமா? என்ற கேள்வி இயல்பாகவே எழுந்தது.

எது, எப்படியோ இந்த நெருக்கடி நிலைமை ஏற்பட்ட பின்னரும்கூட, கடந்த ஏழு வாரங்களாக விக்கினம் ஏதுமின்றி யுத்தநிறுத்தம் நின்று, நிலைத்துத் தாக்குப் பிடித்து வருகின்றது.

யுத்தநிறுத்தத்துக்கு வேட்டுவைக்கக் கூடிய ஆள்கள் என்று தமிழர் பக்கத்தினால் நோக்கப்பட்ட அரசுப் படைத் தரப்பின் அதிகாரிகள், அதீத எச்சரிக்கையுடன் நடப்பதும் தென்படுகின்றது.

யுத்தநிறுத்தத்துக்கு இதோ வேட்டு வைக்கிறேன் என்ற பாணியில் - இராணுவக் கெடுபிடிப்போக்கோடு - இதுவரை செயற்பட்ட யாழ். படைகளின் தளபதி ஜெனரல் பொன்சேகா அப்பதவியிலிருந்து தூக்கப்பட்டுள்ளார்.

யுத்தநிறுத்த அமைதி நிலைக்கு அடிக்கடி குழப்பம் ஏற்படுத்தி வந்த கடற்படைத் தரப்பும் சற்று அமுக்கி வாசிக்கின்றது.

இத்தகைய நிலையால் யுத்தநிறுத்தம் தட்டுத்தடுமாறி ஏதோ நீடித்துச் செல்கிறது.

எனினும், அமைதி முயற்சிகள் தடைப்பட்டு, இடைநிறுத்தப்பட்டிருக்கும் இன்றைய சூழலில் அமைதி முயற்சியில் ஈடுபட்டிருக்கும் தரப்புக்களுக்கிடையிலான உத்தியோகபூர்வ பேச்சுத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருக்கும் இக்கட்டத்தில் -

அமைதி முயற்சிகள் விடயத்தில் தம்முடன் நேரடியாகத் தொடர்புபடாத ஜனாதிபதியின் கைகளில் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சு சிக்கியிருப்பதால், அத்துறை தொடர்பாக எழும் யுத்தநிறுத்தப் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியுடன் எந்த வகையிலும் தொடர்புபட்டுத் தீர்த்துக் கொள்ள முடியாத நிலையில் புலிகள் இருப்பதால் -

ஜனாதிபதியின் நடவடிக்கை காரணமாக பாதுகாப்புத் துறை சம்பந்தமாக எழக்கூடிய சிக்கல்களுக்குத் தாம் பொறுப்பேற்க முடியாது என்று அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கைவிரித்துள்ள நிலையில் -

யுத்தநிறுத்தம் நீடிப்பது குறித்து சந்தேகங்களும் அவநம்பிக்கையும் ஏற்படுவது நியாயமானதே.

"யுத்தநிறுத்தம் நீடிக்குமா? ஒரு சிறு சம்பவம் கூட பெரும் விபரீதத்தை ஏற்படுத்தமுடியும்" - என்று நோர்வேத் தூதரகத்தின் இரண்டாவது தூதர் கூறிய - அவநம்பிக்கை தருகின்ற - வாசகங்கள் இந்த அடிப்படையில்தான் எழுந்தவை.

எனினும், யுத்தநிறுத்தம் இப்போது முறிந்து பெரும் போர் வெடித்தால் அதற்கான முழுப்பொறுப்பையும் நமது நாடும் சர்வதேசமும் தம்மீதே சுமத்திவிடும் என அச்சப்படும் ஜனாதிபதி குமாரதுங்க, பாதுகாப்பு அமைச்சை, தான் பிடுங்கிக் கொண்டாலும் தனது முன்னைய யுத்தவெறிப் போக்கை சற்றுத் தணித்துக் கொண்டு, யுத்தநிறுத்தத்தை நீடிக்கச் செய்வதில் சற்று சிரத்தை காட்டுகின்றார் எனத் தெரிகின்றது.

அதேசமயம், புலிகளுடனான சமாதான முயற்சிகளை - அமைதி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பை வாய்ப்புக் கிடைத்தால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தரப்பிலிருந்து தாமே தட்டிப்பறித்துக் கொண்டால் என்ன என்ற நப்பாசையும் ஜனாதிபதி குமாரதுங்கவுக்கு உள்ளது போலத் தெரிகின்றது.

நோர்வேயை மூன்றாவது தரப்பாக அழைத்துத் தாம் ஆரம்பித்த சமாதான முயற்சிகளே இவை என்று அடிக்கடி பீற்றிக்கொள்ளும் ஜனாதிபதி குமாரதுங்க, தாமே அதைத் தொடர்ந்து முகங்கொடுத்து வெற்றிகண்டார் என்ற பெருமையையும் தட்டிச் சென்றால் என்ன என்ற ஆசை அவரில் பிரவகிப்பதாகச் சிலர் கூறுகின்றனர். அந்த விருப்புக் காரணமாக தமது மனதை மாற்றிக்கொண்டு, யுத்தநிறுத்தத்தை நின்று நிலைத்து நீடிக்கவைத்து, அமைதி முயற்சிகளைத் தொடர அவர் மனங்கொண்டுள்ளார் என்கின்றனர் அவர்கள்.

அது உண்மையானால் அது வரவேற்கத்தக்க நல்லதோர் மாற்றம். ஆனால், அவ்வாறு அதனை முன்னெடுப்பதற்கு அவர் தேர்தல் மூலம் சிங்கள மக்களின் அனுமதியை, அங்கீகாரத்தைப் பெறவேண்டும் - பிரதமர் ரணில் கடந்த பொதுத் தேர்தலில் பெற்றது போன்று.

அவ்வாறான அனுமதியைப் பெறுவதற்கு அமைதி முயற்சிகளுக்கு எதிரான ஜே.வி.பி. போன்ற பேரினவாத சக்திகளுடன் கூட்டு வைக்கும் தமது அண்மைக்கால முயற்சியை பூட்டுப்போட்டு முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் அவர்.

அவர் அதற்குத் தயாரா?

# கால்நடைகளுக்குக் குடற்புழுநோய் ஆராயத் திருநெல்வேலியில் நிலையம்

## அடுத்தவருட முற்பகுதியில் நிறுவப்படும்

யாழ்ப்பாணம்,டிசெ.28

ஆடு, மாடுகளின் குடலில் ஏற்படும் குடற் புழுநோய் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கென திருநெல்வேலியில் விசேட நிலையம் ஒன்று நிறுவப்படவுள்ளது.

அடுத்த ஆண்டு தொடக்கத்தில் திருநெல்வேலி கால்நடை மிருக வைத்திய புலனாய்வு நிலையத்தில் இந்த விசேட நிலையம் இயங்க ஆரம்பிக்கும் என கால்நடை மிருக வைத்திய புலனாய்வு நிலையத்தின் பொறுப்பதிகாரி டாக்டர் புவிராஜன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வன்னி மற்றும் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள ஆடு, மாடுகளுக்கு குடல்புழு, கம்போடியா, மடியழர்ச்சி (ஆடுகளுக்கு) முதலிய நோய்கள் பரவிவருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இவ்வாறு மிருகங்களிற்கான குடல் புழுநோய் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கான விசேட நிலையம் ஒன்று குடாநாட்டில் அமைக்கப்பட்டிருக்கவில்லை. அதேவேளை, தற்போது ஆடு, மாடுகள் இந்த நோய்க்கு வெகுவிரைவில் இலக்காவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. இதனை அடுத்தே நிலையம் நிறுவும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

மிருகங்களுக்கு ஏற்படும் நோய்கள் தொடர்பாக ஆராய்வதற்கென அண்மையில் கண்டியில் அமைந்துள்ள கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தில் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், மிருக சுகாதாரப் பிரிவின் பணிப்பாளர் மற்றும் ஏனைய மிருக வைத்திய புலனாய்வு அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போதே, இந்த விசேட நிலையத்தை நிறுவுவது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதுடன், திருநெல்வேலியில் இயங்கிவரும் கால்நடை புலனாய்வு நிலையத்தில் பரிசோதனை நிலையம் ஒன்றை அமைக்கவும் -

அதற்கான உபகரணங்களை வழங்கவும் - முடிவுசெய்யப்பட்டது. என்று அவர் மேலும் கூறினார்.

திருநெல்வேலியில் நிறுவப்படும் சிகிச்சை நிலையம் போன்று வன்னியிலும் விசேடநிலையம் அமைக்கப்படவுள்ளது என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

# சுகாதார உட்கட்டமைப்பு வடபகுதியில் மிகவும் மோசம்

## சுகாதார அமைச்சருக்கு ஜயலத் கடிதம்

கொழும்பு,டிசெ.28

சாதாரண நோய்களைக் கூட குணப்படுத்தமுடியாதவாறு வடபகுதி சுகாதார சேவையின் உட்கட்டமைப்பு பின்தங்கியுள்ளது.

எனவே, வடபகுதியிலுள்ள ஐந்து மாவட்டங்களினதும் சுகாதார மேம்பாடு கருதி மேற்படி உட்கட்டமைப்பைச் சீர்படுத்த விரைவில் நடவடிக்கை எடுக்கவும்.

- இவ்வாறு சுகாதார அமைச்சர் பி.தயாரத்னவிடம் கோரிக்கை விடுத்துள்ளார் புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன.

இது விடயமாக அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய அந்த ஐந்து மாவட்டங்களிலுமுள்ள போதனா வைத்தியசாலைகள், ஆதார வைத்தியசாலைகள் பாதிக்கப்பட்ட நிலையிலுள்ளன.

அத்துடன், போக்குவரத்து மற்றும் அம்புலன்ஸ் வண்டிச் சேவை முதலிய வசதிகள் உட்பட பல அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் அவை இயங்குகின்றன.

அதேவேளை - பெரும்பாலான பொதுவைத்தியசாலைகள், பிரசவ வைத்திய நிலையங்கள் மற்றும் ஏனைய பிரிவுகள் பாரியளவில் சேதமடைந்துள்ளன.

கிராமப்புற வைத்தியசாலைகளில் இருந்து அவசர நோயாளிகளை அவ்வப் பிரதேச ஆதார அல்லது போதனா வைத்தியசாலைகளுக்கோ அல்லது அவசியம் கருதி அநுராதபுரம் போன்ற வெளிப் பிரதேசங்களுக்கோ உடனடியாகக் கொண்டு செல்வதற்கு வாகனவசதி இல்லை.

எனவே, மேற்படி பிரதேச வைத்தியசாலைகளுக்கு அம்புலன்ஸ் வண்டிகள் வழங்கப்படவேண்டியது மிகவும் முக்கியமானதாகவுள்ளது.

மேற்படி பிரதேசங்களின் அரச அதிபர்கள் தமது பிரதேசத்து வைத்தியசாலைகளின் தேவைகளைப் பட்டியலிட்டு எம்மிடம் சமர்ப்பித்துள்ளனர். அவைகள் இந்தக் கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ளன - என்று அதில் உள்ளது. (எ)

# காணாமற்போன மீனவர்கள் நாச்சிக்குடாவில் உள்ளனர்

## படகு உரிமையாளர் தகவல்

குருநகர், டிசெ.28

கடந்த 22ஆம் திகதி குருநகரிலிருந்து இரணைதீவுக் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றவேளை காணாமற்போனவர்கள் என்று கூறப்பட்ட மீனவர்கள் நால்வரும் நாச்சிக்குடாவில் இருக்கின்றனர் என்று தெரியவந்துள்ளது.

குருநகரைச் சேர்ந்தவர்களான பெனடிக்ற் றஞ்சித் (வயது35), கிறேசியன் ஜன்மார் (வயது35), எஸ்ரவி (வயது45), எஸ்.உதயகுமார் (வயது35) ஆகிய நால்வருமே காணாமற்போயிருந்தனர்.

இவர்கள் நால்வரையும் நாச்சிக்குடாவில் கண்டதாக அங்கிருந்து வந்திருந்த வேறுசிலர் தம்மிடம் தெரிவித்திருப்பதாக மேற்படி நால்வரும் தொழிலுக்குச் சென்ற படகின் உரிமையாளரான அ.ஞானசேகரன் தெரிவித்தார்.

இதேவேளை - இவர்கள் நால்வரும் காணாமற்போன சம்பவம் தொடர்பாக அவர்களது உறவினர்கள் யாழ். பொலீஸ நிலையத்திலும், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்திலும் முறைப்பாடு செய்திருந்தமை தெரிந்ததே. (எ-4-51)

# தேர்தல்களில் தனித்துப் போட்டியிட முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீடம் சிபார்சு

கொழும்பு,டிசெ.28

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்வரும் அனைத்துத் தேர்தல்களிலும் தனித்தே போட்டியிட வேண்டுமென்று காங்கிரஸின் உயர்பீடம் அதன் அரசியல் அதிஉயர் பீடத்துக்குச் சிபார்சு செய்துள்ளதாகக் கட்சியின் தேசிய அமைப்பாளர் கே.ஏ.பாயிஸ் தெரிவித்தார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் வடக்கு - கிழக்கில் முஸ்லிம்கள் மீது தொடரும் தாக்குதல்கள், வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் முஸ்லிம் காங்கிரஸுக்கு ஐக்கிய தேசிய முன்னணி வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமை, அமைப்பாளர் நியமனங்களில் ஐ.தே.முன்னணி நடந்துகொண்ட விதம் ஆகியவை முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களை விரக்தியுறச் செய்துள்ளன. இந்த விரக்தியின் வெளிப்பாடே முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட வேண்டுமென்ற கோரிக்கை - இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு புத்தளம் நகரில் அமைக்கப்பட்டிருந்த அலங்காரப் பந்தல்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்ட சம்பவத்திற்குப் பின்னணியில் அரசியல்வாதிகள் சிலர் இருந்துள்ளனர் என்றும் - அவர் குற்றஞ்சாட்டினார்.

புத்தளத்தில் முஸ்லிம் காங்கிரஸ் மீதான காழ்ப்புணர்ச்சி காரணமாக - முஸ்லிம்கள் மீது பழி சுமத்தும் வகையில் - இச்சம்பவம் திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளது - என்றும் அவர் கூறினார்.

**நாளை**

மார்கழி 14
திங்கட்கிழமை
(29.12.2003)
திதி : ஷஷ்டி
மு.ப. 8.03 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி
முன்னிரவு 11.40 வரை.
சுபநேரம்: 12.28 - 1.58
ராகுகாலம்: 7.58 - 9.28
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

ஊரறிய விழுந்தவன் மட்டும் நகைக்கப்படுகின்றான். மற்றவன் தப்பித்துக்கொள்கிறான்.

# ஈழத்துச் சிதம்பரத்தில் நாளை திருவாதிரை உற்சவம் ஆரம்பம்



காரைநகர்,டிசெ.28

ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் காரைநகர் சிவன் கோயில் திருவாதிரை உற்சவம் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

தினமும் காலை 7 மணிக்கு மூலமூர்த்திகளுக்கு விசேட அபிஷேகமும் காலை 9.30 மணிக்கு திருவெம்பாவை ஓதலும், முற்பகல் 10.30 மணிக்கு வசந்த மண்டபப்பூசையும் தொடர்ந்து சுவாமி திருவீதி உலா வரும் காட்சியும் இடம்பெறும்.

திருவாதிரை உற்சவத்தின் தேர்த்திருவிழா எதிர்வரும் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறும். அன்றைய தினம் காலை 7 மணிக்கு வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து நடேசப் பெருமான் பரிவார மூர்த்திகளுடன் பஞ்சரதங்களில் பவனிவரும்காட்சி இடம்பெறும்.

மறுநாள் புதன்கிழமை அதிகாலை 2 மணி தொடக்கம் ஆருத்திரா அபிஷேகமும் 6 மணிக்கு ஆருத்திரா தரிசனமும் நடைபெறும். மாலை 3 மணிக்கு திருவூடல் உற்சவமும் தொடர்ந்து தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

இந்தத் திருவாதிரை உற்சவத்திற்கான விரிவான ஏற்பாடுகளை ஆலய ஆதீனகர்த்தாக்களும் மற்றும் சபையினரும் மேற்கொண்டுவருகின்றனர்.

உற்சவத்தையொட்டி பத்துத் தினங்களும் மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை, ஈழத்துச் சிதம்பர சைவ அறப்பணி நிலையம் என்பனவற்றில் அன்னதானம் வழங்கப்படும்.

உற்சவத்தின் இறுதி மூன்று தினங்களும் மணிவாசகர் சபையினரால் மணிவாசகர் விழாவும் நடத்தப்படவுள்ளது.

உற்வசகாலத்தில் தமிழக ஆதீன முதல்வர்களின் அருளுரைகளும், தமிழக பேரறிஞர்களின் சொற்பொழிவுகளும் இடம்பெறுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், பஞ்சரதபவனி, ஆருத்திரா தரிசனம் என்பனவற்றை இலங்கை வானொலி தேசிய சேவையில் நேரடியாக அஞ்சல் செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

உற்சவத்தில் பங்குபற்ற வரும் அடியார்களின் நன்மை கருதி வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் காரைநகர்சாலையினால் பத்துத்தினங்களும் யாழ். மத்திய பஸ் தரிப்பு நிலையத்தில் இருந்து ஆலயம்வரை விசேட பஸ் சேவை நடத்தப்படவுள்ளது. (எ-73)

## மாபெரும் மலிவு விற்பனை
27.12.2003 முதல் 14.01.2004 வரை

நவநாகரீக ஆடைத் தெரிவுக்கு
நம்பகமான சிறந்த இடம்:
அழகுக்கு அழகூட்டும் புத்தம்புதிய
ஆடைகளைப் பெற்றுக்கொள்ள

# மகாராசீ ரெக்ஸ்

- சிவா ரெக்ஸின் கிளை -
இல,132, புழையபூங்கா வீதி, கண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(சி.31971)(36-24-11-19)


## அமைச்சரவைச் செயலர் தலைமையில் குழு வருகிறது

யாழ்ப்பாணம்,டிசெ.27

அமைச்சரவைச் செயலாளர் வேர கொட தலைமையிலான குழுவொன்று நாளை திங்கட்கிழமை யாழ். குடா நாட்டிற்கு வருகைதரவுள்ளது.

அமைச்சரவைச் செயலாளருடன் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் ஒஸ்ரின் பேர்ணான்டோ மற்றும் பிரதமர் அலுவலகத்தைச் சேர்ந்த எஸ்.சிவானந்தன் ஆகியோ ரும் வருகின்றனர்.

இக்குழுவினர் அன்றையதினம் யாழ். செயலகத்தில் அரச அதிபர் செ.பத்மநாதனைச் சந்தித்து அடுத்த வருடம் யாழ். மாவட்டத்தில் மேற் கொள்ளவேண்டிய புனர்வாழ்வு..புன ரமைப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக் கைகள் தொடர்பாகக் கலந்துரையா டுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.(ம-5)

## பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழி காட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட் கொடைகளின் மூலம் என் உள்ளத்தைப் பக்குவப் படுத்தி, எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிப வரே! என் வாழ்வின் எந்தச் சந்தர்ப்பத்திலும் உற்ற துணையாக உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மில் இருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேன் என உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகிறேன்.

(26390) (24-11-19) - ஓர் இறை அடியாள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொக்குவில் இந்துக் கல்லூரியின் பிரதி அதிபராக, பழைய மாணவர் சங்கத் தலைவராக, வடமாகாண ஆசிரியர் சங்கச் செயலாளராக, யாழ். பாடசாலைக் கிரிக்கெட் சங்கச் செயலாளராக, பொருளாளராக, யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் பொருளாளராகச் சேவையாற்றி தற்போது தொலைத்தொடர்பு நிலைய (மோட்டறோலா) உரிமையாளர் சங்கத்தின் தலைவராக, இணுவில் நலன்புரிச் சங்கத்தின் தலைவராகச் செயலாற்றும்,

### திரு.தம்பிஐயா தேவராஜா அவர்கள்

அண்மையில் மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். அவரை மனமார வாழ்த்துவதோடு அவரது சமூகப்பணி தொடர வேண்டும் என்று இறைஆசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

இணுவில். (26375) (25-24-11-19) - நண்பர்கள்.






சாவகச்சேரி கல்வயலூர் திருவருள்மிகு
வேதவனப்பிள்ளையார் கோயில்

## சுபானு வருட விநாயகர் விரதவிழா

09.12.2003 கார்த்திகை 23ஆம் திகதி முதல் பிற்பகல் 2.30 மணிமுதல் ஸ்நபனாபிஷேகம், விஷேடபூஜை, பஞ்சமுகார்ச்சனை என்பன விமர்சையாக நிகழ்ந்து வருகின்றன.

இறுதிநாளாகிய
28.12.2003 மார்கழி 13ஆம் திகதி ஞாயிறு மதியம் 12மணிமுதல் கணபதி ஹோமம், கலசஅபிஷேகம், விஷேடபூஜை, உற்சவம் என்பன நிகழத் திருவருள் கூடியுள்ளது.

தொடர்ந்து திருவெம்பா அலங்கார உற்சவம்
மார்கழி 14ஆம் திகதி திங்கட்கிழமை முதல் அதிகாலை 5.30 மணி முதல் அபிஷேகம், பூஜை, உற்சவம் என்பன நிகழ்ந்து
06.01.2004 மார்கழி 22ஆம் திகதி செவ்வாய் தேர் உற்சவமும்
07.01.2004 மார்கழி 23ஆம் திகதி புதன் திருவாதிரை தீர்த்தோற்சவமும நடைபெற திருவருள் கூடியுள்ளது.

மேற்படி நிகழ்வுகளில் பங்குபற்றி விநாயகப்பெருமானின் திருவருளுக்கு பாத்திரமாவீர்களாக!

ஆலய நித்திய நைமித்திய பிரம்மஸ்ரீ சு.மஹாதேவசர்மா,
மஹோற்சவ நைமித்திய வேத வித்யாபூஷணம்
பிரம்மஸ்ரீ பால. முரளீதரக்குருக்கள் மாலை
விநாயகர் பணியில்
தர்மகர்த்தாவும் உபயகாரர்களும்.

(26401) (26-24-11-9)

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னரத்தினம் தம்பிராசா

மட்டுவில் தெற்கு, சிவன்கோயில் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி அன்னரத்தினம் தம்பிராசா 26.10.2003 வெள்ளிக்கிழமை திருநெல் வேலியில் காலமானார்.

அன்னார் அமரர்களான மட்டுவில் சின்னத்தம்பி - ஆச்சிமுத்து தம்பதிகளின அன்பு மகளும் அமரர்களான உடுவில் சின்னத்தம்பி - தையல்முத்து தம்பதி களின் அன்பு மருமகளும் தம்பிராசா (ஆசாரியார்) அவர்களின் பாசமிகு மனைவியும் கிருஸ்ணரின் அன்புச் சகோதரியும் கோபாலகிருஸ்ணன் (சவுதி), கதிர்காமநாதன், தேவராணி, கணேசலிங்கம் (ஜேர்மனி), சிவராணி (டென் மார்க்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் திலகவதி, திரிபுவதி (புவா), தர்ம குமார் (திருநெல்வேலி), உதயராணி (ஜேர்மனி), தேவபாலன் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமியாரும் தக்ஷாமினி, நிரஞ்சன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), வினோயன், கார்த்திகன், அருண்சாந் (கணிதப்பிரிவு, யாழ். இந்துக்கல்லூரி), ஷாழினி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), லாகினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), ஆரவி, மயூரன் (ஜேர்மனி), ஆதித்தியா, தேனுகா, மதுரிகா (டென்மார்க்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகல்10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்திரகாளி கோயிலடி,
நாவலடி வீதி,திருநெல்வேலி மேற்கு,
T.P.No.: 07770 30589. (26408)(38-24-11-19)

தகவல்:
க.கதிர்காமநாதன் (மகன்),
சி.தர்மகுமார் (மருமகன்).


# ELECTREX
POWER TOOLS

# எலெக்ற்றெக்ஸ்

## சக்திக் கருவிகள் - (Electrex Power Tools)

எலெக்ற்றெக்ஸ் (இந்தியா) வரையறுக்கப்பட்ட நிறுவனமானது **ISO 9000** முத்திரை மற்றும் **ISI** தரமுடைய (பிரிட்டிஷ் தரத்திற்குச் சமனானது) ஒரு பொதுப்பங்குடைமை நிறுவனமாகும். சக்திக் கருவிகள் எனப்படும் துளைபோடும் கருவிகள் (**Drills**), அரைக்கும் கருவிகள் (கோணம்) (**Angle Grinders**) வெட்டும் கருவிகள் (**Cutters**), (அலுமினியம், உருக்கு, கருங்கல், ஓடுகள் - முக்கியமாக வீடுகளின் தரையில் பதிக் கப் பயன்படுபவை - போன்றவற்றை வெட்டுவதற்காக), ஓர்பிட்டல் சான்டெர்ஸ் (**Orbital Sanders**), உளிகள் (**Planers**), அரிவதற்கான வாள்கள் (**Chain Saws**) போன்ற வற்றை உற்பத்தி செய்யும் இந்தியாவின் பெரிய நிறுவனமே எலெக்ற்றெக்ஸ் ஆகும்.

வீட்டுப் பாவனைக்கான மின் ஆளிகளையும் (**Electric Light Switches**) "ரொபின் (**Robin**)" அடையாளமுடைய இரட்டை மின்பிறப்பாக்கிகளையும் (**Coupled generators**) இந்நிறுவனம் சந்தைப்படுத்துகின்றது. **STC** பொது வர்த்தக வரையறுக்கப்பட்ட நிறுவனத்தினூடாக (**STC General Trading Co. Ltd.**) எலெக்ற்றெக்ஸ் (**Electrex**) நிறுவனத்தின் தயாரிப்புக்கள் இலங்கையில் இறக்குமதி செய்யப்படுகின்றன. எலெக்ற்றெக்ஸ் தயாரிப்புக்களுக்கு 6 மாதங்கள் உத்தரவாதம் அளிக்கப்படுகின்றன. விற்பனைக்குப் பிந்திய சேவை வழங்கப்படுவதுடன், தேவையான உதிரிப்பாகங்களும் இங்கே கிடைக்கும். எலெக்ற்றெக்ஸ் (இந்தியா) வரையறுக்கப்பட்ட நிறுவனம் (**Electrex (India) Ltd.**) தனது தயாரிப்புக்களை உலகளவில் ஏற்றுமதி செய்கின்றது. மேலும் யப்பானில் ஹிட்டாச்சி நிறுவனத்தில் (**Hitachi**) ஒரு **OEM** இதுவென்பதும் குறிப்பிடத்தக்கது. தனது உபகரணங்களை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் திருகோணமலையில் சந்தைப்படுத்தக்கூடிய நம்பகமான பங்குதாரர் / பங்குதாரர்களை எலெக்ற்றெக்ஸ் நிறுவனம் எதிர்பார்க்கின்றது. இலங்கைக்கான அந்நிறுவனத்தின் முகாமையாளர், இம்மாதம் 29 ஆம் திகதி நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் இருப்பார். முன் அனுமதி பெறவும் கலந்துரையாடவும் விரும்புவோர் 222 - 2490 என்ற தொலைபேசி எண்ணில் திரு.சி.குகராஜன் (**Mr. C.Kuharajan**) என்பவருடன் தொடர்புகொள்ளலாம்.

**Country Manager - Electrex Country Office.**
**C/O Mr.C.Kuharajan**

யாழ்ப்பாணத்தில் முகவரி:

இல.2, இரண்டாவது ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம்: 222 2490
செல்லிடத்தொலைபேசி இலக்கம்: 0776 008490
அலுவலகம்: 222 2733

(சி-31970) (24-11-19)

# வாசகர் திருமுகம்

## முதுமையும் நோயும் உள்ளோர் சேவை நீடிப்புக்கு விண்ணப்பிப்பதேன்?

மாநகரசபை அலுவலர்களின் இடமாற்றம் தொடர்பாக 17-12-2003 உதயனில் மாநகரசபையின் பொதுசனத்தொடர்பு அதிகாரி என்ற பதவித் தலைப்புடன் சில விளக்கங்கள் பிரசுரமாகியிருந்தன.

அதில் குறிப்பிட்ட சில விடயங்களுக்கு மாநகரசபைக்கு வரி செலுத்தும் பிரஜை என்ற ரீதியில் சில கேள்விகளை முன்வைக்கிறேன்.

இடமாற்றம் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் 57 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்றும் சேவை நீடிப்புப் பெற்று பணியாற்றுகிறார்கள் என்றும் மாறாத நோய்களுக்காக சிகிச்சை பெறுவோர் என்பதனாலும் மாவட்டத்துள் தூர இடங்களுக்குப் பிரயாணம் செய்வதோ சிகிச்சை பெறுவதோ சிரமம் என்பதைக் காரணம் காட்டியே தமது இடமாற்றத்தினை ரத்துச் செய்யும்படி மேன்முறையீடு செய்துள்ளதாக கூறியுள்ளீர்கள். வயோதிபமும் தீராத - மாறாத நோய்களும் உள்ளவர்கள் சிகிச்சையளிக்கப்பட வேண்டியவர்கள். 55 வயதுடன் ஓய்வுபெற்று வீடு சென்று தங்கள் ஓய்வையும் ஆரோக்கியத்தையும் பேணிக் கொண்டிருக்க வேண்டியவர்கள். பலவீனமும் நோயுமுள்ள மேற்படி உத்தியோகத்தர்கள் சேவை நீடிப்புக்கு ஏன் விண்ணப்பித்தார்கள்? சேவையை நீடிக்க பொருத்தப்பாடு அற்றவர்களின் விண்ணப்பங்களை ஆணையாளர் ஏன் சிபாரிசு செய்தார்? முதுமை, மாறாத நோய் என்பன உள்ளோர் தொடர்ந்தும் சேவை நீடிப்புப் பெற்று, இடமாற்றமின்றி அங்கேயே நிரந்தரமாகத் தங்கிவிட யாழ். மாநகர சபை என்ன வயோதிபர் மடமா? மாநகரசபையின் அதிகாரிகள் வரிசையில் முதலாவது நிலையிலுள்ள ஆணையாளர், செயலாளர் ஆகியோர் வடமராட்சியிலிருந்து தினமும் பஸ் பிரயாணம் மேற்கொண்டு மாநகர அலுவலகத்துக்கு வந்து போகிறார்கள் தானே. கூடிய தூரம், வயது முதிர்ச்சி, நோய் ஆகியன அவர்களுக்கும் உள்ளதனால் பிரயாணக் கஷ்டம், நோய்க்கு சிகிச்சை என்பவற்றை பொருட்படுத்தாமல் அவர்களும் வந்து போகிறார்கள் தானே. இடமாற்றம் பெறுவோரை மட்டும் இவை பாதிப்பதன் மர்மம் என்ன?

களஞ்சியப் பாவனைக்காக கட்டப்பட்ட கட்டடத்தில் இடவசதி, காற்றோட்ட வசதி போன்ற அடிப்படை வசதிகளற்ற நிலையில் ஊழியர்கள் பணியாற்றுவதாகக் கூறுகிறீர்கள். போர் நடந்த வேளையிலும் போர் ஓய்ந்திருக்கும் காலத்திலும என சில உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள், சில பிரதேச சபைகள், அரச அதிபர், பணிமனை சார்ந்த பெரிய கட்டடங்கள், யாழ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், வீரசிங்கம் மண்டபம் போன்ற புதிய கட்டடங்கள் மீளக்கட்டப்பட்டு எழுந்துள்ளன. உங்களுக்கான அலுவலகக் கட்டடத்தை கட்டியமைப்பதற்கான நிதியைப் பெறுவதற்கு அழுத்தமான தொடர் முயற்சிகளை ஏன் நீங்கள் மேற்கொள்ளவில்லை? மாநகர சபையின் பல முக்கிய பதவி நிலைகள் இன்னமும் பதில் பதவி நிலைகளாவே உள்ளன. இந்தப் பதவிகளுக்கு நிரந்தரமானவர்களை நியமிக்க ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பொதுசனத் தொடர்பு அதிகாரி பதவி கூட இப்படித்தான். இந்நிலை மாறவேண்டும்.

அரியாலையூர்- கிறிஸ்தோப்பர் சிலுவைராஜா

## நோயாளர்கள் மருந்து பெற கால் கடுக்க நிற்கும் நிலை

யாழ். போதனா வைத்தியசாலை குடாநாட்டு மக்களின் உயிர்காப்பு நிலையமாகச் செயற்பட்டு வருவது மறைக்கவோ அல்லது மறுக்கவோ முடியாத உண்மை என்பதைக் சகலருமறிவர். போதனா வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவிலே சிகிச்சை பெற்றுக்கொள்வதற்கு தினசரி ஆயிரக்கணக்கிலே நோயாளர்கள் வந்து போவதும் மறைக்க முடியாத உண்மையாகும். அதிகாலை வேளையுடன் வீட்டிலிருந்து புறப்பட்டு, அவரவர் நோய்க்காக வரிசையிலே இருந்து ஏன் நோயாளர் அதிகரிக்கும்போது இருக்கைகள் இன்றி 'கியூ' வரிசையிலே நின்று கொப்பிகளை எடுத்துக் கொண்டு, வைத்தியர்களை சந்தித்து நோய்க்குரிய மருந்துச் சிட்டைகளை எழுதிக்கொண்டு, நேராக மருந்து எடுக்கும் பகுதிக்கு செல்கின்றனர்.

பிரச்சினை அங்கே தான் உதயமாகின்றது. அநேகமாக வெளிநோயாளர் பிரிவுக்கு கிளினிக்குகளுக்கு வருவோர்களில் பெண்கள், வயோதிபர்கள், தொடர் நோய்களுக்கு சிகிச்சை பெறுவோர், சத்திர சிகிச்சைக்குட்பட்டோர், என்று வகை தொகையின்றி வந்து போவதை நேரிலே அவதானிப்பதன்மூலம் உண்மை தெரியவரும். இத்தகையவர்கள் மருந்து எடுக்கும் பகுதிக்கு வரும்போது பெரும்பாலும் களைத்துப் போய் விடுவார்கள். மருந்து எடுக்கும் பகுதி ஐந்து பிரிவுகளாக ஒதுக்கி, அதற்குரிய வரிசைகளையும் அமைத்துள்ள போதிலும் ஒரு வரிசை மட்டுமே பெரும்பாலும் இயங்கி வருகிறது. இதனால் மருந்து எடுக்க வரும் நோயாளர்கள் நீண்ட நேரம் மணிக்கணக்கிலே கால்கடுக்க நின்றுதான் மருந்து எடுக்கும் நிலை தொடர்கிறது. 'கியூ' அதிகரித்து நோயாளர்களின் சிரமங்களைக் காணும்போது மட்டுமே இரண்டாவது வரிசைக்கதவு திறக்கப்பட்டு, அதுவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலே மருந்து வழங்கப்பட்டு வருகின்றது.

இப்படி மணிக்கணக்கிலே நோயாளர்கள், வயோதிபர்கள், பெண்கள் நிற்கமுடியாது திண்டாடுவதை நிர்வாகம் உணரமறுப்பதேன்? கூடுதலானவர்களை பணிக்கு அமர்த்தி வரும் நோயார்களுக்கு உதவ முடியாதா? மருந்து வழங்கும் ஏனைய பகுதிகளையும் திறந்து மருந்துகளை வழங்குவதன் மூலம் வரும் நோயாளர் குறை தீருமல்லவா!

குடாநாட்டு மக்களின் உயிர்காப்பு நிலையம் நோயாளர்களை அலைக்கழிய விடலாமா?

பணிப்பாளர் அவர்களுக்கு இது சமர்ப்பணம்.

ப.உதயகுமார். அலவெட்டி வடக்கு



யாழ். சைவபரிபாலன சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 124ஆவது குருபூசை நிகழ்வுகள் அண்மையில் நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றன. நிகழ்வில் அருளுரையை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் நிகழ்த்துவதை முதலாவது படத்திலும் -

குருபூசை தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பேச்சு, கட்டுரைப்போட்டிகளில் பரிசில்பெற்ற மாணவர்களை இரண்டாவது படத்திலும் காணலாம். நிகழ்வின் தலைவர் சைவப்புலவர் வ.கந்தசாமி, பிரதம விருந்தினரான கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

# இளைஞர், யுவதிகளின் வேலைவாய்ப்புகளில் ஓய்வுபெற்றோர் நியமனத்தால் பாதிப்பு!

## இணையத்தின் மாதாந்த அறிக்கையில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.28

அரசாங்க சேவையில் இருந்து ஓய்வுபெற்றவர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் மீள நியமனம் வழங்கப்படுவதால், யாழ். குடாநாட்டிலுள்ள படித்த இளைஞர், யுவதிகள் வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளமுடியாதுள்ளது.

அரச சார்ப்பற்ற நிறுவனங்களின் இணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் கடந்த ஒக்ரோபர் மாத நிலைவரம் குறித்து அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். குடாநாட்டில் வேலையில்லாப் பிரச்சினை அதி உச்சநிலையை அடைந்துள்ளது. இங்குள்ள படித்த இளைஞர், யுவதிகளுக்கு அவர்களது தகுதிக்கேற்ற வேலை வாய்ப்புகள் கிடைப்பதில்லை. அதனால், அவர்கள் மன விரக்தி அடைந்து காணப்படுகின்றனர். குடாநாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்திருப்பதற்கு வேலையில்லாப்பிரச்சினையே முக்கிய காரணமாகும்.

அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் கடந்த வருடம் யாழ். குடாநாட்டில் மேற்கொண்ட ஆய்வில் சுமார் 89ஆயிரம் பேர் வேலை வாய்ப்புகள் அற்ற நிலையிலும், சுமார் ஒரு லட்சத்து 10 ஆயிரம் பேர் தமது தகுதிக்கேற்ற வேலை கிடைக்காமல், கிடைத்த வேலையில் ஈடுபட்டு வருவதனையும் தெரிந்து கொள்ள முடிகிறது.

குடாநாட்டில் வேலைவாய்ப்பின்றி இருக்கும் இளைஞர், யுவதிகளுக்குப் பொருத்தமான வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொடுப்பதற்கு உரியவர்கள் தவறும் பட்சத்தில் இந்த மண்ணின் கலாசாரம் சீரழிக்கப்பட்டு குற்றச்செயல்களும், பாலியல் துஷ்பிரயோகங்களும் அதிகரித்துக் கொண்டே செல்லும்.

யாழ். குடாநாட்டிலுள்ள அரச திணைக்களங்கள் மற்றும் தனியார் துறைகளிலும் பல்லாயிரக்கணக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. படித்த இளைஞர், யுவதிகளுக்கு இந்தத் துறைகளில் வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதற்கு எவரும் முன்வரவில்லை.

இதேவேளை, அரச திணைக்களங்களில் உள்ள வெற்றிடங்களிற்கு ஓய்வுபெற்றவர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்படுகின்றனர்.

பொதுவாக 60வயது அடைந்த ஒருவர் தனது பணியை ஏற்றவகையில் நிறைவேற்றுவதற்கு உடல் உளரீதியாகத் தகுதி அற்றவராகின்றார். இதன் அடிப்படையிலேயே அரச சேவையில் உள்ளவர்களில் 60 வயது அடைந்தோருக்கு ஓய்வு வழங்கப்பட்டு வருகிறது.

ஓய்வுபெற்றவர்களை ஒப்பந்த அடிப்படையில் வேலையில் அமர்த்துவதனால் நிர்வாக நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன. இந்த நிலைமை யாழ். மாவட்டத் திணைக்கள அலுவலகங்களில் மட்டுமன்றி, கிழக்கு மாகாணத் திணைக்களங்களிலும் இடம் பெற்று வருகின்றது. இது மாற்றியமைக்கப்பட்டு நிர்வாகத்துறையில் இளைஞர், யுவதிகள் வேலைவாய்ப்புப் பெற வழி ஏற்படுத்தப்பட வேண்டும்.

- என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-5)

### வான் விபத்தில் குடும்பஸ்தர் மரணம்!

பேருவளை,டிசெ.28

நத்தார் தின விருந்துபசாரமொன்றில் கலந்துகொண்ட பின் வீடு திரும்பிக்கொண்டிருந்த மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் வீதியைக் கடக்க முற்பட்டபோது வான் ஒன்றுடன் விபத்துக்குள்ளாகி உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் பயாகலையில் இடம்பெற்றுள்ளது.

ஹோவாகெட பகுதியைச் சேர்ந்த என்.கே.முனசிங்க (வயது39) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

பயாகலைப் பொலீஸார் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

### மந்துவில் மேற்கில் வீடுகள் ஒப்படைப்பு பிற்போடப்பட்டது

தென்மராட்சி,டிசெ.28

மந்துவில் மேற்கில் படையினர் நிலைகொண்டுள்ள வீடுகளை உரிமையாளர்களிடம் வழங்குவது எதிர்வரும் 31ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வீடுகள் நேற்று உரிமையாளர்களிடம் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டதையடுத்து அங்குசென்ற குடியிருப்பாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்

இந்த வீடுகளிலிருந்து வெளியேறுவதற்கான முன்னேற்பாடாக காவலரண்கள், முட்கம்பி வேலிகள் ஆகியவற்றைப் படையினர் அகற்றியிருந்தனர். எனினும் 52ஆவது படையணித் தளபதியிடமிருந்து உத்தரவு கிடைக்காததால் வீடுகளைக் கையளிக்க முடியவில்லை என முகாமில் உள்ள படையினர் தெரிவித்ததாக வீட்டு உரிமையாளர்களால் கூறப்பட்டது. (ம-117)

# செய்திக் கொத்து

### சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.28

யாழ். மாநகரசபையினால் சுற்றுப்புறச்சூழலைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்படி மாநகரசபை எல்லைக்குள் உள்ள தொழிற்சாலைகள் மற்றும நிறுவனங்கள் என்பவற்றுக்கு சில அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. (ம-10-6)

### விவசாயக்குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.28

யாழ். மாவட்ட விவசாயக் குழுவின் கூட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். செயலக கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பிரதேச செயலர்கள் மற்றும் விவசாயத் திணைக்களம், கமநல அபிவிருத்தித் திணைக்களம ஆகியவற்றின் அதிகாரிகள் ஆகியோர கலந்துகொள்ளவுள்ளனர்.(ம-10-139)

### நிதி உதவி

யாழ்ப்பாணம்,டிசெ.28

பிரான்பற்று நாவலர் சனசமூக நிலையத்துக்கு இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் 5 லட்சம ரூபா நிதியை வழங்கியுள்ளார். வறுமைக் கோட்டின் கீழ்வாழும் 19 குடும்பங்களுக்கு அரை நிரந்தர வீடுகளை அமைக்கவே அமைச்சர் இந்த நிதியை வழங்கியுள்ளார்.(ம-10-185)

### முதியோர் சங்கம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம்,டிசெ.28

நவாலி தெற்கு கிராம அலுவலர் பிரிவில் முதியோர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது. கிராம அலுவலர் கு.எழில் செல்வன் தலைமையில் நடைபெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் சங்கத்தின் தலைவராக பேதுரு பிலிப்ஸ் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.(ம-10-185)

### நுளம்பு வலைகளுக்கு மருந்து தெளிப்பு!

யாழ்ப்பாணம்,டிசெ.28

மானிப்பாய் பிரதேச சபையின் ஆனைக்கோட்டை உப அலுவலகத்துக்கு உட்பட்ட பகுதி மக்களின் நுளம்பு வலைகளுக்கு அண்மையில மருந்து தெளிக்கப்பட்டுள்ளது. சுதுமலை, ஆனைக்கோட்டை, நவாலி ஆகிய பகுதிகளிலேயே மருந்து தெளிக்கப்பட்டது. (ம-10-185)

### வீதி சேதம்

யாழ்ப்பாணம்,டிசெ.28

சங்கானை அரசினர் வைத்தியசாலைக்குச் செல்லும் வீதி சேதமுற்றுள்ளமையால் மக்கள் போக்குவரத்துச் செய்வதில் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சங்கானை மேற்கு சனசமூக நிலையத்தினால் வலி. தென்மேற்கு பிரதேச சபையின் செயலாளருக்குக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-10-185)

### இடமாற்றம்

யாழ்ப்பாணம்,டிசெ.28

ஆனைக்கோட்டை,சாவல்கட்டு தாரகா விதவைகள் மலர்வு மையம் சுதுமலை வடக்கில் உள்ள புதிய கட்டடமொன்றில் இயங்கிவருகிறது. கடந்த 22ஆம் திகதிமுதல் புதிய இடத்தில் இயங்கி வருகிறது. (ம-10-185)

### அபிவிருத்தித் திட்டங்கள்

புதிய ஆண்டில் யாழ். பல நோ. கூ. சங்கத்தினால் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. கடந்தவாரம் இடம்பெற்ற சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. பொதுமக்களின் நன்மை கருதிய திட்டங்களே முன்னெடுக்கப்படவுள்ளன. (ம-10-17)

### மக்கள் தேவைத் திட்டங்கள்

வலி. தென்மேற்கு பிரதேச செயலா பிரிவுக்குட்பட்ட இடம்பெயர்ந்த மற்றும மீளக்குடியமர்ந்த மக்களின் தேவைகள் தொடர்பான திட்டங்கள் பிரதேச செயலரினால் தயாரிக்கப்பட்டு வருகின்றன. புதிய ஆண்டில் செயற்படுத்தக் கூடியவாறு இத்திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. (ம-10-185)

### வீதி புனரமைப்பு

கடந்த 20 வருடங்களுக்கு மேலாகப் புனரமைக்கப்படாதிருந்த சங்கானை சந்தைக்கு அருகில் செல்லும் வீதி அண்மையில் புனரமைக்கப்பட்டுள்ளது. இவ்வீதியுடன் இணைந்து செல்லும் ஓடக்கரை வீதி இன்னும் புனரமைக்கப்படாமலேயே உள்ளது. (ம-10-29)

### சனசமூக நிலையம் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.28

'அமடா' (Amda) நிறுவனத்தினால் கைதடி, நாவற்குழி தெற்கில் அமைத்துக் கொடுக்கப்பட்ட ஸ்ரீமகா விஷ்ணு சனசமூக நிலையம் கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டது. (ஐ-10)

### மருந்து விசிறுவதால் மக்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ 28

திருநெல்வேலிப் பகுதியில் உள்ள சில விவசாயத் தோட்டங்களில் வலுக்கூடிய தெளிகருவி மூலம் மருந்துகள் விசிறப்படுவதால் அப்பகுதியில் உள்ள மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இதுகுறித்து அப்பகுதி மக்கள் உரியவர்களிடம் முறையிடும் இந்நிலை தொடருவதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ஐ-10-69)

### காயம்

ஓடிக்கொண்டிருந்த மோட்டார்சைக்கிளை திடீரென நிறுத்தியபோது அதிலிருந்து தூக்கி வீசப்பட்டநபர் காயமடைந்தார்.

கந்தரோடையைச் சேர்ந்த சின்னராசா சுஜீபன் (வயது23) என்பவரே காயமடைந்தவராவார். (ஐ-10-15)

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

**இதோ பாவியுங்கள்!**

*கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட*

**சித்தாரா பொன்னாங்காணி தைலம்**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும். கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-228

யாழ்.மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல.-021-222-2567
(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்)

(21-18) (சி-31679)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



*வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இலங்கை மின்சார சபை பிராந்திய அபிவிருத்திப் பொறியியலாளர்*

**லயன். திரு. வி. வேலுப்பிள்ளை**

B.Sc. M.I.E.E.

அவர்கள் அகில இலங்கைக்கான சமாதான நீதிவானாக உயர்நீதிமன்ற நீதிபதி உயர்திரு. கு.பொ.சி. வரதராசா அவர்கள் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் கிராம மக்களுக்கு ஒளிவசதி செய்தமைக்காக அவரது சேவையைப் பாராட்டியும் இன்னும் மேலும் பல பொதுச் சேவைகளாற்றிப் பணி தொடரவேண்டுமென்றும் தொல்புரம் வாழ் மக்கள் செல்வா சனசமூக நிலையம் சார்பாக இறை ஆசி வேண்டிப் பாராட்டி வாழ்த்துகின்றார்கள்.

*செல்வா சனசமூக நிலையம்,*
*தொல்புரம்.* (21-18)

திரு. ஞா. சிதம்பரநாதன் J.P.
தலைவர். (26381)


மாபெரும் மலிவு விற்பனை!!!

யாழ் நகரில் - இதுவரை எங்கும் கிடைத்திராத பல புதிய ஓவிய உபகரணங்களை அறிமுகப்படுத்தி, மிகக் குறைந்த விலையில் - விற்பனை செய்து வரும்

உங்கள்

**இமேஜ் ஆட் சென்றம்**

அழகியல் கலைஞர்களினை ஊக்குவிக்கும் நோக்குடன் வாடிக்கையாளருக்கு 10% வரையான விசேட விலைக்கழிவினை வழங்குகின்றது.
வர்த்தகர்களுக்கு விசேட விலைச்சலுகை வழங்கப்படுகின்றது.

| துணி வர்ணங்களான - | | | |
|---|---|---|---|
| சன்பிளவர் கிட் | - 370/- | கிலிட்டர் (PLAID) | - 130/- |
| டியூபுல் கிட் | - 240/- | ரெக்ஸ் மீடியம் 1 & 2 | - 50/- |
| பெயிரி கிட் | - 240/- | எம்போஸ் பிறின்ட் (50ml) | - 70/- |
| கிலவ் கிட் | - 155/- | பேர்ள் பிறின்ட் | - 70/- |
| பேர்ள் கிட் | - 185/- | குளோஸ் பிறின்ட் | - 70/- |
| 15 ml தனி வர்ணம் | - 40/- | ஆர். பி. டபிள்யு | - 70/- |
| | | பப்ரிக் குளு (80ml) | - 70/- |

மேற்கூறிய விலையிலிருந்து 10% வரை விலைக்கழிவு வழங்கப்படுகிறது.

10% வரையான விசேட விலைத் தள்ளுபடி...

IMAGE ART CENTRUM
கே.கே.எஸ். வீதி, கொக்குவில்.
(இணுவில் சந்திக்கு முன்னால்...)


# அறிவித்தல்

பின்னுறுதி தீர்வை

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

**மகேந்திரநாதன் பெண் கல்யாணி**
மயிலங்காடு, சுன்னாகம். - வழக்காளி

**வழ. இல: மணநீக்கம்/198**

எதிராக

செல்லர் மகேந்திரநாதன்
ஊரெழு மேற்கு, ஊரெழு
தற்போதைய விலாசம் தெரியாது

- எதிராளி

இவ்வழக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் 2003ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 22ஆம் திகதி மாவட்ட நீதிபதி திருமதி. ச. இளங்கோவன் அவர்கள் முன்னிலையில் வழக்காளியும், வழக்காளி சார்பில் சட்டத்தரணி திரு. இ. வசந்தசேனனும் சமுகமாயிருக்க எதிராளியின் முகவரி தெரியாதபடியால் எதிராளிக்கான அழைப்புக் கட்டளையை உதயன் பத்திரிகையில் 19.08.2003 அன்று பிரசுரிக்கப்பட்டு எதிராளி மன்றுக்கு சமுகமளிக்காதபடியால் ஒருமுக விளக்கத்துக்கு எடுக்கப்பட்டு வழக்காளியின் சாட்சியம் பதியப்பட்டு வழக்காளியின் சாட்சியம், பிராது, ஆவணம் ஆகியவற்றை மன்று பரிசீலித்து வழக்காளியை எதிராளி வன்மமாக பிரிந்து வாழ்ந்து வருவதால் எதிராளி வன்ம உறவறுப்பு புரிந்தார் என்று திருப்திப்பட்டதன் பேரில் வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையே 1982 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 19 ஆம் திகதி நடைபெற்ற பதிவுத்திருமணத்தை இரத்துச் செய்து இத்திருமணத்தின் மூலம் பிறந்த மூன்று பிள்ளைகளையும் வழக்காளியுடனே, வழக்காளியின் பாதுகாப்பில் இருக்கவேண்டும் என்று கட்டளையிட்டு பின்முற்றாகும் தீர்வை வழங்கப்பட்டு இப்பின் முற்றாகும் தீர்வையின் பிரதி உதயன் பத்திரிகையில் பிரசுரித்து பிரசுரித்த நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் எதுவும் ஆட்சேபனை தெரிவிக்காதபட்சத்தில் இப்பின்முற்றாகும் தீர்வை முற்றானதாக்கப்படும்.

2003 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 22 ஆம் திகதி

வரைவு - இ.வசந்தசேனன்.
வழக்காளியின் சட்டத்தரணி.

ஒப்பம் ச.இளங்கோவன்
மாவட்ட நீதிபதி,
மல்லாகம்.

மன்றின் கட்டளைப்படி.

**ம.செல்வரத்தினம்,**
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
மல்லாகம்.

திகதி: 28.12.2003 (C/32322)(34-21-18)

## மரக்கன்றுகள் விநியோகம்

வடமராட்சி கிழக்கு,டிசெ.28

வடமராட்சி கிழக்கில் மரநடுகையை ஊக்குவிக்கும் முகமாக விவசாயத் திணைக்களம் மரக்கன்றுகளை வழங்கியுள்ளது.

கேவில், போக்கறுப்பு கிராமங்களில உள்ள 50 குடும்பங்களுக்கு தலா 10 மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. மலைவேம்பு, தேக்கு, கமுகு, மரமுந்திரிகை ஆகிய மரங்களே இவ்வாறு வழங்கப்பட்டன. (எ-182)

## ஆற்றல் மேம்படுத்தல் பயிற்சி நெறி

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கிராமமட்ட அமைப்புக்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்கான பயிற்சிநெறி மூன்று நாள்கள் நடத்தப்படவுள்ளன.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 31 ஆம் திகதிவரை இந்தப் பயிற்சிநெறி நடத்தப்படவுள்ளது.

கிராமிய புனரமைப்புக்குழுக்களின தலைவர்கள் உட்பட பொதுஅமைப்புகளின் தலைவர்களுக்கு இப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. (எ-182)

## தபால் நிலையத்தை மீள ஆரம்பிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.28

மருதங்கேணியில் தபால்நிலையத்தை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்குமாறு வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு நிறுவனம் யாழ் அரச அதிபர் செ.பத்மநாதனிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மருதங்கேணிப்பிரதேசத்தில் 7 உப தபால் நிலையங்கள் இயங்கி வருகின்றன. இப்பிரதேசத்தில் தபால நிலையம் ஒன்று இல்லாத குறையை நீக்கும முகமாக அரச பிரதான அலுவலகங்கள் அமைந்துள்ள மருதங்கேணியில் தபால் நிலையத்தை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-182)

## பதவியுயர்வுக்கான நேர்முகப்பரீட்சை

வடமராட்சி கிழக்கு,டிசெ.28

யாழ். மாவட்டத்தில் பதவியுயர்வு வழங்கப்படாத கிராமசேவை அலுவலர்களின் மேன்முறையீட்டை அடுத்து அவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகளை யாழ்.செயலகத்தில் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மாவட்டத்தைச் சேர்ந்த 62 கிராம சேவை அலுவலர்கள் தமக்கு, கிராம சேவை அலுவலர் தரம் 1 பதவி உயர்வு கிடைக்காததை ஆட்சேபித்து மேன்முறையீடு செய்திருந்தனர். இவர்களுக்கே நாளை திங்கட்கிழமை தொடக்கம் யாழ்.செயலகத்தில் நேர்முகப்பரீட்சை நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-182)

## விதவைக் குடும்பங்களுக்கு நல்லின ஆடுகள்

வடமராட்சி கிழக்கில், கேவில் கிராம சேவையாளர் பிரிவிலுள்ள 12 விதவைக் குடும்பங்களுக்கு சுயதொழில் முயற்சியை ஊக்குவிக்கும் முகமாக நல்லின ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன.

'மோவி மொண்டோ' நிறுவனத்தால குடும்பம் ஒன்றுக்கு தலா ஐந்து ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த ஆடுகளைப் பெற்றவர்களுக்கான பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு வடமராட்சி கால்நடை வைத்திய அதிகாரியினால கேவில் அ.த.க. பாடசாலையில் நடத்தப்படவுள்ளது. (எ-182)


**தேவை**

மோட்டார் சைக்கிள், ஓட்டோ என்பவற்றிற்கு சேவிஸ் செய்வதற்கும், திருத்துவதற்கும் ஆள்கள் தேவை. பழக விரும்புபவர்களும் வரலாம்.
பழகும் காலத்திலும் சம்பளம் வழங்கப்படும்.

சந்நிதி முருகன்
வேக்சொப் & சேர்விஸ்
241, பருத்தித்துறை வீதி
யாழ்ப்பாணம்

**விற்பனையாளர்கள் தேவை**

கண்ணாடி வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் தேவை.

சம்பளம் நேரில் பேசிக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு:

த குமாரசாமி அன் சன்ஸ்,
248/1, கே.கே.எஸ். வீதி.
யாழ்ப்பாணம்.

(26385)(16-31-11)


# இரண்டாவது பிறந்ததின வாழ்த்து



கைதடிச் சந்தி, மின்னொளி வீதியைச் சேர்ந்த
**ஜெயக்கொடி - கலா**
தம்பதிகளின் ஏகபுதல்வன்

**விதுசன்**

**(விதுக்குட்டி)**

தனது இரண்டாவது பிறந்ததினத்தை தனது இல்லத்தில் இன்று (28.12.2003) ஞாயிற்றுக் கிழமை வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அம்மா, அப்பா, கலானந்தன் மாமா, ஈஸ்வரன் பெரியப்பா, சறோப் பெரியம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, மாமாமார், அத்தைமார், அத்தான்மார், மச்சிமார், பெரியம்மாமார், பெரியப்பாமார், சித்திமார், சித்தப்பாமார், அக்காமார், அண்ணாமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

மின்னொளி வீதி.
கைதடிச்சந்தி. கைதடி.

(26364)(34-21-18)

க. ஜெயக்கொடி
(தகப்பன்).

# O+ சிறுநீரகம் தேவை

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி மாவட்ட முன்னாள் செயலாளர் திரு. பொன். விநாயகமூர்த்தி அவர்களுக்கு அவசரமாக O+ ரக சிறுநீரகம் தேவைப்படுகிறது. தானமாக வழங்கக்கூடியவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

சன்மானம் வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு: 0777774718, 0777286904, 077-6176890.**

K.குமார்,
66/3, பழம்வீதி, கந்தர்மடம்.

(26132)(34)

# 4 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 01 | | 28 |
| - | | - |
| 02 | | 12 |
| - | | - |
| 1924 | | 1999 |



அமரர்

**பொன்னையா ஆறுமுகம்**

திதி: 28.12.2003

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
நான்கு ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவு எங்கள் மனதை
விட்டகலாது!

*15/1, முதலாம் ஒழுங்கை,*
*பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (26389) (25-21-18)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 13 | | 21 |
| - | | - |
| 06 | | 12 |
| - | | - |
| 1941 | | 2001 |



**அமரர் பொன்னம்பலம் விஜயரட்ணம்**

(ஓய்வுபெற்ற சாலைப்பரிசோதகர் இ.போ.ச. கோண்டாவில்)

திதி: 28.12.2003

ஆண்டுகள் இரண்டு மறைந்தாலும்
ஆறவில்லை எம் துயரம்
உங்கள் ஆத்மா சாந்தியுற
அனுதினம் ஆண்டவனை
வேண்டுகின்றோம்.

*கலைவாணி வீதி,*
*கோண்டாவில் வடக்கு. கோண்டாவில்.*

- மனைவி. மக்கள். மருமகன்.

(26319)(25-18-21)


# இழப்புக்களை மட்டும் தகுதியாகக் காட்டி முஸ்லிம்கள் மூன்றாம் தரப்பைக் கேட்க முடியாது!

## மனோ கணேசன் சொல்கிறார்

அரசு - புலிகள் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு ஒன்றரை ஆண்டுகள் கடந்துவிட்ட போதும் தமிழர் பகுதியில் போர் நின்றதைத் தவிர வேறு ஏதாவது முன்னேற்றங்கள் இருக்கின்றனவா என்பது பற்றிய அலசல் இந்தப் பகுதியில் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இதுவரை செவ்வி வழங்கியவர்களின் கருத்துக்களின்படி புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சொல்லப்பட்ட தன்படியான மக்களின் இயல்புவாழ்க்கை தமிழர் தாயகப்பகுதியில் ஏற்படவில்லை என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தல் சொலலப்பட்ட பல விடயங்கள் இதுவரை நடைமுறைபடுத்தப்படவில்லை என்பது செவ்விகள் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

அந்தவகையில், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மேல் மாகாண மக்கள் முன்னணித் தலைவருமான மனோ கணேசனின் செவ்வி இன்று வெளிவருகின்றது.




▲ *கேள்வி:* புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்த பின்னர் தமிழ் மக்கள் வாழ்வில் ஏதாவது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா?

✪ *பதில்:* புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் யுத்தம் நின்றுள்ளது. இதைத்தான் சாதகமான விடயமாக பார்க்கமுடியும். தமிழ் மக்களை பொறுத்தவரையில் வேறு எந்தவிதமான முன்னேற்றங்களும் ஏற்பட்டதாக அறியமுடியவில்லை.

மேல் மாகாணத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் என்றவகையில், அங்குவாழும் தமிழ்மக்களிடையேயும் பெரும் மாற்றத்தை இங்கு உடன்பாடு ஏற்படுத்திவிடவில்லை எனக்கூறுகின்றேன். வடக்கு-கிழக்கு குறிப்பாக வன்னி, யாழ்ப்பாணம் ஆகியபகுதிகளுக்கு பல தடவைகள் வந்துள்ளேன். மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறைப் பகுதிகளுக்கும் சென்றுள்ளேன் ஆனால், வடக்கு-கிழக்கில் எந்தப் பகுதியிலும் உடன்படிக்கை சாதகமான சூழ்நிலையை உருவாக்கிவிட வில்லை என்பதையே அவதானித்தேன்.

மறுபக்கத்தில் சிங்களமக்களை எடுத்துக்கொண்டால் அவர் கள் மத்தியில் இருந்த அச்ச உணர்வு இன்று முழுமையாக அகன்று விட்டது. இதன் காரணமாக சமாதானத்தில் அவர்கள் ஆரம்பத்தில் கொண்டிருந்த அவா இன்று தணிந்துவிட்டதையே காணக்கூடியாதாக இருக்கின்றது. தெற்கில் குண்டுகள் வெடிக்க, வடக்கு- கிழக்கு போர்முனைகளில் இருந்து சிங்கள இராணுவத்தின் சடலங்கள் வந்துகுவிந்துகொண்டிருந்த காலகட்டத்தில் சிங்கள மக்களுக்கு இருந்த சுமைகள் எல்லாம் இன்று முழுமையாக அகன்றுவிட்டன.

தமிழ்மக்கள் மத்தியில் பொருளாதாரச் சுமைகள் குறைந்துள்ளபோதும் அழிவுகள் இன்னமும் சீராக்கப்படவில்லை. யுத்தவடுக்கள் எங்கும் காட்சியளிக்கின்றன ஒட்டுமொத்தமாக புரிந்துணர்வு உடன்படிக்கையின் பயனை நோக்கும் போது, தமிழ் மக்களைவிட தென்னிலங்கை சிங்கள மக்களுக்குத்தான் நல்ல சாதகமான விளைவை ஏற்படுத்தியுள்ளது

**செவ்வி கண்டவர்: குகா**

சிங்கள மக்கள் நிம்மதிப் பெருமூச்சுவிடுவதை வரவேற்கின்றேன். நீண்ட யுத்தத்தை சந்தித்து துன்பங்களை சுமந்த தமிழ் மக்களுக்கும் மலையக தமிழ்மக்களுக்கும் இந்த உடன்படிக்கை சொல்லக்கூடிய அளவு பெரும் நன்மையைத் தரவில்லை. இது கவலையைத்தரும் விடயமாகும்.

▲ *கேள்வி:* ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி காரணமாகவும் ஜனாதிபதி வசம் பாதுகாப்பு அமைச்சு இருப் பதன் காரண மாகவும் தெற் கில் தமிழ்மக்கள் மீதான தேடுதல் கெடுபிடிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனக் கூறப்படுவதுகுறித்து...?

✪ *பதில்:* பாதுகாப்பு அமைச்சையும் உள்துறை அமைச்சையும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசிடம் இருந்து பிடுங்கி எடுத்து ஜனாதிபதி தன்வசப்படுத்தியுள்ளார். இந்த நிலையில், பொலீஸ், இராணுவ அதிகாரங்களைப் பயன்படுத்தி தமிழ் மக்கள்மீது கெடுபிடிகள் ஆரம்பிக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. அங்கு தமிழ்மக்களுக்குத் தலைமை ஒன்று இருப்பதால் இதுவிடயத்தில் அந்தத் தலைமை அவதானமாகவும் எச்சரிக்கையாகவும் இருக்கின்றது. தமிழர்கள் என்ற வகையில் இராணுவத்தாலும் பொலீஸாராலும் துன்புறுத்தலுக்கு உள்ளாக நாங்கள் அனுமதிக்கமாட்டோம். அனுமதிக்கவும் போவதில்லை.

கொழும்பு மாநகரசபைக்குட்பட்ட 19 பொலீஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளையும் சந்தித்துள்ளேன். ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான நெருக்கடி நிலையை வைத்துக்கொண்டு தமிழர்களுக்கு ஏதிராக நடவடிக்கை ஏதும் எடுத்தால், தீவிரமான போராட்டங்கள் நடத்தவேண்டிய நிலைவரும் என்று அவர்களிடம் கூறியுள்ளேன். பெரியளவில் எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்பதுதான் உண்மை.

▲ *கேள்வி:* வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாகம் தொடர்பான வரைவு ஒன்றை விடுதலைப் புலிகள் அரசிடம் கையளித்துள்ளனர். இந்நிலையில், பாதுகாப்பு அமைச்சை ஜனா திபதி பொறுப்பேற்றுள்ளார். ஜனாதிபதியின் செயல் அவருக்கு சமாதான முயற்சியில் ஆர்வம் இல்லை என்பதைக் காட்டுகின் றதா?

✪ *பதில்:* இடைக்கால நிர்வாக வரைவு தமிழீழத்தின் மாற்று வடிவம் என்று ஜனாதிபதி அன்று கூறினார். "நாட்டின் பாதுகாப்பு நிலைமை மோசமாகிவிட்டது. பாதுகாப்புநிலை புலிகளுக்கு தாரைவார்க்கப்பட்டு விட்டது" என்று கூறித்தான் பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி பறித்தார். புலிகளின் ஆலோசனைகள் பேச்சை ஆரம்பிக்க அடிப்படையாக அமைகின்றன" என்று ஜனாதிபதி இன்று கூறுகின்றார். பாதுகாப்பு அமைச்சை பொறுப் பேற்ற பின்னர் சமாதானத்துக்கு சாதகமான சமிக்ஞைகளை ஜனாதிபதி காட்டுகிறார். யாழ். மாவட்ட இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவை மாற்றியது உட்பட பலவிட யங்களை ஜனாதிபதி செய்து காட்டியுள்ளார். குரங்குபாஞ்சான் முகாம் குறித்து வானளாவிய அளவில் குரல் எழுப்பியிருந்தார். இன்று அந்த முகாம் தொடர்பாக மௌனமாக இருக்கின் றார்.

இவற்றை நோக்கும்போது, ஜனாதிபதி அரசியல் இலாபம் கருதி செயற்படுகின்றார் என்றுதான் கூற வேண்டும். அவரது நல்ல செயற்பாடு கள் எல்லாம் அரசியல் நோக்கம் கொண்டவையாகத்தான் இருக்கின்ற னவே தவிர, அவர் உண்மையில் சமாதானப் பேச்சு ஆரம் பிக்கவேண்டும் என்று சிந்திப்பதாக கருதமுடியா துள்ளது. இத்தகைய நிலை யைத் தமிழ் மக்களாகிய நாங் கள் நிராகரித்துவிட்டு, நாம் சொல்லும்பாதையில் செல்ல வேண்டும்.

▲ *கேள்வி:* ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான நெருக்கடிக்குத்தீர்வு காணப்பட்டு பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்க வாய்ப்பு உள்ளதா?

✪ *பதில்:* இன்றுள்ள நிலையில் நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் நடத்தவேண்டும் என ஐதேகட்சி விரும்புகின்றது. ஆனால், நாடாளுமன்றத்தைக் கலைக்க ஜனாதிபதி பின்நிற்கின்றார். அரசைக் கலைத்தால் தெற்கில் அக்கட்சிக்கு அனுதாப அலை ஒன்று ஏற்படும் என ஜனாதிபதி அஞ்சுகிறார்.

அத்துடன் தான் கைப்பற்றிய அமைச்சுக்களை அரசிடம் கையளிக்கவும் அவர் தயாரில்லை. இதன் காரணமாக தெற்கில்ஸ்திரமற்ற நிலைதான் காணப்படுகின்றது. இதை வைத்துக் கொண்டு புலிகள் பேச்சை ஆரம்பிக்க முன்வரமாட்டார்கள். பேச்சு ஆரம்பிக்கப்படாவிட்டால், சர்வதேசம் உறுதியளித்த உதவிகள் இலங்கைக்குக் கிடைக்காது. இதனால், தென்னிலங்கை மக்கள் எதிர்நோக்கும் உதவிகளை வழங்கமுடியாத நிலை அரசுக்கு ஏற்படும்.

இதைப் பார்க்கும்போது தெற்கில் அரசியல் நெருக்கடி மட்டுமல்ல பொருளாதார நெருக்கடியும், உருவாகிக் கொண்டிருக்கின்றது.

ஒருகாலத்தில் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள், பிரிவினை வாதிகள் என்று வர்ணித்து வந்த சிங்கள அரசு அல்லது சிங்களதேசம் வேறுவழியின்றி வடக்கு - கிழக்கில் உள்ள புலிகளின் நிர்வாகத்தைப் பார்த்து பாடம் கற்கவேண்டிய நிலையில் உள்ளது. அங்கே இல்லாத அரசியல் முதிர்ச்சியை வடக்கு - கிழக்கில் தெளிவாகக்காண்கின்றேன்.

▲ *கேள்வி:* தெற்கு அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணப்படாவிட்டால் யுத்தம் ஒன்று ஏற்படக்கூடிய வாய்ப்பு உண்டா?

✪ *பதில்:* யுத்தம் ஏற்படக்கூடிய வாய்ப்பு உடனடியாக இருப்பதாக நான் கருதவில்லை. யுத்தம் செய்வதற்கு சிங்கள அரசோ சிங்கள தேசமோ தயாராக இல்லை என்றுதான் நான் கருதுகின்றேன்.

ஆனாலும் பெரும் அரசியல் நெருக்கடியில் தெற்கு சிக்கியுள்ளது என்றுதான் கூறவேண்டும். ஐக்கிய இலங்கைக்குள் வடக்கு - கிழக்கிற்கு சுயாட்சி வழங்கவும் வடக்கு - கிழக்குக்கு வெளியே வாழும் தமிழர்களுக்கு சுயாட்சி சலுகைகள் கிடைக்கவும் வேண்டும் என்றுதான் நாம் விரும்புகின்றோம்.

இன்றுள்ள நிலையில் ஐக்கிய இலங்கைக்குள் இணைந்து வாழ்வதா? அல்லது பிரிந்துசென்று தனி ஆட்சி அதிகாரத்துடன் தமிழ்மக்கள் வாழ்வதா? என்பதைத் தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு சிங்களதேசத்திடமே உள்ளது. அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டுப்பிரிவினையைத் தடுக்க சிங்கள அரசு விரும்பினால் நாடு பிளவுபடுவதைத் தடுக்கமுடியும். இல்லாவிட்டால் தொடர்ந்து நேரடியாகவோ மறைமுகமாகவோ தமிழ்மக்களை ஏமாற்றி அதன் மூலம் பேரினவாத ஆட்சியை நிலைநிறுத்த சிங்களதேசம் முனைந்தால் புத்தர் மீண்டும் பிறந்துவந்தால் கூட நாடு பிரிவதைத்தடுக்கமுடியாது.

▲ *கேள்வி:* மீண்டும் ஒரு தேர்தல் வந்தால் விடுதலைப் புலிகளின் இடைக்கால வரைவு குறித்து மேல்மாகாண மக்கள் முன்னணி பிரசாரம் செய்யுமா?

✪ *பதில்:* நிச்சயமாகச் செய்வோம். தேர்தல் வரலாம், வராமல் விடலாம். தேர்தலுக்கு அப்பாற்பட்ட முறையில் தெற்கில் தலைநகர் கொழும்பில் விடுதலைப் புலிகளின் இடைக்கால வரைவு தொடர்பான விளக்க உரைகளையும் பிரசார உரைகளையும் ஆரம்பித்துள்ளோம். கொழும்பில் சுவரொட்டி இயக்கத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து வருகிறோம். சிங்களமக்கள் செறிந்துவாழும் பகுதிகளில் உள்ள கல்வியாளர்கள், பட்டதாரிகள், மாணவர்கள், பிக்குகள் ஆகியோருக்கு ஆங்காங்கே கலந்துரையாடல்களை நடத்தியுள்ளோம். 'சிங்கள சகோதரர்களே அதிகாரத்தை பகிர்ந்து நாட்டுப் பிரிவினையை தவிருங்கள்' என்று அவர்களுக்கு கருத்துக் கூறியுள்ளோம். இச்செய்தியை அடிநாதமாகக்கொண்டு இந்தக் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றோம். தொடர்ந்தும் செய்ய விருக்கின்றோம்.

இந்தச் செயற்பாடு தேர்தலை அடிப்படையாகக் கொண்டதல்ல. அதற்கு அப்பாற்பட்ட முறையில் இந்தச் செயற்பாட்டை முன்னெடுத்துவருகின்றோம்.

▲ *கேள்வி:* விடுதலைப் புலிகளுக்கும் மேல்மாகாண மக்கள் முன்னணிக்கும் இடையில் உறவு எப்படி உள்ளது?

✪ *பதில்:* எமக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலுள்ள உறவு சிறப்பாக உள்ளது எனக்கருதுகிறேன். விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை பலதடவைகள் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளேன்.

இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு மூன்று பிரதான தளங்கள் இருக்கின்றன என்றே நாம் கருதுகிறோம். ஒன்று வடக்கு - கிழக்கு அடுத்தது மலையகம் அடுத்தது மேற்குக் கரை, புத்தளம் முதல் களுத்துறை வரையான மேற்குப் பகுதி. மேற்குப் பகுதியில் கொழும்பு பிரதான இடமாக இருக்கின்றது.

கொழும்பில் வாழும் தமிழ்மக்கள் பலம்மிக்க சக்தியாக வாழவேண்டும் என்பது காலத்தின் கட்டாயமாகும். வரலாற்றுத் தேவையுமாகும். இந்த வரலாற்றுத் தேவையைத்தான் மேல் மாகாண மக்கள் முன்னணி நிறைவேற்றிவருகின்றது. இந்த முன்னணியின் நிலைப்பாட்டை விடுதலைப் புலிகள் பூரணமாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். அங்கீகரித்துள்ளனர்.

▲ *கேள்வி:* விடுதலைப் புலிகள்தான் தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகள் எனத் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் ஏற்றுள்ளனர். உங்கள் மேல் மாகாண மக்கள் முன்னணியும் அதை ஏற்றுள்ளதா?

✪ *பதில்:* விடுதலைப் புலிகள் வடக்கு - கிழக்கில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற தமிழ்மக்களின் அரசியல் ரீதியான ஏகபிரதிநிதிகள் என்பதில் இரட்டைக் கருத்துக்கு இடமில்லை வடக்கு - கிழக்குக்கு வெளியே வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் விடுதலைப் புலிகள் முன்மாதிரியான சக்தியாக எமக்குத் தோன்றுகிறார்கள்.

இலங்கையில் வாழக்கூடிய சகல தமிழ்க்கட்சிகளும், தமிழ் மக்களும் ஒன்றுசேரவேண்டும். ஒன்றாக இருக்க வேண்டும். ஒரே அணியில் பேரினவாத சக்திகளைக் சந்திக்கவேண்டும் என்பதில் பூரண உடன்பாடு உள்ளது.

(13ஆம் பக்கம் பார்க்க)



புரிந்துணர்வு உடன்பாடு நடைமுறைக்கு வந்தபின் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை. மாறாக சிங்களதேசமே நன்மைகளைப் பெற்றுள்ளது. அங்கு அச்சநிலை நீங்கியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சைப் பெறுப்பேற்ற பின்னர் ஜனாதிபதி, விடுதலைப் புலிகளின் வரைவை வரவேற்று இருக்கிறார். யாழ். மாவட்ட இராணுவத் தளபதி பொன்சேகாவை மாற்றியுள்ளார். இதன் மூலம் சமாதானத்துக்கு சாதகமான சமிக்ஞைகளை ஜனாதிபதி காட்டியுள்ளார். இதை நோக்கும் போது அவர் அரசியல் லாபம் கருதியே செயற்படுகிறார் போல் தெரிகின்றது.

ஜனாதிபதிக்கும் - அரசுக்கும் இடையிலான நெருக்கடி நிலை தொடர்ந்தால் அரசியலில் மட்டுமல்லாது பொருளாதாரத்திலும் வீழ்ச்சி நிலையை சிங்களதேசம் எதிர்நோக்கவேண்டிவரும்.

விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள், பிரிவினைவாதிகள் என்று முன் னர் கூறியவர்கள் இன்று விடுதலைப் புலிகளின் அரசியல் முதிர்ச்சித் தன்மையிலிருந்து பாடம் படிக்கவேண்டும்

இன்றுள்ள நிலையில் தமிழ் மக்கள் ஐக்கிய இலங்கைக்குள் இணைந்து வாழ்வதா? அல்லது பிரிந்து செல்வதா? என்பதைத் தீர்மானிக்கவேண்டிய பொறுப்பு சிங்கள தேசத்திடம்தான் உள்ளது. தமிழ் மக்களை ஏமாற்றி பேரினவாத ஆட்சியை நிலைநிறுத்த சிங்களதேசம் முனைந்தால், புத்தர் மீண்டும் பிறந்துவந்தால் கூட நாடு பிரிவதைத் தடுக்க முடியாது.

விடுதலைப் புலிகளின் இடைக்கால வரைவு குறித்து விளக்கவுரை களை தெற்கில் மேற்கொள்வதுடன் சுவரொட்டி, துண்டுப்பிரசுரப்போராட்டங்களையும் நடத்திவருகின்றோம்.

# சிங்கப்பூரில் தங்குமிட வசதி

கொழும்பு-சென்னை-சிங்கப்பூரில் விடுமுறையைக் கழிக்க, திருமணப்பதிவுசெய்து, திருமணம் செய்ய வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு, தளபாட பொருள்களோடு, சகல வசதிகளுடனான தங்குமிட வசதியும், இலங்கை முறைப்படி கல்யாண ஏற்பாடுகளும், அவரவர் வசதிக்கு ஏற்பச்செய்து தரப்படும்.

விமான நிலையத்திலிருந்து இலவச வாகன வசதி.

சலுகை கட்டணத்தில் வாடகைக் கார்.

மேலதிக விவரங்களுக்கு:

**LINGAM WEDDING SERVICE**

10 Anson Road, #15-14 International Plaza,

**Singapore 079903**


எந்நேரத்திலும் தொடர்பு கொள்வதற்கு வசதியாக

கைத்தொலைபேசி எண்:

அப்பு - **0065-975 14 941**

(21-15-19) (12204)


# ஓராண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 04 | 07 |
| ௨ | ௨ |
| 04 | 01 |
| ௨ | ௨ |
| 1938 | 2003 |

அமரர் **கந்தையா செல்வரத்தினம்**

திதி: 28-12-2003

*ஆண்டு ஒன்று அசைந்தாலும்*
*அன்புத் தெய்வத்தின் நினைவலைகள் எம்மைவிட்டு அகலவே*
*அகலாது ஆதிபராசக்தியுடன் சங்கமித்த – எம்*
*தலைவர் எம்முடன் இருப்பதாகவே நாம் அறிவோம்*
*எம் மனதிலே வாழும் எம் தெய்வத்தின் நினைவாக,*

*விதானையார் வீதி,*
*இருபாலை, கோப்பாய்.* (26100)(26-)

-குடும்பத்தினர்.

## இனந்தெரியாத கோஷ்டியால் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை!

பேருவளை,டிசெ.28

சைக்கிளில் சென்றுகொண்டிருந்த நபர் ஒருவரை மோட்டார் சைக்கிளில வந்த கோஷ்டியினர் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்துவிட்டுத்தப்பிச சென்றுள்ளனர்.

இச்சம்பவம் ஹொரணை பொரலுகொட பகுதியில் கடந்த புதனன்று இடம்பெற்றுள்ளது.

ஹொரணைப் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான ஜயந்த சமரகே என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டவராவார்.

ஹொரணைப் பொலீஸார் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## நீரில் மூழ்கி இளைஞர்பலி!

பேருவளை,டிசெ.28

மதுபோதையில் குளத்தில் நண்பர்களுடன் உல்லாசமாக நீராடிக்கொண்டிருந்த 21 வயதுடைய இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி மரணமானார். இச்சம்பவம் கடந்த புதனன்று ஹொரணையில் இடம்பெற்றுள்ளது.

கௌரளம பகுதியைச் சேர்ந்த பிரியநத வாணகுமார எனும் இளைஞரே இவ்வாறு மரணமானவராவார்.

ரைகம் கோரளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஜீ.டி.எல். குணவர்த்தன இவரது மரணம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.

நீரில் மூழ்கி மூச்சுத் திணறியதால் மரணம் ஏற்பட்டது என்று அவர் தனது விசாரணைகளின் முடிவில் தீர்ப்பளித்தார். (ம)


## வீடு விற்பனைக்கு

கைதடி - நுணாவில் கண்டிறோட்டுக்கு அண்மையில் நல்ல நீர்க்கிணறு உள்ள 60 பரப்புக் காணியும் கைதடிச சந்தியில் இருந்து உட்பக்கமாக ஒருமைல் தூரத்தில் உள்ள 50பரப்புக் காணியும் உடன் விற்பனைக்குண்டு. பகுதி பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.

*தொடர்பு:*

T.P. 2735618

(26011) சு.சிறீகாந்தன் (21-11-18)

*நீங்கள்,*
நீரிழிவு நோயினால் அவதிப்படுகிறீர்களா? இதோ உடன் நிவாரணி

# "மதுமேகரணி"

**"MADHUMEAHAHARANEE"**

இந்த மருந்தின் பலாபலனை குறுகிய காலத்தில்அறிந்துகொள்ளலாம்.
உங்கள் அண்மையில் உள்ள சித்தஆயுர்வேத டாக்டரிடம் ஆலோசித்து பாவிக்கவும்.
இது ஓர் அரச ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத் தயாரிப்பு
யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பார்மஸிகளிலும். பெற்றுக்கொள்ளலாம்.

வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்
**சிவா நறுமணப்பூங்கா**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

SRI LANKA AYURVEDIC-CORPORATION
PO BOX 20 NAWINNA
MAHARAGAMA.

(25-11-18-21) *குறிப்பு: சத்திரச்சந்திக்கு அருகில்* (C21746)

## உடனடி வெளிநாட்டு வேலைவாய்ப்பு

**BETA TRAVELS மூலம்**

சவூதி அரேபியாவில் பிரபல்யம் வாய்ந்த
**GULF CATERING SERVICES** கம்பனியில் வேலை செய்வதற்கு

**SCHOOL CANTEEN SALESMAN**

# தேவை

தகைமைகள்:
- சாதாரண ஆங்கில அறிவு அவசியம்.
- G.C.E. (O/L) படித்தவர்களாக இருக்கவேண்டும்.
- 21 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

கடவுச்சீட்டு (Passport),
**03 புகைப்படப்பிரதிகளுடன் சமுகமளிக்கவும்.**

குறிப்பு:
*ஒருவார காலத்திற்குள் பயணம் மேற்கொள்ள இருப்பதால் உடனடியாக சமுகமளிக்கவும்.*

தொடர்புகளுக்கு:

**BETA TRAVELS,**

937, 1st Floor, Maradana Road,
Colombo-08, Punchi Borella Junction,
Mobile: 0777-320771,
Tel: 011-5359860.

(26243)(34)



# கியுபிட் போட் KUPID FORT
(இது ஒரு இந்தியன் தயாரிப்பு) Capsules



பிரசித்தி பெற்ற, ஆயுர்வேத மூலிகைகளைக் கொண்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஒரு மாத்திரை, சர்வதேச உலகில் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சிறந்த ஔஷதம். கியுபிட் போட் கீழ்க்காணும் பிரச்சினைகளை சீர்செய்யும்.

- ஆண் வீரியமின்மை, மலட்டுத் தன்மையைப் போக்க
- வயது முதிர்ந்தோரின் பாலியல் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு
- சாதாரண பாலியல் குறைபாடுகளை சரிப்படுத்த ஒன்றோ இரண்டு மாத்திரைகளை தொடர்ந்து ஒரு மாதம் பாவித்து சிறந்த பயனைப் பெறுங்கள்.

100% ஆயுர்வேத மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது.
எதுவித பக்க விளைவுகளும் கிடையாது.
கியுபிட் போட் வில்லைகள் தாம்பத்திய வாழ்வில் ஒரு மறுமலர்ச்சி.
கியுபிட் போட் என்று பெயர் சொல்லிக் கேட்டு வாங்குங்கள்.

**நாடெங்கிலும் உள்ள சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்**

வைத்திய ஆலோசனையைப் பெற்று
சிறந்த பயனை அடையுங்கள்.

(24921)

## பண்டிகைக்கால மலிவு விற்பனை

22.12.2003 தொடக்கம்
31.12.2003 வரை

- ஐங்கரன் வீடியோ CD படங்கள்
- ஐங்கரன் ஓடியோ CDகள்
- தமிழ், ஆங்கில DVD படங்கள்
- MP 3 CD கள்
- புதிய, பழைய தமிழ் ஓடியோ, வீடியோ பாடல்கள்
- புதிய, பழைய தமிழ் வீடியோ படங்கள்
- Soft ware CD கள்

அனைத்தும் மலிவு விலையில்
பெற்றுக்கொள்ள

**சிட்டி எலக்ரோனிக்ஸ்**

15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## வேணுகா தொலைத் தொடர்பகம்
### 6 ஆம் ஆண்டு நிறைவு விழா (28.12.2003)
### நன்றி நவிலல்

யாழ்ப்பாணம்,இல.:964, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடியில் அமைந்துள்ள வேணுகா தொலைத் தொடர்பகம் தனது இடையறாத சேவையில் 6 ஆவது ஆண்டினைப் பூர்த்திசெய்துள்ளது.

இந்த நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்தவர்களான, ஸ்ரான்லி றோட்டில் அமைந்துள்ள இலங்கை வங்கியினருக்கும், ரெலிகொம் நிறுவனத்தினருக்கும் மற்றும் நாச்சிமார் கோயிலடியைச சேர்ந்த (கிருஸ்ணபிள்ளை அன்சன்ஸ் உரிமையாளர்) திரு.தேவராஜன் அவர்களுக்கும், (கட்டட ஒப்பந்தகாரர்) திரு.கணேசரட்ணம் அவர்களுக்கும், (சாயி போட்டோ உரிமையாளர்) திரு.பத்மநாப அவர்களுக்கும், தபினான்ஸ் கம்பனியினருக்கும் மற்றும் க.சுந்தரேசன், அ.ஜெயராமன், செல்வச்சந்திரன், V.T.சிவலிங்கம், சௌந்தரநாயகம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், T.Com.), தங்கராசா, யோகராசா (சித்தப்பா) ஆகியோருக்கும் பக்கத்துணையாளர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நிறுவனம் சார்பாக நன்றிகலந்த வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தொலைபேசி இலக்கம்:
021 222 2541. 021 222 2845.
021 222 5689. 021 222 5076.
கையடக்கத் தொலைபேசி இலக்கம்: 077 6151173.

இ.சிறிதரன்
உரிமையாளர்.
(சி-32256) (34)




**யாழ்ப்பாணத்திலும் டயலொக் GSM வாடிக்கையாளர் சேவை நிலையம்!**

இப்போது, உங்கள் சுற்றயலிலும் ஒரு டயலொக் GSM வாடிக்கையாளர் சேவை நிலையம் உள்ளது.

• கொடுப்பனவுகளைச் செலுத்துங்கள் • இணைப்பைப் பெறுங்கள் • தொலைபேசிகளை வாங்குங்கள்

147, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். வாடிக்கையாளர் சேவை ஹொட்லைன் 021 2226223. பெக்ஸ் 021 2226224.

டயலொக் GSM
எதிர்காலம் இன்றே.

பங்காளித்துவ நிறுவனம் cbe Communication & Business Equipment (Pvt) Limited

# சீ.......தனம்

ஏட்டில் புதைந்த பூச்சியாய் – நான்
என் கனவுகள் ஆகாயவெளிகளிற்கப்பால்
தேடல்களோ தடம் மாறும் கால்களால் – என்
தேவைகளோ லட்சங்களிற்கப்பால்
சமூகத்தில் என்னை
உயிரோடு எரிக்கும் தீப்பந்தம்!
ஆண்களை உயிரோடு
வாங்கவும் விற்கவும் கூடிய கசாப்புக்கடை!
சமூகத்தின் சம்மதமாம்
பாதுகாப்புடன் நடைபெறும் பகல் கொள்ளை!
இது.....
ஆண்களின் விபச்சாரம்
என் – துயரங்கள்
தூக்குக் கயிறாகவோ
என் – கவலைகள்
கல்லறையாகவோ அல்ல..
மாறாக ......
ஊனமான பட்டாம் பூச்சி
சிறகடிக்கப் போகிறது
ஊமையான கருங்குயில்
பூபாளம் பாடப்போகிறது
உன்னால்........
முடிவுரை கூறமுயன்றது
தொடர்கதையாகிறது...

த. சுதர்சினி

# கவிதைக் கணங்கள்

# யாரிந்த மீனா....?

இவளுக்கு சுதந்திரம் வேண்டும்
காற்றைப் போல!
ஆயுள் தொலைத்துப் போகும் மின்னலல்ல
விடிவெள்ளியிவள்
பற்றி எரிய விடுங்கள்
அக்கினக் குஞ்சிவள்!!
உளியொன்று கொடுங்கள் – நாளை
நமது உலகை செதுக்கிக்கொள்ள,
தயவுசெய்து இறகுகளை விட்டு விடுங்கள்
பறக்க வேண்டுமிவள் இமயம் தாண்டியும்!
பள்ளிக்குப் போக விடுங்கள்
இரவெது பகலெது என்று கற்றுக்
கொள்ளட்டும்
இரக்கப்பட வேண்டாம்
இவள் ஒன்றுக்கும் இளைத்தவளல்ல!
காதல் செய்ய கற்றுக்கொடுங்கள்
இந்த தேசத்தை நேசிப்பதற்காய்
சொல்லிக்கொடுங்கள் வெற்றி என்பது
எழுந்து நடப்பதல்ல
விழுந்தும் எழுவதுதானென!
போதுமிந்தப் பொய்களெல்லாம் என
போராடக் கற்றுக்கொடுங்கள்
இவள் நேர்கொண்ட பார்வையை
நிமிர்ந்த நடையை
தட்டிக் கொடுங்கள்
இவள் பூப்போன்ற பெண்ணல்ல
புயல் போன்றவள்!!

இ. தர்சி

# "தீர்த்த யாத்ராவில்"

## திரைக் கலை விமர்சனம்

-தர்சனன்

கடந்த ஞாயிறன்று யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்பலகினரின் வாராந்த திரைப்படக் காட்சியில் தீர்த்தயாத்ரா என்னும் முழுநீள சிங்களத் திரைப்படமும் அசோகமித்திரன் என்னும் ஆவணத் திரைப்படமும் காண்பிக்கப்பட்டன.

முதலிற் காண்பிக்கப்பட்ட அசோகமித்திரன் ஆவணத் திரைப்படம் தமிழின் மிக முக்கியமான படைப்பாளிகளிலொருவர் எனக் கருதப்படுபவரான அசோகமித்திரனது வாழ்க்கையைச் சித்திரிப்பதாக அமைந்திருந்தது. அவரது சிறுவயதிலிருந்து இன்று வரையான வாழ்க்கையின் நிகழ்வுகள் பற்றிய அவரது நேரடிக் குறிப்புரைகளுடனும் சா.கந்தசாமி போன்றோரது அபிப்பிராயங்களுடனும் அசோகமித்திரனின் இளமைப்பருவம் முதல் இன்றுவரையான தோற்றங்களைக் காட்டும் புகைப்படங்களையும் இணைத்து அம்ஷன்குமார் இதனைத் தயாரித்திருந்தார். பாரதியாரின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் ஒரு சிறந்த ஆவணப்படத்தைத் தந்தவர் எனக்கருதப்படும் அம்ஷன்குமார் இந்தத் திரைப்படத்தில் அசோகமித்திரன் பற்றிய முழுமையான ஆவணத் தரவுகளைத் தரத் தவறிவிட்டார் என்றே எண்ணத் தோன்றுகிறது. அசோகமித்திரனின் இலக்கிய வாழ்வு பற்றிய பதிவுகள் இன்னும் தரப்பட்டிருக்கலாமென்று பார்வையாளர் பலரும் அபிப்பிராயப்பட்டனர்.

அடுத்து காண்பிக்கப்பட்ட தீர்த்த யாத்ரா முன்னர் இங்கு நடைபெற்ற 'சினி யாத்ரா'வின் போது காண்பிக்கப்பட்டதாயினும் மீளவும் பார்க்கையில் சில ஆழ்ந்த சிறப்புகளை அவதானிக்க முடிந்தது. ஆர்ப்பாட்டம் ஏதுமில்லாத அமைதியான ஆழமான ஒரு நகர்வில் முழுத்திரைப்படமும் அமைக்கப்பட்டிருந்தமை ஒரு தனிச்சிறப்பு.

அளவாகப் பயன்படுத்தப்பட்ட பின்னணி இசை தேவைக்கேற்ற அளவிலே பயன்படுத்தப்பட்ட உரையாடல், காட்சி நகர்த்தலோடு நிகழ்த்தப்பட்ட கதை நகர்வு வேண்டப்படாத எந்தக் காட்சியுமே இணைக்கப்படாமை. மிகச் சிறந்த இயல்பான நடிப்பு, சிறந்த கதையமைப்பு, கவிதையாய் மனசு தொடும் காட்சி அமைப்பு. எல்லாமுமே ஒருங்கிணைய அமைந்த ஒரு நல்ல திரைப்படமாய் தீர்த்த யாத்ரா அமைந்திருந்தது. ஒரு பெண் தனது வாழ்வின் மூலம் தேடிப்போகும் கதையைக் கூறுவதாய் அமைந்த கருப்பொருள் இந்த வாழ்வு சார்ந்த சில யதார்த்த உண்மைகளைப் பிரசாரத் தொனியில்லாமல் சொல்வதாய் அமைந்திருந்தது.

வசதிபடைத்த, புகழ்கொண்ட ஒரு சட்டத்தரணி, அவர் மனைவி - மகள் என அமைந்த அந்தக் குடும்பத்தில் ஒரு இளவரசியாய் வாழ்கிறாள் அந்த மகள், வசதியான வாழ்வோடு தனது கல்வி தனது நாடகப் பயிற்சி தனது நிலைக்கேற்ற தரத்தில் உள்ள காதலன் என ஒரு மேற்றட்டு வர்க்கத்துப் பெண்ணாய் இருக்கிறாள் அவள்.

ஒருநாள் இந்தச் சட்டத்தரணியைத் தேடி வருகிறான் ஒரு ஏழைத் தொழிலாளி. அவனது வரவு இவர்களது-அந்த - சட்டத்தரணியினதும் மனைவியினதும் அமைதியைக் குலைத்து விடுகிறது. "நான் உங்களிடம் வந்து தொந்தரவு தரக்கூடாது என்றுதான் எண்ணியிருந்தேன். எனது மகனுக்கு ஏற்பட்ட ஒரு கஷ்டம் உங்களிடம் என்னை வரச்செய்து விட்டது. எங்களது பெருஞ் சொத்தாய், - எங்களுக்கு எல்லாமுமாய் இருந்த எங்களின் மூத்த மகனைப் பொலீஸ் பிடித்துச் சென்ற விட்டது. அவன் எங்கே இருக்கிறான் என்றுகூட அறிந்து கொள்ள முடியாத ஒர நிலையில் உங்களது உதவியை

# மூழ்கிய கணங்கள்....

நாடி வந்திருக்கிறேன். எப்படியாவது எனது மகனை மீட்டுத் தாருங்கள்." என்கிறான் அந்தத் தொழிலாளி.

அவனுக்கு உதவுவதாக வாக்களிக்கும் சட்டத்தரணி அவனது மகனின் நிலை பற்றி அறிய முயற்சிகிறார். அவன் கொல்லப்பட்ட சேதியை அறிந்தும் அவனிடம் அந்த உண்மையைச் சொல்லத் தயங்குகிறார்.

இந்தநிலையில் மீண்டும் ஒருநாள் இந்தச் சட்டத்தரணியைக் காணவரும் அந்தத் தொழிலாளி வீட்டில் அந்தச் சட்டத்தரணியோ அவர் மனைவியோ இல்லாத நிலையில் இந்த மகளிடம் தன் மகனைத் தேடும் முயற்சியைக் கைவிடும்படி சொல்லுமாறும், அவனை அவர்கள் கொன்றுவிட்டார்கள் என்றும் துயரம் தோய எடுத்துக் கூறுகின்றான்.

அந்த மகனே தங்களுக்குச் சகலமுமாய் இருந்ததாகவும் இப்போது அவனைத் தாங்கள் இழந்து விட்டதாகவும் கூறும் அவன்

"முதலில் நான் உன்னை இழந்தேன். இப்போது உன் அண்ணனையும் இழந்துவிட்டேன்" எனத் தன்னை மறந்து கூறிவிட்டுப் பின் தனது தவறை உணர்ந்தவனாக ஓட்டமும் நடையுமாய் அந்த இடம் விட்டு நகர்ந்து விடுகிறான்.

அதிர்ந்துபோன அவள் அவனைத் தொடர்ந்து கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் ஓடிச்சென்றும் அவனோடு பேசமுடியாமல் திரும்பி வீட்டுக்குள் வருகிறாள். தனது வாழ்வில் தனது பிறப்பில் புதைந்திருக்கிற மர்மம் அவளை அதிர வைக்கிறது.

குழம்பித்தவிக்கும் அவள் தனது தந்தையின் சட்ட ஆவணங்களுக்கு இடையில் தன்னைஅந்தச் சட்டத்தரணி தத்தெடுத்ததை வெளிப்படுத்தும் ஆவணமொன்றைக் கண்டு சலமும் உணர்கிறாள்.

முதன் முதலாகத் தனது தந்தையைக் காண அந்தத் தொழிலாளி வந்த சமயம் அவன் கொடுத்த அவனது தொழில் முகவரி விவரங்களைத் தேடி எடுத்து ஒருநாள் அவனைக் காண அவன் பணிபுரியும் ஒட்டுத் தொழிற்சாலைக்குப் போகிறாள். "உங்களுக்கு என்னம்மா பிரச்சினை" என வினவும் அவளிடம் "எனது உண்மையான தந்தை யார் என்ற விவரத்தை அறிய வந்திருக்கின்றேன்" என்கிறாள்.

"என்னை ஏன் விற்றீர்கள்?" என்று கேட்கிறாள்.

தங்களுக்கு ஒரு சமயம் இரட்டைக் குழந்தைகளாக அந்தப் பெண்ணும் அவளது சகோதரியும் பிறந்ததாகவும் - அந்தவேளை இரண்டு பிள்ளைகளுக்கும் பால் கொடுக்கும் அளவுக்குப் பலமற்றவளாகவும் உடல்நலமற்றவளாகவும் தனது மனைவி வாழ்ந்ததாகவும் அந்தச் சமயம் இந்தச் சட்டத்தரணி தங்கள் புதல்வியரில் ஒருத்தியைத் தத்தெடுக்க விரும்பியதால், தாங்கள் ஒரு பிள்ளையாவது நல்ல நிலையில் வளரட்டுமே என்ற எண்ணத்தோடு அவளை அவர்களுக்குத் தத்துக்கொடுத்ததாகவும் கூறினான்.

அவனது குடும்ப விவரங்களை அறிந்த அவள் தனது மெய்யான தாய் சகோதரங்களைக் காண விரும்புகிறாள். மிகுந்த குழப்பத்தோடு உலவும் அவளது அந்த நிலைக்கு என்ன காரணம் என்று அறியாது திகைக்கின்றனர். அவளது வளர்ப்புப் பெற்றோர் பலத்த மனப் போராட்டத்துக்குப் பிறகு தனது காதலனிடம் தனது உண்மை நிலையை விவரித்து எப்படியாவது தனது குடும்பத்தினரைக் காணும் விடயத்தில் அவனே தனக்கு உதவ வேண்டுமென்று கூறுகிறாள். அவளது பிறப்பின் உண்மை தெரிந்தால் தங்களது திருமணம் குழம்பிவிடும் என்று கூறுகிறான் அவளது காதலன்.

எப்படியாவது தனது உண்மையான பெற்றோரைக்காண விரும்புவதாகக் கூறும் அவள் அவனை நிரந்தரமாகப் பிரிவதற்குத் தீர்மானிக்கிறாள்.

வீட்டில் மிகுந்த மனக்குழப்பத்தோடு காணப்படும் அவள் மனத்துயர் பொறுக்கமுடியாமல் நஞ்சருந்தித் தற்கொலை செய்ய முயற்சிக்கிறாள். சரியான சமயத்தில் வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்படும் அவள் காப்பாற்றப்பட்டுக் குணமடைந்த நிலையில் யாரும் அறியாமல் தனது பெற்றோர் இருக்கும் கிராமத்துக்கு ரயிலில் புறப்படுகிறாள். வீட்டினர் அவளைக் காணாமல் தேடுகின்றனர்.

கிராமத்தைச் சென்று அடைந்தவள் அங்கே தனது தாயை, சகோதரங்களை தந்தையை சகோதரியைக் காணுகிறாள். மிகுந்த எதிர்பார்ப்புகளோடு அங்கு செல்லும் அவள் அங்கிருந்தவர்களின் பேச்சையும் மனப்பாங்கையும் கண்டு உடைந்து போகிறாள்.

"பயனற்ற ஒரு பயணத்தை மேற்கொண்டு நீ ஏன் இங்கு வந்தாய் என அவளது தாயாரே கேட்டதையும் எதுவுமே பேசாமல் வெறுமையாய் நோக்கிய சகோதரியையும் கண்டு மனசின் உள்ளார்ந்த எதிர்பார்ப்புகள் உடைந்து போனவளாக வாழ்க்கை யதார்த்தத்தின் நிர்த்தாட்சண்யமான அறை தந்த வலியைப் பொறுக்க இயலாதவளாக வந்தவழியே திரும்புகிறாள்.

படம் முடிவடைகிறது.

அற்புதமான கதை, அற்புதமான நடிப்பு என ஒவ்வோர் அம்சமும் படத்தின் சிறப்புகளாய் மிளிர்கின்றன. சிங்களத் திரைப்பட வளர்ச்சியை வியந்தபடி நிறைவோடு திரும்புகிறோம்.



# திறந்ததும்! பறந்ததும்!

சமர்க்களம்

# பறத்தலும் திறத்தலும்

தனித்துமே வாழும் நல்ல
தகைமைகள் இருந்தும் என்ன
திணித்ததோர் யுத்தம் ஒன்றால்
துயர்களைச் சுமந்தோம்
நாளும்!
தனித் தரப் பாக நின்று
திறமையில் சமனைக் காட்ட
துணிந்தவர் வந்தார் பேச
தயவுறும் மக்களுக் காக!

பாதையைத் திறக்கப் பொருந்தி
பகற் பொழு தேனும் புழங்கும்
ஏதினை வகுத்து வைக்க
இடையிலே பூதம் வருதே!
மூதையர் காலம் சமைத்த
முகமாலை வீதி பருத்து
தீதுகள் நினைத்தோர் தம்மனம்
திறந்திட மார்க்கம்
விளைத்ததே!

தங்களின் மைந்தர் இந்தத்
தரணியைச் சிதைத்த தெல்லாம்
சிங்களப் பெற்றோர் பார்த்து
சிதைகளின் தடங்கள்
கண்டார்!

அங்கெலாம் விற்க ஒண்ணா
இருப்புகள் இழுத்து வந்து
எங்களின் தலையில் கட்ட
உகந்ததாய்க் காலம் ஆச்சு!

ஊரென ஒன்றிங் கிருக்கும்
உணர்வுகள் மறந்த பேரும்
பாரெலாம் சுற்றிப் பொழுதைப்
பணத்தினால் கரைப்போர் தாமும்
வேரினைக் கொண்டோம்.
பிரிவின்
வேதனை அறிவோம் என்றே
ஊரிதன் பக்கம் வருவார்
உயிர் கொல்லி நோயும்
கொண்டே!

மந்திரி மாரும் பின்னால்
மீள் குடி யேற்றக் காரரும்
வந்துமே சேரல் நாட்டில் –
மறு
வாழ்வினைத் தந்தும் வாழ்வில்
பிந்தியே நிற்கின் றோம் நாம்
பறந்திடும் உலகப் போக்கில்
இந்தப் பாதை திறந்தே என்றும்
இருந்திடச் சுபீட்சம் காண்போம்!

-விஷாலி.

### காணாமற்போனோர் விவகாரம்

# விசாரணை செய்து அறிக்கை வெளியிடவே ஆணைக்குழுவுக்கு அதிகாரம் தரப்பட்டது

## தண்டிக்கும் உரிமை தம்மிடம் இல்லை என்கிறார் அதன் தலைவர்

குடாநாட்டில் காணமற்போனவர்கள் தொடர்பாக விசாரணை நடத்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணைக் குழு நியாயமாகவே செயற்பட்டது.

- இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் அந்த விசாரணைக்குழுவின் தலைவர் கலாநிதி தேவநேசன் நேசையா.

குடாநாட்டில் காணாமற்போனவர்கள் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடுகள் செய்யப்பட்டன. இந்த முறைப்பாடுகள் குறித்து விசாரணை நடத்த கலாநிதி தேவநேசன் நேசையா தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக்குழு விசாரணை நடத்தி அறிக்கை வெளியிட்டது.

இந்நிலையில், இந்த விசாரணைக் குழுவின் செயற்பாடுகள் குறித்து விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இதனையடுத்து தமது நிலைப்பாட்டை விளக்கி கலாநிதி தேவநேசன் நேசையா இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஊடாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குடாநாட்டில் 1990ஆம் ஆண்டு முதல் 1998ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் காணமற்போனோர் சம்பந்தமான விசாரணைகளை மேற்கொள்வதற்கென மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது.இதன் செயற்பாடுகள் பற்றி அண்மைக்காலத்தில் பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. ஆகவே, இந்த விசாரணைக்குழுவின் தலைவராகச் செயற்பட்டவர் என்ற ரீதியில் உண்மை நிலையை எடுத்துக்கூற விரும்புகிறேன்.

**ஆணைக்குழுவின் அதிகாரங்கள்.**

மனித உரிமைகள் ஆணைக்குழு உரிமை மீறல் சம்பந்தமாகக் கிடைக்கும் முறைப்பாடுகளை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கான அதிகாரங்களைக் கொண்டதொரு அமைப்பாகும். சில சந்தர்ப்பங்களில், சம்பந்தப்பட்ட உரிமை மீறல்கள் தொடர்பாகப் பாதிப்புற்றவருக்கும், பாதிப்பை ஏற்படுத்தியவருக்குமிடையில் நடுவராகச் செயற்பட்டு ஓர் இணக்கத்தை ஏற்படுத்தும் அதிகாரமும் அதற்கு உண்டு. காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை செய்வதற்கென மனித உரிமைகள் ஆணைக்குழுவினால நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவிற்கு அளிக்கப்பட்ட அதிகாரப் பத்திரத்திற்கு அமைவாகவே விசாரணைக்குழு செயற்பட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகி இருந்துள்ளது.

1990ஆம் ஆண்டு முதல் 1998ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் காணாமற்போனோர் சம்பந்தமாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அந்த முறைப்பாடுகளின் அடிப்படையில் குறிப்பிட்ட நபர்கள் பற்றியும், குறித்த நபர்கள் தற்பொழுது எங்கு இருக்கின்றார்கள் என்பது பற்றியும், முன்வைக்கப்பட்ட சாட்சியங்களுக்கு அமைய, அவர்கள் காணாமல் போனமைக்குப் பொறுப்பானவர்கள் யார் என்று விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. அத்துடன் -

பாதிப்புற்றோர் குடும்பங்களுக்கு எவ் வகையான நிவாரணம் அளிக்கப்பட வேண்டும் எனவும் அறிக்கையில் குறிப்பிடப்பட வேண்டியிருந்தது. காணாமற்போனதற்கு பொறுப்பாக இருந்தவர்களுக்கு தண்டனை கொடுக்கவோ அல்லது அவர்களை நீதிமன்றத்தின் முன் ஆஜர்செய்வதற்கான அதிகாரமோ விசாரணைக் குழுவிற்கோ, மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கோ இல்லை,

**ஆங்கிலத்தில் அறிக்கை**

விசாரணையின் போது தெரிய வந்த விடயங்களை அறிக்கையில் ஆதாரபூர்வமாக எடுத்துரைத்து உண்மையில் நடந்தது என்ன என்பதை முறைப்பாட்டுக்காரருக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், அரசிற்கும், முழு உலகத்திற்கும் எடுத்துக்கூறும் பொறுப்பை நிறைவேற்றவே அறிக்கை ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டது. இந்த அறிக்கை தேசிய, பல்தேசிய மனித உரிமைகள் ஆர்வலர்கள், பாதுகாப்புப் படைகளின் பிரதிநிதிகள் ஆகியோர் முன்னிலையில் பகிரங்கமாகச் சமர்ப்பிக்கப்பட்டது. குறித்த வைபவத்தில் சுமார் 300 பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கையின் முக்கிய விடயங்களை கொண்ட சாராம் சமானது வைபவத்திற்கு சமூகமாயிருந்தவர்களுக்கு வாசித்து விளக்கப்பட்டது. அது சம்பந்தமான கருத்துப் பரிமாற்றங்களும் நடைபெற்றன. அதன் பிரதிகளும் அனைவருக்கும் வழங்கப்பட்டன. அன்று சமூகமாயிருந்த இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல, கூட்டத்தில் பங்கேற்றவர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவ்வேளையிலேயே பதிலளித்தார் என்பது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

விசாரணைகளின் பொழுது முன் வைக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில், காணாமற் போனவர்களைக் கைது செய்தவர்கள் என சாட்சிகள் குறிப்பிட்ட 35 இராணுவத்தினரின் பெயர்கள் கொண்ட பட்டியல் இராணுவத்தினருக்கு சமர்பிக்கப்பட்டது. அத்துடன் பட்டியலில் உள்ளவர்களுடன் தொடர்புகொள்வதற்கு விலாசங்கள் கேட்கப்பட்டன. அப்போது சம்பந்தப்பட்டவர்களின் முழுப் பெயர்களும், தற்போதைய தரம் பற்றிய விவரங்களும் இன்றி, அவர்களை தேடிக் கொள்ள முடியாதென இராணுவத் தளபதியினால் எமக்கு அனுப்பப்பட்ட கடிதம்கூட குறித்த அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. அத்துடன், இவர்களைத் தேடமுடியாது எனக் கூறியதற்கு இராணுவத் தலைமையகத்தின் செயற்றிறனின்மை அல்லது சம்பந்தப்பட்டவர்கள் எம்முன் சாட்சியமளிக்க உதவினால் மறைக்கப்பட வேண்டிய விவரங்கள் எமக்குத் தெரிய வந்துவிடும் என்ற அச்சம் காரணமாக இருக்கும் என அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பெறுபேறுகள் தமிழில்**

எமது அலுவலர்களின் முயற்சியினால் குறித்த காலத்தில் நாவற்குழி முகாமிற்குப் பொறுப்பாகவிருந்த கேணல் துமிந்த கெப்பற்றிவலான, யாழ். இராணுவப் பிரிவுத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் லொகான் குணவர்த்தன என்பவர்களுடைய தற்போதைய விலாசங்கள் கண்டுபிடிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டபோது வெளிவந்த விவரங்கள் பல அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன.

அத்துடன் நின்றுவிடாது, விசாரணைக் குழுவிடம் முறைப்பாடு செய்திருந்த 281 முறைப்பாட்டுக் காரர்களுக்கும் தனித்தனியே அவர்களின் முறைப்பாடு சம்பந்தமான விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களையும் விசாரணையின் பெறுபேறுகளையும் தமிழிலே அனுப்பிவைத்துள்ளோம்.

காணாமற்போயுள்ள குறித்த நபர்களின் குடும்பங்களுக்கு அளிக்கப்பட வேண்டிய நிவாரணங்கள் எவ்வகைப்பட்டவையாக இருக்கவேண்டும் என்றும் விரிவாக இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது அது மட்டுமன்றி அவர்களுக்குள் மிகவும் பாதிப்புற்ற நிலையில் இருக்கும் சுமார் 148 குடும்பத்தின் அடையாளம் காணப்பட்டு துரிதமாக அவர்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுக்கும்படி அவர்களைப் பற்றிய சகல விவரங்களும் பல அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இது இவ்வாறிருக்க, காணாமற்போனோர் சம்பந்தமான விசாரணைக் குழு தமது பொறுப்புக்களை சரிவர நிறைவேற்றவில்லை என்று கூறப்படுவதில் நியாயமில்லை. ஆங்கிலத்தில் எழுதி வெளியிடப்பட்ட இவ் அறிக்கை தமிழில் மொழிபெயர்க்கப்படும் வரை காத்திருந்தால் இவ் விசாரணைக் குழுவின் அறிக்கையை சமர்ப்பிக்கப் பல மாதங்கள் ஆகியிருக்கும். ஆகவேதான் சகலரும் அறிந்துகொள்ளக்கூடியதாக ஆங்கில அறிக்கையைத் தாமதமின்றி வெளியிட்ட பின்னர் அதனைத் தமிழில் மொழிபெயர்க்கும் நடவடிக்கைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவில் இந்த அறிக்கை புத்தக வடிவில் வெளியிடப்படும்.

இந்த விடயங்களிலிருந்து விசாரணைக்குழு தனது பொறுப்புக்களை எவ்வகையில் நிறைவேற்றியுள்ளது என்பது அனைவருக்கும் தெரியவரும் என்று நம்புகிறேன்.

- இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. (ஓ)



நடந்துமுடிந்த ஜி.சீ.க. சாதாரண தரப்பரீட்டைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான கருத்தரங்குகளை மானிப்பாய் லீயோ கழகம் கடந்த மாத இறுதியில் குடாநாட்டின் பல இடங்களிலும் நடத்தியது. பின் தங்கிய பகுதிகளிலேயே இக்கருத்தரங்குகள் முக்கியமாக நடத்தப்பட்டன. அவ்வாறு நடத்தப்பட்ட கருத்தரங்கின் போது எடுக்கப்பட்ட படம் இது. (ம)

---

# இழப்புக்களை மட்டும் தகுதியாகக் ......

(09ஆம் பக்கத்தொடர்ச்சி)

வடக்கு - கிழக்குக்கு வெளியே வாழும் தமிழர்கள் அடிப்படையில் சிறுபான்மையானவர்களாக வாழ்கிறார்கள். அதேநேரம் வடக்கு - கிழக்குக்குள் வாழும் தமிழர்கள் தேசிய இனமாக இருக்கிறார்கள். அவர்கள் தேசிய இனம் என்பதை விடுதலைப் புலிகள் சர்வதேச மட்டத்தில் நிரூபித்துள்ளனர். அவர்களின் பாரிய தியாக வரலாறுதான் அதற்குக் காரணம்.

20 ஆயிரம் போராளிகளை இழந்துள்ளார்கள். ஒரு லட்சம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அதே அளவு மக்கள் அங்கவீனர்கள் ஆகியுள்ளனர். லட்சக்கணக்கான மக்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அகதிகளாகியுள்ளனர். பல்வேறு சூழல் கலாசார, தனியார் சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன. பல்வேறு விலைகளை விடுதலைப்புலிகள் கொடுத்துள்ளனர். அதன் பின்புதான் இப்போதைய நிலைக்கு வந்துள்ளனர்.

இந்த விலை கொடுத்துப் போராடி சர்வதேச கவனத்தை ஈர்த்த விடுதலைப் புலிகள் மலையக, மேல் மாகாண மக்களையும் இணைத்து அவர்களுக்காகவும் போராட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

▲*கேள்வி:* தேர்தல் ஒன்று வரும் பட் சத்தில் விடுதலைப் புலிகளின் தலைமையில் அல்லது அவர்களது ஆதரவில் வேட்பாளர்கள் நிறுத்தப்படலாம். அப்போது உங்கள் நிலைப்பாடு எப்படியிருக்கும்?

✪*பதில்:* வடக்கு - கிழக்கைப் பொறுத்தமட்டில் விடுதலைப் புலிகளின் தலைமையை ஏற்றுக்கொண்ட பிரதான கட்சிகள்தான் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்றன. அதில் மாற்றுக்கருத்து இருப்பதாகத் தெரியவில்லை. அதேநிலை தொடரும் என நம்புகிறோம்.

தேர்தலுக்கு அப்பால் நின்று நாம் விடுதலைப் புலிகளின் தலைமையை நீண்டகாலமாக ஆதரித்து வருகின்றோம். தெற்கில் இ.தொ.கா., மலையக மக்கள் முன்னணி, மேல் மாகாண மக்கள் முன்னணி என மூன்று தமிழ்க் கட்சிகள் இருக்கின்றன. தமிழ் மக்கள் மீது கொடூர யுத்தத்தை சந்திரிகா மேற்கொண்ட போது அந்த ஆட்சிக்கு எதிராக உரத்த குரல் எழுப்பியது மேல் மாகாண மக்கள் முன்னணிதான் என்பதைக் கூற விரும்புகிறேன். அன்று ஏனைய இரு கட்சிகளும் சந்திரிகாவின் ஆட்சியில் இணைந்து கொண்டு யுத்தத்திற்கும், அவசர காலச் சட்டத்துக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கும் ஏதோ ஒரு வகையில் ஆதரவு வழங்கின. ஆனால், நாம் துணிச்சலாக - நேர்மையான - விடுதலைப் புலிகளின் பாதுகாவலராக இருந்திருந்தோம். அதேநிலை தொடரும். ஏனைய கட்சியினரை விட விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை ஆதரிக்கும் கட்சி என்ற வகையில் தொடர்ந்து எமது நிலைப்பாடு இருக்கும்.

▲*கேள்வி:* பேச்சுக்களின் மூன்றாம் தரப்பாக முஸ்லிம்கள் பங்கு பற்றுவது குறித்து...?

✪பதில்:- இந்த விடயத்தில் நாம் தெளிவாக இருக்கின்றோம். இன்றைய போர் நிறுத்தம் என்பது சண்டையிட்ட இருதரப்புக்களுக்கும் இடையில் ஏற்பட்ட ஓர் உடன்பாடாகும். விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரிவும் ஸ்ரீலங்கா அரசின் இராணுவப் பிரிவும் சண்டையிட்டன. இருதரப்பும் செய்துள்ள போர் நிறுத்தத்தின் அடிப்படையில்தான் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆகவே, இந்தப் பேச்சுக்களில் இலங்கை அரசும் விடுதலைப் புலிகளையும் தவிர்ந்த மற்றொரு தரப்பு மூன்றாம் தரப்பாக பங்குபற்றுவதை நாம் ஏற்றுக்கொள்ளமாட்டோம் முறையற்ற செயலாக அதைக்கருதுகின்றோம்.

முஸ்லிம் மக்களுக்கு தனித்துவமான பிரச்சினைகள் இருக்கின்றன. அந்தப் பிரச்சினைகள் தொடர்பாக முஸ்லிம் கட்சிகள் விடுதலைப் புலிகளுடன் அல்லது அரசுடன் வெவ்வேறாகப் பேச்சுக்களை நடத்தலாம். புலிகள்-அரசு பேச்சுக்களில் தமது தரப்பு இடம்பெறவேண்டும் என்று கேட்பது முறையற்றசெயல் எனக்கருதுகிறேன்.

மூன்றாம் தரப்பாக இடம்பெறுகின்ற தகுதியை பெறுவதற்குரிய அரசியல் போராட்டங்களை முஸ்லிம் அரசியல்வாதிகள் இலங்கை வரலாற்றில் இதுவரை செய்யவில்லை என்பதையே காண்கின்றோம். இது வரை காலம் ஏற்பட்ட இழப்புக்களை, மூன்றாம் தரப்பாவதற்கான தகுதியாக அவர்கள் கூறுகின்றனர். யாழ்ப்பாணத்தில் இருந்து விரட்டப்பட்டார்கள்.

இழப்பீடுகளை தகுதியாக கருத முடியாது. அரசியல் போராட்டங்கள்தான் தகுதியாகவேண்டும். இழப்பீடுகள்தான் 'ஒரு தகுதி என்று சொல்லப்பட்டால், தென்னிலங்கையில் கொழும்பிலும், மலையகத்திலும் வாழும் தமிழ் மக்கள்தான் முஸ்லிம்களை விட பாரிய இழப்புக்களைச் சந்தித்துள்ளனர்.

48ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்த இனக்கலவரங்களின் போது இனவாதிகளின் தாக்குதலுக்கு முகம் கொடுத்தவர்கள் அங்கு வாழ்ந்த தமிழர்கள் தான் என்பதை வரலாறு மறக்காது. உயிர், உடைமை இழப்புக்களை சந்தித்தவர்கள் தமிழர்கள்தான்.

இழப்பீடுகள்தான் 'ஒரு தகுதியாக இருக்குமானால், முஸ்லிம் மக்களை விட தெற்கில் வாழும் தமிழ்மக்கள் தான் 'மூன்றாம் தரப்பாக வரத் தகுதி பெறுகின்றனர்.

யதார்த்தத்தை முஸ்லிம் தலைவர்கள் புரிய வேண்டும். அரசு - புலிகள் பேச்சுக்குள் நுழைந்து குட்டையைக் குழப்பாமல் இருக்கவேண்டும்.

▲*கேள்வி:* ஜே.வி.பி., சிஹல உறுமய போன்ற கட்சிகளின் நிலைப்பாடு பேச்சுக்களைப் பாதிக்குமா?

✪*பதில்:* தமிழ்த் தேசம், சிங்கள தேசம் என்றுதான் பார்க்கிறேன். சிங்கள தேசம் என்னும் போது, சிங்கள அரசு, ஜனாதிபதி, எதிர்க்கட்சிகள், ஜே.வி.பி. போன்ற அனைத்தும் எனக்குப் பூரண உடன்பாடு உள்ளது. அடங்கியுள்ளன. தமிழ்த் தேசம் என்னும் போது விடுதலைப் புலிகள், தமிழ் அரசியல்கட்சிகள் எல்லாம் அடங்கியுள்ளன.

இந்த நிலையில் தமிழ்த் தேசத்தில் சிங்கள - முஸ்லிம் சிறுபான்மையோர் வாழ்கின்றனர். சிங்கள தேசத்தில் எம்மைப் போன்ற தமிழ் சிறுபான்மையோர் வாழ்கின்றனர். இந்தப் பின்னணியில்தான் பார்க்க வேண்டும். ஜே.வி.பி., சிஹல உறுமய போன்றவை சிங்கள பேரினவாதத்தை சர்வதேச சமூகத்தின் முன் அம்பலப்படுத்திக் கொண்டிருக்கின்றன என்றுதான் கருதவேண்டும். வெளிப் படையாக தமிழ்மக்களுக்கு அவர்கள் உதவிதான் செய்கிறார்கள்.

தமிழ்மக்களுக்கு சலுகைகள் வழங்க உருவாக்கப்பட்ட ஏற்பாடுகளை கிழித்தெறியப்பட்டமைதான் வரலாறு. இதை தமிழர்கள் சர்வதேசத்துக்கு கூறும்போது அவை ஏற்க மறுக்கின்றன. இன்றும் ஜே.பி.வி. போன்ற அமைப்புக்களின் செயற்பாடுகளை பார்க்கும் சர்வதேச சமூகம், தமிழர் தரப்பு நியாயத்தை உணரத் தொடங்கியுள்ளது.

இந்த நாட்டில் விடுதலைப் புலிகளோ, தமிழ்க்கட்சிகளோ பிரிவினைவாதக் கட்சிகள் அல்ல. ஜே.வி.பி. போன்றவைதான் பிரிவினைவாதக் கட்சிகள் என்பதை சர்வதேசம் உணரத் தொடங்கிவிட்டது. ஐக்கிய இலங்கைக்குள் தீர்வுகாண எடுக்கும் முயற்சிகளுக்கு எதிர்க்குரல் கொடுப்பதன் மூலம் ஜே.வி.பி. போன்ற கட்சிகள் தான் நாட்டைப்பிரிக்க முனைந்து நிற்கின்றன.

## புத்தாண்டு மலிவு விற்பனை

யாழ். நகர மக்களே! ஓர் அரிய வாய்ப்பு!!

டிசெம்பர் 31 வரை விசேட கழிவு

நீங்கள் வாங்கும் சகல பொருள்களுக்கும் விசேடகழிவு வழங்கப்படும்.
நாளை என்று தள்ளிப் போடாமல் இன்றே விரையுங்கள்.

புதுவருடத்தை முன்னிட்டு லைடன் புடைவை நிலையம் இன்று 28.12.2003 ஞாயிற்றுக்கிழமையும் திறந்திருக்கும்.

**லைடன் புடைவை நிலையம,**
இல. 410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎ 222 2381.
(C/31792) (34-18-26-25)



## PILLIAYAR INN GARDEN RESTAURANT
## பிள்ளையார் இன் காடின் றெஸ்ரோறண்ட்

யாழ். நகரில் பிள்ளையார் இன் காடின் றெஸ்ரோறண்ட் உங்களை அன்புடன் வரவேற்கிறது.

சிறந்த தரமான உணவு வகைகள், கடலுணவுகள், குளிரான பியர், கொக்ரெயில் (Cocktails) முதலியனவற்றுடன் வழங்கப்படும்.

உங்கள் தொழில் சம்பந்தமான மாநாடுகள், ஒன்றுகூடல்கள், விருந்து உபசாரங்கள், திருமணப்பதிவுகள், பூப்புப்புனித நீராட்டு வைபவங்கள் யாவற்றையும் சிறப்புடன் நடத்த நீங்கள் நாடவேண்டிய இடம்:

**பிள்ளையார் இன்/காடின் றெஸ்ரோறண்ட்**
**(Pilliayar inn Garden Restaurant).**

விசேட வைபவங்களுக்கு நீங்கள் விரும்பிய இடங்களில் வந்து உணவு பரிமாறப்படும். குளிரூட்டப்பட்ட அறைகள். இணைந்த குளியலறைகள் (Family Suite) விசாலமான வாகனத் தரிப்பிடம் யாவும் உண்டு.

இவை யாவுக்கும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

பிள்ளையார் இன் Stores,
31. மானிப்பாய் வீதி.
யாழ்ப்பாணம்.

Tel. 021-222-5595, 021-222-2829
Fax: 021-222-5595
E.mail: Pilliayar@sltnet.lk
Website: www.Pilliayar inn.com.
(26440)(34-18-11-25)


உ
சிவமயம்
யாழ்ப்பாணம்
வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில்

## விநாயக ஷஷ்டி விரதம்

**விநாயக அடியார்களே!**

இன்று 28-12-2003 ஞாயிற்றுக்கிழமை

| | | |
|---|---|---|
| காலை 7.00 | மணிக்கு | காலைப் பூஜை |
| 7.15 | மணிக்கு | சகஸ்ரநாமார்ச்சனை |
| 9.30 | மணிக்கு | கலச சங்காபிஷேகக் கிரியைகள் ஆரம்பம் |
| 11.30 | மணிக்கு | கலச சங்காபிஷேகம் |
| 12.00 | மணிக்கு | உச்சிக்காலப் பூஜை |
| 12.30 | மணிக்கு | பஞ்சமுகார்ச்சனை |
| பிற்பகல் | | |
| 4.30 | மணிக்கு | சாயரட்சைப் பூஜை |
| 5.30 | மணிக்கு | ஸ்ரீ பஞ்சமுகவிநாயகர் உற்சவமும் கயமுகாசுரன போரும் |

**மங்கள இசை**

நல்லூர் மா.சிவசுப்பிரமணியம் குழுவினர்
காரை என்.கே.வீராச்சாமி குழுவினர்
இணுவில் ஆர்.கேதீஸ்வரன் குழுவினர்
கோண்டாவில் பஞ்சமூர்த்தி குழுவினர்
இணுவில் மாக்கையா குழுவினர்
செல்வநாயகம் குழுவினர்

**அடியார்கள் வருக! திருவருள் பெறுக!!**

*தேவஸ்தானம்,* தர்மபரிபாலன சபை.
*யாழ்ப்பாணம்.* (C/31981)(34-18-16)

உபயம்: அற்புதா ரேடிங் கம்பனி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## நீங்கா நினைவில் ஓராண்டு

தோற்றம் 16 - 11 - 1928
மறைவு 08 - 01 - 2003



அமரர்
## இராமலிங்கம் இராசபட்சம்

திதி: ஷஷ்டி

என் கடன்பணி செய்து கிடப்பதே என்ற உயர்வாக்கையே உயிர் வாழ்க்கையாய் கொண்டு, கடமையே கண்ணெனப் போற்றி வாழ்ந்து வழி காட்டிய உத்தமசீலரே! உயர்ச்சியின் உறுதுணையே! அன்பின் சிகரமே! நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவுகள் நிறைந்திருக்கும்.

பறாளாய் வீதி,
தலைச்சாட்டி, சுழிபுரம். (26438)(34-18-26-25)

மனைவி. மகன்.
மருமகள். பேரப்பிள்ளைகள்.
உற்றார். உறவினர்.

## இன்றைய நிகழ்வுகள்

அராலி சரஸ்வதி சனசமூக நிலையத்தின் பாலர் பாடசாலை நடத்தும் கலைவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை பி.ப. ஒரு மணிக்கு அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர் க. விஜயவேல் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக வலி.மேற்கு பிரதேச செயலர் சி.ஏ.மோகன்ராஸும், கௌரவ விருந்தினராக யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறைப் பேராசிரியர் கா.குகபாலனும் கலந்து கொள்வர். (எ-161)

★ ★ ★

சாவகச்சேரி பாரதி பாலர் கழகத்தின் 40ஆவது ஆண்டுவிழா இன்று பி.ப. 2.30 மணிக்கு நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலய மண்டபத்தில் சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் வ. கயிலேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சமூகமருத்துவத்துறை வாழ்நாள் பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி) கலந்து கொள்வார்.

சிறப்புவிருந்தினர்களாக மானிப்பாய் இந்துமகளிர் கல்லூரி அதிபர் திருமதி வி.பசுபதிப்பிள்ளை, தென்மராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.பாக்கியராசா ஆகியோர் கலந்துகொள்வர். நிகழ்வில் பாலர் கழக சிறார்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (எ-31)

★ ★ ★

கந்தர்மடம், ஆத்திசூடி வீதி கலைமகள் சனசமூக நிலையத்தின் பொன விழாவும், நூலகத்திறப்பு விழாவும் இன்று மாலை 5 மணிக்கு, எஸ்.நவரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்றுறை துணைப் பொறுப்பாளர் செம்மணனும், சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி கே.ரட்ணராஜாவும் யாழ்.நல்லூர்க் கோட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரனும் கலந்துகொள்வர். (எ-10-86)

★ ★ ★

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு வழங்கிவரும் திரைப்படக் காட்சித் தொடரில் கிரீஸ் காசரவல்லியின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட "கிரவுர்ய" (கதைசொல்லியின் கதை) என்ற கன்னடத் திரைப்படம் ஆங்கிலத் துணைத் தலைப்புக்களுடன் இன்று காலை 10 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது. இந்தப் படக் காட்சியின் பின்னர் எழுத்தாளர் அ.ஜேசுராசா, மற்றும் க.சட்டநாதன் ஆகியோரின் நெறிப்படுத்தலின்கீழ் கலந்துரையாடலும் இடம்பெறும். ஆர்வலர்கள் இதில் கலந்துகொண்டு பயன்பெறலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## டிப்ளோமா பரீட்சை

தென்மராட்சி,டிசெ.28

வடக்கு-கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் இந்தவருடம் பிரதேச ரீதியாக நடத்தப்பட்ட பயிற்சிநெறியில் பங்குகொண்ட மாணவிகளுக்கான டிப்ளோமா பரீட்சை நாளை திங்கட்கிழமை முதல் இரு தினங்கள் அந்தந்த பிரதேச நிலையங்களில் நடத்தப்படவுள்ளதாக மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களம சகல பிரதேசசெயலகங்களுக்கும் அறிவித்துள்ளது. (எ-117)


## தேவை

ஓவியம், பிளாஸ்ரிக் வேலைகள் பயில ஆர்வமுள்ளவர்கள் தேவை. உணவும் தங்குமிடமும் இலவசம். மாதாந்த ஊக்குவிப்புப் பணமாக 4000 ரூபா வழங்கப்படும்.

இன்று (28.12.2003) ஞாயிறு காலை 9.00 மணிமுதல் நேரில் சமுகமளிக்கவும்.

"யசோ"
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (26449)



## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள டீசல். 504 பேஜோ கார் 64--- சகல ஆவணங்களுடனும் விற்பனைக்குண்டு. வான் ஓட்டோவிற்கு மாற்றியும் கொடுக்க முடியும்.

தொடர்பு:
**வரதன் லேனேர்ஸ்,**
(நவீன சந்தை மேல்மாடி)
சாவகச்சேரி.
T.P.:0777-110868
(மாலை 5 மணிக்குப்பின்)
(26439)


## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 11 - 02 - 1971
மறைவு 27 - 12 - 2003



**அமரர் மரியாம்பிள்ளை டெக்காமிற் அமல்ராஜ் (நிக்சன்)**

*இதயத்தால் அழுகின்றோம், நிக்சனே! உன் இனிய முகத்தைக் காணாமல்! ஏன் தான் பிரிந்தீர் எமைவிட்டு?*
*எப்படித்தான் மனம் வந்தது? கண்ணீர் விட்டு நாம் கதறியே துடிக்கின்றோம், கல கலப்பான பேச்சு இன்னும் எம் காதுகளில் கணீரென்று கேட்கிறதே!*
*ஏன் செய்வோம்?*

அன்னாரின் பிரிவால் வருந்தும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர்,
சிறீ நதியா நகை மாளிகை,
இல. 01, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(26450) (14-16-17)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 01 - 11 - 1937
உதிர்வு 28 - 11 - 2003



**அமரர் சரவணை சுப்பிரமணியம்**

அன்னாரின் மறைவுச்செய்தி அறிந்து நேரிலும், தபாலிலும், தொலைபேசியிலும் ஆறுதல் பகிர்ந்த அன்புள்ளங்களுக்கும் குடும்பத்துடன் இணைந்து உறுதுணையாக நின்று உதவி புரிந்தோருக்கும் கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் இன்று (28.12.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகலில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- மருமக்கள்,
பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*நிரந்தர முகவரி:* *தற்காலிக முகவரி:*
*புதுத்தோட்டம்.* *பொற்பதி வீதி,*
*தெல்லிப்பழை.* *கொக்குவில்.*
(26447) (14-16-17)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுப்பையா அருபவதி

நாரந்தனை, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பையா அருபவதி அவர்கள் நேற்று (27.12.2003) சனிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஓய்வுபெற்ற லிகிதர் சுப்பையா(கிளாக்கர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பசுபதிப்பிள்ளை-பொன்னாச்சி தம்பதிகளின் ஏகபுத்திரியும் காலஞ்சென்ற இராமலிங்கம் - முத்தம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் சிவப்பிரமாணந்தன், Dr.இரட்னேஸ்வரன், திருமதிகள் சதா - கந்தப்பா (ஓய்வுபெற்ற சமூகசேவை உத்தியோகத்தர்), சரோஜா - தேசோமயானந்தன், தயாநிதி - நடராஜா ஆகியோரின் அன்புத் தாயாரும் இராசேஸ்வரி, Dr.நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை, கோபாலபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் சோமசுந்தரம், காலஞ்சென்ற பொன்னையா துரைசுவாமி (ஓய்வுபெற்ற புகையிரத அதிபர்), கனகரட்ணம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (28-12-2003) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நாரந்தனை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*நாரந்தனை கிழக்கு.* இ.துரைசுவாமி.
*ஊர்காவற்றுறை.* (26428)(35-18-26-25) (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்)

### சரவண தம்பிப்பிள்ளை

சின்னாலங்கண்டு, அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவண தம்பிப்பிள்ளை நேற்று (27.12.2003) சனிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவண - சின்னப்பிள்ளை (சுச்சம்மா) தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, ராசம்மா, அன்னம்மா மற்றும் இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தவராசா (இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்), அழகராசா (பிரதேச செயலகம், நல்லூர்), புஸ்பராணி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் அழகேந்திரம் (பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), புஸ்பமலர், மல்லிகாதேவி ஆகியோரின் மாமனாரும் சயேந்திரன் (நோர்வே), கஜேந்திரன், சுரேந்திரன், சுரேஸ்குமார், துசியந்தினி, நிஷாந்தினி, அகிலா, சர்மிளா, டெனிஷா (நோர்வே) ஆகியோரின் பேரனும் அபிஷினின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2003) ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.00மணியளவில் இல.22, மலர்மகள் வீதி, அரியாலையில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*இல.22, மலர்மகள் வீதி,*
*அரியாலை.* (26443) (26-18-15) தவராசா *(மகன்)*

# குடாநாட்டில் நேற்று நான்காவது நாளாக எய்ட்ஸ் விழிப்புணர்வுப் பிரசாரங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.28

தமிழீழ சுகாதாரச் சேவைப் பிரிவினரும் தமிழீழ அரசியல்துறையினரும இணைந்து குடாநாட்டில் மேற்கொண்டு வரும் எய்ட்ஸ் விழிப்புணர்வுப் பிரசார நடவடிக்கைகள் நான்காவது நாளாக நேற்றும் முழு வீச்சில் இடம்பெற்றன.

கோப்பாய்ப் பிரதேசத்திலுள்ள சனசமூக நிலையங்களிலும், விளையாட்டுக் கழகங்களிலும் பரப்புரைக் கூட்டங்கள் இடம்பெற்றன. இப்பகுதிகளிலுள்ள வீடுகளுக்கு நேரில் சென்ற தொண்டர்கள் மக்களுக்கு எய்ட்ஸ் நோய் பற்றி விளக்கினர்.

சங்கானைப் பகுதியில் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்திலும் சனசமூக நிலையங்களிலும் நடைபெற்ற விழிப்புணர்வுக் கூட்டங்களில் தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி மற்றும் மருத்துவப் பிரிவைச் சேர்ந்த இசைநிலா ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

தெல்லிப்பழை பிரதேசத்திலுள்ள மல்லாகம் பத்தி வீடுகளிலும், கோணப்புலம் இடம்பெயர்ந்தோர் முகாம், மல்லாகம் வணிகர் மன்றம் மற்றும் தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம் ஆகியவற்றிலும் பரப்புரைகள் இடம்பெற்றன. மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, வைத்திய கலாநிதி ருக்குமணிராஜா ஆகியோர் எய்ட்ஸ் விளக்கங்களை வழங்கினர்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் பண்டத்தரிப்பு ப. நோ.கூ.ச. உறுப்பினர்கள், ஆழங்குழாய் கிராம தாய்-சேய நல஁ இல்லத்திலும் பரப்புரைகள் நடத்தப்பட்டதுடன், தாய்-சேய் நல இல்லத்தில் தாய்மார்களுக்கு எய்ட்ஸ் நோயின் கொடுமை பற்றி விளக்கப்பட்டது.

உடுவில் பிரதேசத்தில் குப்பிழான் கப்பம்புலம், பாரதி சனசமூக நிலையம், சுன்னாகம் ஞானவைரவர் சனசமூக நிலையம், கலைமதி சனசமூக நிலையம் என்பவற்றிலும் எய்ட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் இடம்பெற்றன.

தீவகத்தில் துறையூர் - பெருங்குளம் மாரியம்மன் கோயில், செட்டிப்புலம், காரைநகர், அல்லைப்பிட்டி, ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளில் பல இடங்களில் பரப்புரைகள் இடம்பெற்றன.

வடமராட்சிப் பகுதியிலும் பரவலாக இந்தப் பரப்புரைகள் இடம்பெற்றன. நேற்றுக் காலை தேவரையாளி இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற வடமராட்சிப் பகுதியிலுள்ள விளையாட்டுக்கழக நிர்வாகிகளுக்கிடையிலான கருத்தரங்கிலும் எய்ட்ஸ் பற்றி பரப்புரை செய்யப்பட்டது.

எய்ட்ஸ் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கிளிநொச்சி அழகியல் கலாமன்ற அங்கத்தவர்களினால் உருவாக்கப்பட்ட எய்ட்ஸ் விழிப்புணர்வு தொடர்பான நாடகம் நாவாந்துறை றேக்கனஸ் சனசமூக நிலையம், திருநெல்வேலி மற்றும் கல்வியங்காடு ஆகிய சந்தைப் பகுதிகளில் நிகழ்த்தப்பட்டன. இதனை பெருமளவானோர் பார்வையிட்டனர்.

வலிகாமம் பகுதியிலுள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களில் வலிகாமம் கோட்ட அரசியற்துறையினரால் எய்ட்ஸ் தொடர்பான வீடியோ படக் காட்சியும் காண்பிக்கப்பட்டது.

பிரசார நடவடிக்கைகளின் போது வீடு வீடாகச் சென்ற தொண்டர்கள் "எமது வாசலைத் தாண்டும் கொடிய எய்ட்ஸில் இருந்து எம்மையும் எமது சமூகத்தையும் பாதுகாப்போம்" - என்ற தலைப்பிலான எய்ட்ஸ் விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரங்களையும் வழங்கினர்.

இன்று 5ஆவது நாளாக பரப்புரைகள் தொடர்ந்தும் இடம்பெறும்.

(ம-5-86-73-170)

## சமய சந்நிதியில்

யாழ்ப்பாணம்,டிசெ.28

தெல்லிப்பழை காசி விநாயகர் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை பிள்ளையார் கதைப் பூர்த்தியை முன்னிட்டு விசேட பூசைகள், தீபாராதனை ,சங்காபிஷேகம், பெரும் கதைப்படிப்பு, திரு வீதியுலா என்பன இடம்பெறும். (எ)


## விசேட சலுகை

வெளிநாட்டு அழைப்புகளுக்கு

ஒரு நிமிடம் 5/= மட்டும்

இச் சலுகை 28.12.2003 முதல் 01.01.2004 வரையும்

லஷ்சன் கொமினிக்கேசன்

இல.60, ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

(26446) (30-14-16) T.P.: 222 3331


## துயர் பகிர்கின்றோம்

இணுவில் சமுர்த்தி வங்கியின் முகாமையாளராக
கடமையாற்றும் திருமதி ஆனந்தகௌரி ஜெயக்குமார்
அவர்களின் அன்புத் தந்தையார்

### பரமு சுப்பையாபிள்ளை

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தவர்களின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு,
எமது ஆழ்ந்த அனுதாபங்களையும்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

*பிரதேச செயலகம்,*
*வலிதெற்கு,*
*உடுவில்.* (C-32401) (17-16)

- சமுர்த்தி அபிவிருத்தி
உத்தியோகத்தர்கள்.

## 31ஆம் நாள் நினைவுப் பூக்கள்

தோற்றம்
20.01.1929

மறைவு
26.11.2003

ஆனைப்பந்தி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும்
பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

### திருமதி நடராஜா அன்னபூரணம்

அவர்கள்

சூழும் சோகம் எம்மில் ஆறுமோ - உங்களைக்
காணும் காலமும் இங்கு வருமோ
மாளும் உடல் உயிர் பெறுமோ - எமக்கு
யாரும் ஆறுதல் இங்கு தருமோ மௌனமாகிப்
போகலாம் அம்மாவின் அசைவுகள் - ஆனால்
மரணமாகப் போவதில்லை அவரின்
நினைவுகள்.

தகவல்:- (மகன்)
பவளராஜா (பிரான்ஸ்)

T.P.: 0148656112 (26454) (14-16)


## லஷ்சுமி சினிமா
இணுவில்

(C31985)(32)

சிம்ரன் மற்றும் புதுமுகங்கள்
நடித்த

கோவில் பட்டி வீரலட்சுமி (சீலஸ்)

காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30, (பி.நே.)

## நாகம்ஸ் சுன்னாகம்

(C31620) (32)

விஜய், சிமாசன் மற்றும்
பலர் நடித்த பகவதி (சீலஸ்)

தினசரி காட்சி : 11.00, 2.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 7.மணி
திங்கள் முதல்

எனக்கு 20
உனக்கு 18

## லிபேட்டி அச்சுவேலி



(C31621)(32)

விஜய்,
ஜோதிகா,
நடித்த

திருமலை (சீலஸ்)

காட்சிநேரம்: 10.30, 2.00, 6.30. (பி.நே.)

## நிறைஞ்சனாஸ்
சங்கானை

(C-32175) (32)

MGR நினைவு தினத்தை முன்னிட்டு
விசேட காட்சியாகக் காண்பிக்கப்படுகின்றது.
M.G.R இருவேடம், ஜெயலலிதா நடித்த

குடியிருந்த கோயில் (சீலஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி சனி ஞாயிறு
JOHNNY ENGLISH
இரவு 8.45 இற்கு (பி.நே.)

## ராஜா யாழ்ப்பாணம்

இன்று முதல்
சேரன், ரதி, மணிவண்ணன்
நடித்த

சொல்ல மறந்த கதை

(சிறந்த குடும்பச் சித்திரம்) (சீலஸ்)

காட்சிகள்:
10.30,2.30,6.30,9.30 (பி.நே.)




கலாபூஷணம் திரு. க.ப. சின்னராசா அவர்களின் மாணவன்

## கலாவித்தகர் செல்வன் துரைசிங்கம் சுபேஷ்

(யாழ். பல்கலைக்கழக இசைத்துறை மாணவன்) அவர்களின்

## மிருதங்க அரங்கேற்றம்



இடம் : மானிப்பாய் பிரதேச சபை
கலாமண்டபம்

காலம் : இன்று (28.12.2003)
ஞாயிற்றுக்கிழமை மு.ப.9.30

தலைவர் : செஞ்சொற் செல்வர் -
திரு.ஆறு.திருமுருகன் அவர்கள்

### அணிசெய் கலைஞர்கள்

பாட்டு : யாழ். கலைஞானசெம்மல்
திரு.தவநாதன் றொபேட் (இசைமாணி)
(யாழ். பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர்)
வயலின் : இணுவையூர் இசைஞானதிலகம் திரு.உ.இராதாகிருஷ்ணன்
மிருதங்கம் : கலாவித்தகர் து.சுபேஷ்
கஞ்சிரா : கலாவித்தகர் செல்வன் கிருபா அனந்தகோபன்
கடம் : கலாவித்தகர் திரு. க.கஜன் (இசைமாணி)
(விரிவுரையாளர், இசைத்துறை யாழ். பல்கலைக்கழகம்)
முகர்சிங் : இசைஞான கலாபமணி திரு.எஸ். இராசா

(26440)(35-14-16)

## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு
11
02
1971



இறப்பு
27
12
2003

### அமரர் மரியாம்பிள்ளை டெக்காமிற் அமல்ராஜ் (நிக்சன்)

அவர்கள் இயற்கை எய்தியதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆன்மா ஆண்டவன் திருவடியில் அமைதியடைய வேண்டுகின்றோம்.

அன்னார் 1997இல் எமது சங்கத்தில் இணைந்து எங்கள் செயற்பாடுகளுக்குப் பக்க பலமாக இருந்து செயலாற்றி எல்லோரினதும் அன்புக்கும் பாசத்திற்கும் உரியவராகத் திகழ்ந்த இவர், அமரத்துவமடைவார் என யாரும் சற்றும் எதிர்பார்க்கவில்லை. சுகவனங் காரணமாக கொழும்பில் சிகிச்சை பெற்றுவந்த இவர், திடீரென இறைவனடி சேர்ந்தமை பேரிழப்பாகும். அவரது மறைவு கவலைக்குரியது. எனினும், அவரது செயல்கள், நினைவுகள் இன்னும் எமது கண்ணின் முன்னே நிழலாடுகின்றன.

*பாசப்பிணைப்பால் பிணைக்கப்பட்ட எமக்கு*
*பாச ஒளியேற்றும் இறைவனுடன் நிம்மதி கொண்ட உத்தமரே!*
*நீவிர் செய்த பணிகளையும் காட்டிய அன்பையும்*
*நாம் நினைத்து உள்ளத்தால் பகிர்கின்றோம்.*

துயர் பகிர்ந்து வேதனையுறும்:
குருநகர் ஐக்கிய கடலுணவு ஏற்றுமதியாளர் சங்க
நிர்வாக உறுப்பினர்கள்.

(26448) (17-16)

## கண்ணீர் அஞ்சலி

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் உதவித் திட்டமிடல்
பணிப்பாளராகக் கடமையாற்றிய
**கி.குணாளசிங்கம்** அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி கிருஷ்ணபிள்ளை தங்கரத்தினம்

அவர்கள் 25.12.2003 வியாழக்கிழமை காலமாகிவிட்டார். அன்னாரது பிரிவால் வருந்தும் குடும்பத்தினரின் துயரத்தில் நாமும் பங்குகொள்வதுடன் அமரரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

- பச்சிலைப்பள்ளி பிரதேச செயலரும்,
உத்தியோகத்தர்களும், கிராம உத்தியோகத்தர்களும்.

(26442) (30-14-16)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றும்
**திரு.ந.கந்தவனச்செல்வன்** அவர்களின் அன்புச் சகோதரி

### அமரர் கலைச்செல்வி நடராசா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில் இந்துக்கல்லூரி.

(26437)(34-14-16) ஆசிரியர் கழகம்.

## கண்ணீருடன்...

யாழ் திருமறைக் கலாமன்ற முன்னாள் அங்கத்தவரும், நோர்வே திருமறைக் கலாமன்ற அங்கத்தவர்கள் மூவரின் அன்புத் தந்தையுமான

### செபஸ்தியாம்பிள்ளை மைக்கல்ராஜ்

அவர்கள் 26.12.2003 அன்று காலமான செய்திகேட்டு துயரடைந்துள்ளோம்.

அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவிக்கும் அதேவேளை, அவரின் பிரிவால் துயருறும் குடும்ப உறவுகளின் துயரத்தில் நாமும் பங்கேற்று எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*238, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.* (சி-31983)(14-16)

- இயக்குநர், அங்கத்தவர்கள்
திருமறைக் கலாமன்றம்.

## மரண அறிவித்தல்கள்

### பரமு சுப்பையாபிள்ளை (இரத்தினம்)

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரமு சுப்பையாபிள்ளை (இரத்தினம்) நேற்று (27.12.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமு-சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மயில்வாகனம்-பொன்னம்மாவின் மருமகனும் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும் விக்கினேஸ்வரராஜா, மகேஸ்வரன் (கனடா), காலஞ்சென்ற புவனேஸ்வரன் ஜெயகௌரி, ஆனந்தகௌரி (சமுர்த்தி முகாமையாளர், பிரதேச செயலகம், உடுவில்), அற்புதகௌரி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரவதனி விமலாதேவி (கனடா), சிவகுமார் (குமார் பந்தல், இணுவில்) ஜெயக்குமார், சற்குணதாஸ் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் எழிலன், கஜானன் (யாழ். பரியோவான் கல்லூரி), பார்த்தீபன, ஹரிகரன், சஜீபன், கௌசிகன் (சுவிஸ்), சந்தியா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (27.12.2003) சனிக்கிழமை நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக கொள்ளவும்.

*விவேகானந்தர் வீதி,*
*மஞ்சத்தடி தெற்கு, இணுவில்.* (26451) (14-16)

தகவல்
குடும்பத்தினர்.

கவிஞர் பண்டிதர் அல்லை

### க.வல்லிபுரம் ஆறுமுகம்

அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் தாவடியை வதிவிடமாகவும் கொண்ட பண்டிதர் க.வை.ஆறுமுகம் அவர்கள் நேற்று (27.12.2003) சனிக்கிழமை மாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (28.12.2003) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணியளவில் தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக கொள்ளவும்.

*தாவடி, கொக்குவில்.* (26453)(22-16-17)

தகவல்:
த.நடராசா

# இந்திய மீனவர் படகுகளை பாதுகாக்க நீதிபதி உத்தரவு

யாழ்ப்பாணம்,டிசெ.28

மாதகல் கடற்பரப்பிற்குள் ஊடுருவி மீன்பிடித்துக்கொண்டிருந்த சமயம் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 15 இந்திய மீனவர்களின் படகுகளையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கும்படி காங்கேசன்துறை கடற்படையினருக்கு யாழ் மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தற்சமயம் மேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ள 15 இந்திய மீனவர்களின் படகோட்டிகளின் நலன்களைக் கவனிக்க நியமிக்கப்பட்டுள்ள சட்டத்தரணி மு.திருநாவுக்கரசு தாக்கல் செய்த மனு மீதே மேற்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை கடற்கரையில் அநாதரவான நிலையில் விடப்பட்டுள்ள இந்தப் படகுகள் அழிந்து போகும் நிலையை அடைந்துள்ளன. சில படகுகள் நீரில் மூழ்கிக் கிடக்கின்றன. இந்தப் படகுகள் அழிந்தால் வழக்கின் சான்றுப் பொருள் கிடைக்காது. எனவே, படகுகள் பாதுகாக்கப்படவேண்டும் என்று அவர் தனது மனுவில் கோரியிருந்தார்.

இதையடுத்து, பிரஸ்தாப மீனவரின் படகோட்டிகளை காங்கேசன்துறைக்கு அழைத்துச்சென்று படகுகளை திருத்தி பாதுகாக்க நடவடிக்கை எடுக்கும்படி மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா, காங்கேசன்துறை கடற்படை தளபதிக்கு உத்தரவிட்டார். (ம-3)

## செஞ்சிலுவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோர்வேத் தரப்பு இது தொடர்பான நடவடிக்கையை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதுவிடயமாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளரிடம கேட்டபோது, வழமையாக இந்த விடயங்கள் எமது கவனத்துக்குக் கொண்டுவரப்படும். இம்முறை நோர்வேத் தரப்புக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. எமக்கு பிரதி அனுப்பப்பட்டுள்ளது என்று கூறினார்.

இதேசமயம், புத்தாண்டை ஒட்டி எதிர்வரும் 31 ஆம் திகதி மற்றும் முதலாம் திகதிகளில் மாலை 6.30 மணிவரை பாதை திறந்திருக்கும் என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ் அலுவலக அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இதுவரை நேர நீடிப்புத் தொடர்பாக விடுதலைப் புலிகள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்கு தெரியப்படுத்தியதும், பாதுகாப்பு அமைச்சுடன் அவர்களே பேச்சு நடத்தி இணக்கப்பாட்டுக்கு வந்து புதிய நேர விவரங்களை அறிவிப்பது வழமையான நடைமுறையாகும் (ம-3)

## பாதுகாவலர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்று விசேட வழிபாட்டில் பங்குபற்றுவர்.

நாளை திங்கட்கிழமை நீதியமைச்சின் அலுவலகத்தின் முன்பாக கறுப்புப் பட்டி அணிந்து அமைதிப் போராட்டத்தில் ஈடுபடுவார்கள். நீதியமைச்சரைச் சந்தித்து காணாமற்போன தமது பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் தொடர்பாகக் கலந்துரையாடுவர்.

மறுநாள் செவ்வாய்க்கிழமை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் தீர்ப்பை எதிர்த்து கொழும்பில் உள்ள தலைமையகத்தின் முன்னால் ஒரு நாள் மறியற்போராட்டத்தில் ஈடுபடுவர்.

எதிர்வரும் 31ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை ஜனாதிபதி மாளிகையில் சந்தித்து படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போன இளைஞர், யுவதிகள் நிலை பற்றியும் அது தொடர்பாக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடுவர். (ம-5)

## 14 அமைச்சர்கள் வெளிநாடுகளில்

அரசின் 14 அமைச்சர்களும் பெரும் எண்ணிக்கையான பிரதி அமைச்சர்களும் வெளிநாடுகளுக்குப் படை எடுத்துள்ளனர்.

நத்தார், புத்தாண்டு விடுமுறை நாள்களைப் பயன்படுத்தி அமைச்சர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர் என கொழும்பு ஊடகங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதியும் பிரதமரும் நகருக்கு வெளியே மத்திய பகுதிக்கும் சென்றுள்ளனர். (ம-3)

## ஈரான் மக்களுக்கு ஜனாதிபதி அனுதாபம்

ஈரானில் இடம்பெற்ற பூகம்பத்தில் சிக்கி உயிரிழந்தவர்களுக்காக இலங்கை ஜனாதிபதி அனுதாபச் செய்தி ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

ஈரானின் அதிபர் முஹம்மட் கதாமிக்கு அனுப்பிவைத்த அனுதாபச் செய்தியில், இலங்கை மக்களினதும் தனதும் அனுதாபத்தினை உயிர் இழந்தவர்களின் குடும்பங்களிற்கு அறிவிக்குமாறு வேண்டியுள்ளார்.

ஈரானில் இடம்பெற்ற இந்த கோர பூகம்பத்தினால் ஏற்பட்ட பேரிழப்புக் காரணமாக இலங்கை மக்களும் தாமும் ஆழ்ந்த கவலை அடைவதாகத் தெரிவித்த ஜனாதிபதி, ஈரான் இலங்கையின் சிறந்ததோர் நட்புநாடு என்றும் அதில் நினைவுகூர்ந்துள்ளார்.(ம-6)

## சாரதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரு வான்களையும் வாகனப் பரிசோதகரின் பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கைகளை நீதிமன்றில் சமர்ப்பிக்கும் படியும் அவர் உத்தரவிட்டார்.

இந்த விபத்தில் வயோதிபப் பெண் ஒருவர் மரணமானார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## பரீட்சை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ் மாவட்டத்தில் உள்ள 5 கல்விப் பணிப்பாளர்களுடன் கலந்துரையாடும் குழுவினர், வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறும் விடைத்தாள் திருத்தும் பணியை நாளை பார்வையிடுவர். (ம-118-173)

## அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டும். முக்கியமாக அவ்விடங்களில் பொலித்தீன் உற்பத்திகள் போடுவதைத் தவிர்த்து சூழலைப் பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்துக்கொள்கிறேன் - என்றுள்ளது.

இந்தச் சுற்றறிக்கை அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளின் தலைவர்கள் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

வன்னிப் பெருநிலப்பரப்பில் பொலித்தீன் பாவனையை ஒருவருடத்துக்கு முன்பே விடுதலைப் புலிகள் தடைசெய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

# உள்ளூராட்சி செயலர் 6பேருக்கு ஜனவரி முதல் இடமாற்றங்கள்

தெல்லிப்பழை, டிசெ.28

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் கீழான ஆறு உள்ளூராட்சி அமைப்புக்களின் செயலாளர்களுக்கு அடுத்த ஆண்டு ஜனவரி 15ஆம் திகதி முதல் செயற்படும்படியாக மாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில், வலி.வடக்கு பிரதேச சபையின் செயலாளர் பி.வைரமுத்து நல்லூர் பிரதேசசபைக்கும், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் செயலாளர் எஸ்.பசுபதி பருத்தித்துறை தள வைத்திய சாலைக்கும் இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அதேபோல், திருகோணமலை நகரசபை செயலாளர் எஸ்.தம்பிராஜா வல்வெட்டித்துறை நகர சபைக்கும் வல்வெட்டித்துறை நகர சபை செயலாளர் ஏ.மேரிஜோசப் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்கும், வவுனியா நகரசபைச் செயலாளர் எஸ்.எஸ்செல்வராசா சாவகச்சேரி நகரசபைக்கும், சாவகச்சேரி நகரசபை செயலாளர் எஸ். சரவணபவன் வவுனியா நகரசபைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதற்கான அறிவுறுத்தல்கள், உரிய செயலாளர்களுக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சினால் அனுப்பிவக்கப்பட்டுள்ளன. (எ-150)

## நகரில் எய்ட்ஸ் விழிப்புணர்வு பிரசாரம்

விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினரும் சுகாதார சேவையினரும் இணைந்து யாழ். குடாநாட்டில் மேற்கொண்டுவரும் எய்ட்ஸ் நோய் விழிப்புணர்வுப் பிரசாரம் யாழ்நகரப் பகுதியில் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ் நகரப் பகுதியில் பொதுமக்கள் அதிகமாகக்கூடும் இடங்களாகிய யாழ் பஸ் நிலையம், யாழ் போதனா வைத்தியசாலை மற்றும் யாழ் நகரின் முக்கிய வீதிகள் என்பனவற்றில் எயட்ஸ் நோய்க்கு எதிரான சுவரொட்டிகள் பெரியளவில் ஒட்டப்பட்டுள்ளன.

அத்துடன் வாகனங்கள், வீதியோர மின்கம்பங்கள் ஆகியவற்றில் ஒளிபெருக்கிகள் கட்டப்பட்டு அவற்றில் எய்ட்ஸ் நோய் விழிப்புணர்வு வாசகங்கள் ஒலிபரப்பப்படுகின்றன.

## அவசர..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவசர விபத்துச் சேவைப் பிரிவு, இருதய சத்திரசிகிச்சைப் பிரிவு, மகப்பேற்றுப் பிரிவில் அவசர சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றை ஆரம்பிப்பது தொடர்பான திட்டங்களை அவர் முன் வைத்தார்.

இத்திட்டங்களில் அவசர விபத்துச் சேவைப் பிரிவை ஆரம்பிப்பதன் அவசியத்தை பலரும் வலியுறுத்திப் பேசினர். அதனால், இந்தப் பிரிவை ஆரம்பிக்க கொள்கை அளவில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

மூன்று மாடிகளைக் கொண்டதால் 9 கோடி ரூபா செலவில் இந்தப் பிரிவு அமையவேண்டும் என திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குடாநாட்டில் தற்சமயம் பெருகி வரும் விபத்துக்களில் சிக்குவோருக்கு உடனடிச் சிகிச்சை வழங்க இந்தப் பிரிவு ஆரம்பிக்கப்படவேண்டும் என நீண்டகாலமாக கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது. (ம-3)

## பொதுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவடைகின்றது. ஒவ்வொரு சபைகளின் பதவிக்காலமும் முடிய அச்சபைகளுக்கு தேர்தல்களைத் தனித்தனியாக நடத்தும்போது வெற்றி வாய்ப்புக் குறைவாக இருக்கும் என்றும் -

முதலில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தினால் மாகாண சபைகளுக்கான தேர்தலைப் பின்னர் ஒரே தடவையில் நடத்தக்கூடிய வாய்ப்புக் கிட்டும் என்றும் - ஜே.வி.பி. பிரமுகர் ஒருவர் சொன்னார்.

"இதன் காரணமாக பெப்ரவரி முதல் வாரத்தில் பொதுத்தேர்தலை நடத்திப் பின் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தலாம் என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஆலோசனை கூறியுள்ளோம்" என்றும் அவர் சொன்னார்.

தமது கட்சிக்கு 40 எம்.பி. பதவிகளை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுதிசெய்யவேண்டும் என்றும் ஜே.வி.பி, பொதுமக்கள் ஐக்கிய முன்னணியிடம் வலியுறுத்தியுள்ளது.(ம-3)


விஞ்ஞானமும் தொழிநுட்பவியலும்
இலங்கையின் தலைசிறந்த ஒரே ஆசிரியர்
விஞ்ஞான நட்சத்திரம்
GRAPHS குமரன் அவர்கள்
2005-01-01முதல்
இலங்கையின் சகல பாகங்களிலும்!
ஏற்பாட்டுக்குழு S.L.T.E.I.G.(LONDON)
விளம்பர அனுசரணை: யாழ். முன்னணி கல்வி நிறுவனங்கள்.

பொதி விநியோக சேவையில் TNT யின் பண்டிகைக்கால விசேட தள்ளுபடி
20% விசேட கழிவு
பண்டிகைக்காலத்தை முன்னிட்டு
சர்வதேச கூரியர் சேவை, உள்நாட்டு கூரியர்சேவை,
சர்வதேச தபால்சேவைகளுக்கு 20%சிறப்புத்தள்ளுபடியினை (20% Special Discount) வழங்குகின்றோம்
என்பதை அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.
தொடர்புக்கு:
TNT
கூரியர் சேவை
இல.487. ஆஸ்பத்திரி வீதி,
(சிற்றி மெடிக்கல் கட்டடம்)
யாழ்ப்பாணம்.
021 - 2223771
0777 - 270452





உங்கள் அன்பை சிபாதியாக மிகவும் குறைந்த கட்டணத்தில் வெளிநாட்டில் உள்ள உங்கள் அன்புக்குரியவர்களுக்கு அனுப்பிட அரியதொரு சந்தர்ப்பம்!
இச்சலுகை 2004 ஜனவரி 15 வரை மட்டுமே!

வெளிவருகின்றது!
ஆசிரியர் சேவை பரீட்சைக்கான பொது அறிவு, பொது உளச்சார்பு மாதிரி வினா - விடை வழிகாட்டி நூல்
ஆசிரியர் : T.திருமுருகன் பொன். சத்துரு,
நியூட்டன் - ஆரியகுளம் சந்தி அருகில், யாழ்நகர்.
திகழ் பதிப்பகம் - K.K.S. வீதி, இணுவில்.

ஆசிரியர் போட்டிப் பரீட்சை
த.தவசேகர் B.Sc.
செவ்; வியாழன் 7 a.m. (S.L.T.),
கலையகம், ஆவரங்கால்

பொருளியல் A/L 2006 A/L 2006
S.வரதராஜன் B.A. (Hons)
சுண்டுக்குளியில் இயங்கிய பிரத்தியேக வகுப்பு தற்போது இரு இடங்களில்
D.C.M
பழம் றோட், கந்தர்மடம் 4 மணி (ப.நே.)
ஆரம்பம் 02.01.2004 வெள்ளி
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 8.00 மணி (ப.நே.)

மாணவன் : பொருளியலின் குறையினை நிவர்த்தி செய்ய வந்துவிட்டாரா?
நிர்வாகி : ஆம்! ஆம்!! ஆம்!!!
மாணவன் : எப்போது, எந்த நேரம்?
நிர்வாகி : ஆரம்பம் 8.1.2004 இல், Day Class 9.30-11.00 2004 - 10 மணி, 2005 - 11 மணி, 2006 - 1 மணி
திரு. K.உதயன் B.B.A. (Hons)
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்.

தரம் 5 புலமைப்பரிசில் பயிற்சி வினாத்தாள் 2004
பாடசாலைகளுக்கான வெளியீடு
தனியார் கல்வி நிறுவனங்களுக்கான வெளியீடு
தனிப்பட்டவர்களுக்கான வெளியீடு
28.12.2003 முதல் நேரடியாக/முகவர் மூலம்/தபால் மூலம் மொத்தமாகவும் தனியாகவும் பெற்றுக்கொள்ளலாம்
தொடர்புக்கு சந்தர் வெளியீடு
844,ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம் 021 222 7086





இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.12.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.